# செயலாற்றுகை அறிக்கை

# நீதி அமைச்சு

## 2017 சனவரி - செப்தெம்பர்

மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி
கொழும்பு 12

இணையத்தளம்: www.moj.gov.lk

# கௌரவ நீதி அமைச்சர் அவர்களின் செய்தி



நீதி அமைச்சின் 2017 ஆண்டின் முன்னேற்றறிக்கைக்காக எனது வாழ்த்துச் செய்தியை மிக மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறேன்.

அதிமேதகு சனாதிபதி மைத்திரீபால சிறிசேன அவர்களினதும் மாண்புமிகு பிரதமர் ரனில் விக்கிரமசிங்க அவர்களினதும் எண்ணக்கருத்துக்களின் மீது நல்லாட்சி அரசாங்கக் கொள்கைகளினூடாக தற்போது நீதிமன்றத்தின் சுயாதீனத்தை உருவாக்க முடிந்தமை மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகும். அதன்படி 2015 சனாதிபதி தேர்தல் பிரகடனங்களில் ”மைத்திரீ ஆட்சி நிலையான நாடு” கொள்கைத் தொடரின் நீதிமன்றத்தைப் பற்றிய மக்களினதும் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வாக்குறுதி நிறைவேறியுள்ளது.

நீதி அமைச்சுக்கு நியமனம் பெற்ற சிறு காலத்துக்குள் அமைச்சு மட்டத்தில் சட்டவாட்சியை உறுதிப்படுத்துவதற்குத் தேவைப்படுகின்ற வசதிகளை வழங்க முடிந்துள்ளது. அதன்படி மக்களின் பாரியதொரு குற்றச்சாட்டாக உள்ள வழக்குகளின் தாமதம் பற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அதற்காக தேவைப்படுகின்ற துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சின் செயலாளர் உட்பட அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் நீதிமன்றத் தொகுதிகளுக்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

எந்தவொரு நாட்டிலும் நீதிமன்ற முறைமை வலுவாக இருக்குமாயின் அந்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறியதாக இருக்கும். அதன்படி கடந்த காலத்தில் மக்கள் நீதிமன்றம் தொடர்பில் இருந்த நம்பிக்கை ஓரளவு குறைந்திருந்ததுடன் மீண்டும் அந்நம்பிக்கை உறுதியாகி உள்ளது.

சட்டவாட்சிக்கு மற்றும் சுயாதீனத்திற்கு ஏற்பட்ட சகல தாக்கங்களையும் நீக்கிவிட்டு நீதிமன்றத்தின் சுயாதீனத்தை மற்றும் மதிப்பை பாதுகாப்பதற்கான புதிய அரசாங்கத்தின் அர்ப்பணிப்பின் காரணமாக நீதி நிருவாகச் செயற்பாட்டின் முன்னேற்றம் காணக்கூடியதாக உள்ளதுடன், அதற்காக நீதி அமைச்சின் கீழுள்ள சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட ஆணைக்குழுத் திணைக்களம், சட்டவரைநர் திணைக்களம், அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம், உயர் நீதிமன்றப் பதிவாளர் திணைக்களம், ஆகிய நிறுவனங்களால் நிறைவேற்றப்படுகின்ற சேவைகள் அளப்பரியனதாகும். இக்கருமங்களுக்காக நீதி அமைச்சின் செயலாளர் உட்பட நிறுவனத் தலைவர்கள் மற்றும் அதன் ஊழியர்கள் வழங்குகின்ற உயரிய ஒத்துழைப்பு வரவேற்கத்தக்கதாகும். தொடர்ந்தும் அவர்களின் ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுவதுடன் இம்முன்னேற்றறிக்கையிலிருந்து புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்துக்குள் நாங்கள் கைப்பற்றிக் கொண்டுள்ள இலக்குகளைப் பற்றி சிறந்த புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்ள முடியுமென நான் நம்புகிறேன்.

2017 ஆண்டின் நீதி அமைச்சின் முன்னேற்றறிக்கையை தயார் செய்வதற்கு ஒத்துழைப்பை வழங்கிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டத்தரணி தலதா அதுகோரல

நீதி மற்றும் வெளிநாட்டு

வேலைவாய்ப்பு அமைச்சர்.

## கௌரவ பிரதி நீதி அமைச்சர் அவர்களின் செய்தி



நீதி அமைச்சின் 2017ம் ஆண்டுக்கான முன்னேற்றறிக்கைக்காக வாழ்த்துச் செய்தியொன்றை வழங்க முடிந்தமை மகிழ்சிக்குரிய ஒரு விடயமாகும். கடந்த காலப்பகுதிக்குள் நீதி நிருவாகத்தில் எமது பங்கேற்பும் மக்களினது எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்வதற்கு சட்ட மறுசீரமைப்புக்கள் மற்றும் சட்டவாட்சியை பலப்படுத்துதலினூடாக செய்யப்பட்ட பங்கேற்பு பற்றியும் நவீனமயமாகும் பல்வேறுபட்ட சன சமுதாயத்தினுள்ள நீதி அமைச்சு என்றவகையில் எமது வருங்கால செயற்பாடு பற்றியும் இதன் மூலம் புரிந்துணர்வு ஏற்படுமென நான் எதிர்பார்க்கின்றேன்.

வினைத்திறனுடனும் அர்த்தமுள்ளதாகவும் நீதி நிருவாகம் செய்யும் நோக்கத்துடன் கொள்கைகள் மற்றும் திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்தல் எமது தலையாய பொறுப்பாகும். அதன்படி 2016 ஆம் ஆண்டின் கடந்த காலப் பகுதிக்குள் நீதி அமைச்சு என்ற வகையில் மற்றும் இணைந்த நிறுவனங்கள் தனித்தும் பாரியதொரு செயற்பாடு நிறைவேற்றப்பட்டுள்ளது. விசேடமாக நீதி நிருவாகத்தின்போது செய்யப்படுகின்ற நிருவாகச் செயற்பாட்டில் ஏற்படுகின்ற தாமதங்கள் மற்றும் பிழைகளைக் குறைத்துக் கொள்வதற்காக தீவின் சகல மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படும் வகையில் பாரிய அளவிலான நிதி ஏற்பாடுகளை இடுவதுனூடாக நீதிமன்றச் சேவைகளை திறன்படுத்துவதற்கும் மக்களுக்கிடையில் நீதிமன்ற செயற்பாடு தொடர்பாக உள்ள நம்பிக்கையைப் பலப்படுத்துவதற்கும் முடிந்துள்ளது.

சட்டவரைவுகளை தயாரித்தல், அரச நிறுவனங்களுக்காக சட்ட மதியுரைகளை வழங்குதல் என்பவற்றில் கடந்த வருடத்தில் நீதி அமைச்சு விசேடித்த முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. விசேடமாக அண்மைக் காலத்தினுள் அதிகமாக சமுதாயத்தின் கவனத்திற்கு உட்பட்ட மனித வியாபாரத்திற்கு, பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களின் குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைமுறையை பலப்படுத்துவதற்கும் அது பற்றி சகல திறத்தவர்களுக்கு புரிந்துணர்வை அளிப்பதும், வழிகாட்டுதல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை கூடுதலாக செயற்படுத்த முடிந்தமையின் ஊடாக அவ்வியாபாரங்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு இரையாகும் பலியாக்கப்பட்டோருக்கு நீதியை நிறைவேற்றுவதற்கும் முடிந்துள்ளது.

நீதி அமைச்சின் முன்னேற்றத்தைப் பற்றி குறிப்பிடப்படுகின்ற இச்சந்தர்ப்பத்தில் கைப்பற்றிக் கொண்ட வெற்றிகளைப் போலவே எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்களுக்காகவும் உயிர்ப்பாக பங்கேற்பைப் பெற்றுக் கொடுக்கும் மாண்புமிகு நீதி அமைச்சர், அமைச்சின் செயலாளர் உட்பட அனைத்து அலுவலர்களுக்கும், அமைச்சின் அனைத்து பணியாட்டொகுதி உறுப்பினர்கள் நீதி அமைச்சுடன் இணைந்த அலுவலகங்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் உட்பட பணியாட்டொகுதியின் அர்ப்பணிப்பு, பங்கேற்பு விசேடமாக குறிப்பிடப்படுவதுடன் அவர்களுக்கு எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டத்தரணி சாரதீ துஷ்மந்த மித்திரபால

நீதி பிரதி அமைச்சர்.

# நீதி அமைச்சின் செயலாளர் அவர்களின் செய்தி



பொதுமக்கள் சட்டத்தை அணுகுவதற்காக சமவாய்ப்புக்களையும் வசதிகளையும் ஏற்படுத்தி நீதி நிருவாகத்தை திறன்படுத்துவதற்காக 2017 ஆண்டினுள் நீதி அமைச்சினால் பாரிய செயற்பாடுகள் பல நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரசைகளின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொண்டு சட்டவாட்சியை சமுதாயத்தினுள் உறுதிப்படுத்துவதற்காக இதுவரை பல சட்டங்களை காலத்திற்கு மற்றும் சமுதாய தேவைகளுக்கு ஏற்றவாறு திருத்தஞ் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. 2017 ஆண்டிலும் 03 சட்டங்கள் நிறைவேற்றிக் கொள்ள முடிந்தததுடன் வழக்குகளின் தாமதத்தை தவிர்த்துக் கொள்ளவதற்காக பூர்வாங்க வழக்கு விசாரணை நடவடிக்கை முறையை அறிமுகம் செய்து குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைக்கு செய்யப்பட்ட திருத்தம் மிக விசேடித்த ஒன்றாகும். அத்துடன் அழிக்க முடியாத நன்கொடை உறுதிகளை அழித்துவிடுதல் சம்பந்தமாக நீதிமன்றத் தீர்மானமொன்றின் மேல் எழுந்திருந்த சிக்கலான நிலைமையை சீராக்குவதற்கு நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட சட்டம் சமுதாயக் கூட்டுத்தாபனத்தின் பாதுகாப்புக்கு பெறுவதற்கு மற்றும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திற்கு மிக முக்கியமாகிறது என நான் நம்புகிறேன். அத்துடன் இவ்வாண்டில் பாராளுமன்றத்தில் இதுவரை நிறைவேற்றப்பட்ட 17 சட்டங்களுக்கான சட்டவரைநர் திணைக்களத்தின் பங்கேற்பு வரவேற்கத்தக்தாகும்.

அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம் சட்ட, விஞ்ஞானம் மற்றும் உணவு விஞ்ஞானம் சம்பந்தமாக பெற்றுக்கொடுக்கப்படுகின்ற நிபுணத்துவ சான்றுகள் வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துவதற்காக மிக முக்கியமாகின்றதுடன் ஆண்டில் இதுவரை 22,326 அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. சட்டமா அதிபர் திணைக்களம் குற்றவியல் வழக்குகளை விசாரணை செய்வதை துரிதப்படுத்துவதற்கு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன், இதுவரை குற்றப்பிரிவினால் முடிவுறுத்திக் கொள்ளப்பட்ட கோவைகளின் நூற்றுவீதம் 80% ஆகிய மட்டத்தை அடைந்துள்ளது. அத்துடன் பிணக்குகளைத் தீர்க்கும் மாற்றுவழிமுறையொன்றாக மத்தியஸ்த சபையும் நீதிமன்றத்திற்குச் செல்லும் வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு வினைத்திறனுடன் செயலாற்றுகிறது. அதன்படி இவ்வாண்டில் தீவு முழுவதிலும் தொழில்பட்ட மத்தியஸ்த சபைகளில் கலந்துரையாடும் பிணக்குகளின் எண்ணிக்கையில் 51% தீர்த்துவைக்க முடிந்துள்ளது.

பயனுள்ள நீதிநிருவாகத்திற்காக சிறந்த நிதிமன்றக் கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் முக்கியத்துவத்தை அறிந்து கொண்ட தற்போதைய அரசாங்கம் நீதிமன்றத் தொகுதிகள், கட்டடங்கள் மற்றும் நீதிபதி அலுவலக வாசஸ்தலங்களை நிர்மாணிப்பதற்கு மற்றும் மறுசீரமைப்புக்காக சுமார் 2,250 மில்லியன் ரூபா தொகையொன்றை 2017 ஆண்டில் ஒதுக்கியுள்ளது. அத்துடன் இவ்வாண்டினுள் கம்பளை, ருவன்வெல்ல, முல்லைத்தீவு, மாங்குளம், அநுராதபுரம், யாழ்ப்பாணம், பொலனறுவை, மதவாச்சி, கஹட்டகஸ்திகிலிய நீதிமன்றத் தொகுதிகளையும், 10 நீதிபதி அலுவலக வாசஸ்தலங்கள் உட்பட பல கருத்திட்டங்களையும் ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த முயற்சிகளின் பயனாக நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகளின் நூற்றுவீதம் இதுவரை 97% வரை உயர்ந்துள்ளது. வழக்குத் தாமதத்தை தவிர்த்துக் கொள்ள சட்டத்தை நாளதுவரையாக்கும் நோக்குடன் குற்றவியல் மற்றும் குடியியல் சட்டத்தை பொருள் அளவிலானதும் நடவடிக்கை முறை சார்ந்ததுமான திருத்தத்திற்காக பிரதம் நீதியரசர் சனாதிபதி சட்டத்தரணி பிரியசத் டெப் அவர்களினதும் உயர் நீதிமன்றத்தின் நீதிபதி சனாதிபதி சட்டத்தரணி புவனெக அலுவிஹாரே அவர்களினதும் தலைமையில் தொழில்படுகின்ற இருகுழுக்களின் மூலம் பாரியதொரு செயற்பாடு

நிறைவேற்றப்பட்டுள்ளது. குடியியல் சட்டம் சம்பந்தமாக இதுவரை பெறுமதிமிக்க பரிந்துரைகள் உள்ளடங்கிய 03 இடை அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் சட்டஅலுவல்கள் (ஊழல் எதிர்பு) மற்றும் ஊடகம் பற்றிய துறைசார் கண்காணிப்புக் குழுவினால் ஆழ்ந்த கற்கையொன்றின் பின்னர், குற்றவியல் நீதி நிருவாகத்தை துரிதப்படுத்துவதற்கு மற்றும் திறன்படுத்துவதற்கு அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்கனவே தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் செவிப்புல கற்புல பதிவு செய்தலுடனான பூரண தன்னியக்கக் கருத்திட்டத்தை அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் நீதிமன்றச் செயற்பாடு மிகத் துரிதப்படுத்தப்படும். நீதிமன்றங்களை தன்னியக்கப் படுத்துவதற்காக செய்யப்பட்ட பூர்வாங்க கற்கையை முடித்துக் கொண்டு அதன் அறிக்கை தற்போது வழங்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டம் சம்பந்தமாக அமைச்சரவையின் கொள்கை ரீதியான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் ஹங்கேரியா நிவாரணக் கடன் உதவியின் கீழ் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

தற்போது புதுக்கடையில் மிகப் பழமையான நீதிமன்றத் தொகுதி பழுதடைந்த நிலைமையில் உள்ளதால் பொதுமக்கள் உட்பட அனைவரும் பல கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளனர். ஆதலால் அதற்காக உத்தேச “நீதிமன்ற மனை” தொகுதியை நிர்மாணிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், வெகு விரைவில் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கிறேன்.

வறுமையின் காரணமாக சட்டத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ள மக்களுக்கு நீதியை அணுகுவதற்காக இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு பாரியதொரு செயற்பாட்டை நிறைவேற்றுகிறது. இவ்வாண்டினுள் தெஹியத்தகண்டிய, சியம்பலாண்டுவ, கலகெதர, பொரளை ஆகிய புதிய சட்ட உதவி நிலையங்களை ஆரம்பிக்க முடிந்ததுடன் தீவு முழுவதிலும் அமைந்துள்ள 82 சட்ட உதவி நிலையங்களுக்கு வருகை தந்த 100,298 ஆட்களுக்கு இவ்வாண்டில் அதன் சேவையை பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளது.

சட்டத்துறையினுள் பாரியதொரு முன்னேற்றத்தைக் கைப்பற்றிக்கொள்வதற்கு நீதி அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் வழிகாட்டும் மாண்புமிகு நீதி அமைச்சர் சட்டத்தரணி தலதா அதுகோரல அவர்களுக்கும் மாண்புமிகு பிரதி அமைச்சர் சட்டத்தரணி சாரதீ துஷ்மந்த மித்திரபால அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் இப்பணிகளை நிறைவேற்றுவதற்காக எனக்கு ஒத்துழைப்பை வழங்கும் நீதி அமைச்சின், மற்றும் அமைச்சை சேர்ந்த திணைக்களங்கள், நிறுவனத் தலைவர்கள் உட்பட அனைத்து பணியாட்டொகுதிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்மசிறி ஜயமான்ன

செயலாளர்,

நீதி அமைச்சு.

# உள்ளடக்கம்

**விடயம்** **பக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | நோக்கு மற்றும் செயற்பணிகள் | 06 |
| 2. | நீதி அமைச்சின் பணிகள் | 07 |
| 3. | அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் | 08 |
| 4. | அமைச்சினது பிரிவுகளின் பணிகள் | 10 |
| 5. | நீதி அமைச்சின் செயலாற்றுகை | |
| 5.1 | சட்டப்பிரிவு | 11 |
| 5.2 | தாபனப் பிரிவு | 24 |
| 5.3 | நிதிப் பிரிவு | 31 |
| 5.4 | உட்கட்டமைப்பு பிரிவு | 35 |
| 5.5 | அபிவிருத்தி பிரிவு | 40 |
| 5.6. | திட்டமிடற் பிரிவு | 42 |
| 5.7. | உள்ளக கணக்காய்வு பிரிவு | 47 |
| 6. | அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் முன்னேற்றம் | |
| 6.1 | சட்டமா அதிபர் திணைக்களம் | 48 |
| 6.2 | சட்டவரைஞர் திணைக்களம் | 50 |
| 6.3 | சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் | 55 |
| 6.4 | அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் | 57 |
| 6.5 | பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் | 59 |
| 6.6 | கடன் இணக்க சபை திணைக்களம் | 62 |
| 6.7 | மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு | 63 |
| 6.8 | தொழில் நியாயசபைகள் செயலாளர் அலுவலகம் | 66 |
| 6.9 | நீதித்துறை அல்லாத அலுவலர்களின் பயிற்சி நிலையம் | 68 |
| 6.10 | இலங்கை சர்வதேச நடுத்தீர்ப்பு மையம் | 69 |
| 7. | அமைச்சின் கீழுள்ள பொதுத்தொழில் நிறுவனங்களின் முன்னேற்றம் | |
| 7.1 | சட்ட உதவி ஆணைக்குழு | 70 |
| 7.2 | மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைச்சபை | 74 |
| 7.3 | இலங்கை நீதிபதிகள் நிறுவனம் | 75 |
| 7.4 | குற்றச்செயல்களுக்கும் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு அதிகார சபை | 78 |
| 7.5 | இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையம் (வரை) | 81 |
| 8 | நீதிமன்றங்கள் | |
| 8.1 | உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் | 83 |
| 8.2 | மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் | 85 |
| 8.3 | காதி நீதிமன்றங்களும் காதி மேன்முறையீட்டு சபையும் | 86 |
| 9 | தொடர்புடைய நிறுவனங்கள் | |
| 9.1 | இலங்கை சட்டக்கல்லூரி | 88 |

## நீதி அமைச்சு

### நோக்கு

- நீதி நிருவாகத்தின் வினைத்திறமையான நடைமுறை;
- புவியியல் ரீதியான முன்னேற்றங்களுக்கும் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்றவாறு சமுதாய தேவைகளுக்கேற்ப சட்டத்தை மறுசீரமைத்தல்.

### செயற்பணிகள்


- வினைத்திறமையும் அர்த்தமுள்ளதுமான நீதி நிருவாகத்திற்கான கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல்;
- பிரசைகளின் உரிமைகளை அங்கீகரித்தல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக சட்டத்தை மறுசீரமைத்தல்.

## 02. நீதி அமைச்சின் பணிகள்


- நீதி நிருவாகத்திற்கான பொறிமுறை தொடர்பிலான கொள்கைகளையும் திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தல்.
- குறித்த தேசிய நோக்கங்களை எய்தும் பொருட்டு தேசிய திட்டமிடல் அதிகாரிகளுடன் உடன்பட்ட கால வரையறையினுள்ளும் வரவுசெலவுத்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வளங்களை விஞ்சாதவாறும் சொல்லப்பட்ட கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்தல்.
- அரசியலமைப்பின் மூலம் வேறு ஒரு நிறுவனத்திற்கும் சாட்டப்பெறாத நீதி நிருவாகம் தொடர்பிலான அலுவல்கள்.
- சமூகத்தின் தேவையையும் சர்வதேசத்தின் போக்கினையும் கருத்திற் கெண்டு சட்ட முறைமையில் மறுசீரமைப்பை செயற்படுத்தல்.
- நீதிமன்ற முறைமைக்குள் நீதி நிருவாகத்தில் தாமதங்களைத் தடுத்தல் உட்பட ஒட்டுமொத்த நிருவாகம் தொடர்பாக எல்லா விடயங்களையும் முறையாகவும் செயற்திறனுடனும் செயற்படுத்தல்.
- அரசாங்கத்தின் சார்பாக குற்றவியல் வழக்குகளைத் தொடுத்தலும் குடியியல் சட்ட நடவடிக்கைகளும்.
- அரசாங்கத்திற்கும் எல்லா அரச திணைக்களங்களுக்கும் சட்ட ஆலோசனை வழங்கல்
- சட்ட வரைவு
- யாதேனுமொரு தவறாளி மீது விதிக்கப்பட்ட தண்டனை தொடர்பில் மன்னிப்பளித்தல், குறித்த தண்டனையை மாற்றீடு செய்தல், தணித்தல், தாமதித்தல், இடைநிறுத்தல் ஆகியன தொடர்பில் ஆலோசனை வழங்கல்.
- ஒட்டுமொத்த காதி நீதிமன்ற முறைமையின் பயனுறுதியையும் வினைத்திறனையும் மேம்படுத்தும் பொருட்டு தகுந்த வேலைத்திட்டமொன்றை வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்
- தொழில் நியாயசபைகளை நிருவகித்தலும் அது தொடர்பான ஏனைய அலுவல்களும்..
- சட்டங்களை ஆவணப்படுத்தலும் ஒருங்கிணைத்தலும் கோவைப்படுத்தலும்.
- சட்டச் சொற்றொகுதிகளை தயாரித்தல்.
- சட்ட அறிக்கைகளை வெளியிடல்.
- அமைச்சின் கீழ் வரும் திணைக்களங்கள்/ நிறுவனங்களைக் கண்காணித்தலும் இத் திணைக்களங்கள்/ நிறுவனங்களின் கீழ் வரும் ஏனைய எல்லா விடயங்களும்.
- குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான விடயங்கள்
- இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையச் சட்டம் (2000 இல. 44) தொடர்பான விடயங்கள்

## 03. நீதி அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்

### நீதி அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்



## நீதி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்



## 04. அமைச்சினது பிரிவுகளின் பணிகள்

அமைச்சின் பணிகள் பின்வரும் பிரிவுகளினூடாக அமுல்படுத்தப்படுகின்றன:

i. சட்டப்பிரிவு
ii. தாபனப்பிரிவு
iii. நிதிப் பிரிவு
iv. உட்கட்டமைப்புப்பிரிவு
v. அபிவிருத்தி பிரிவு
vi. திட்டமிடற்பிரிவு
*vii.* உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு

I. **சட்டப்பிரிவு**

நீதி நிர்வாகம் சம்பந்தப்பட்ட சர்வதேச தரக்கட்டளைகளுக்கு இசைந்ததாக தற்போது உள்ள சட்டத் திருத்தங்கள் மற்றும் புதிய சட்டங்களைத் தயார் செய்வதற்காக கொள்கை ரீதியிலான தீர்மானங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல், சட்ட அறிக்கைகளை வெளியிடுதல், மற்றும் மொழிபெயர்ப்பு, பொது மக்களின் சட்டம் பிரச்சனைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல். குற்றவியல், குடியியல் மற்றும் வர்த்தக விடயங்கள் சம்பந்தப்பட்ட, சர்வதேச பிள்ளைகள் துஷ்பிரயோகம் பற்றிய குடியியல் தொடர்பில் பரஸ்பர உதவியளித்தலுக்காக மத்திய அதிகாரியாக செயற்படுதல், சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவைத் துணைக்குழுக்களை நடாத்துதல், 1995 ம் ஆண்டில் 05 ம் இலக்க சட்டத்தின் கீழ் சிறைக்கைதிகளை மாற்றுதல், சிறைக் கைதிகளுக்கு மன்னிப்பு அளித்தல் பற்றிய விதப்புரைகளை பெற்றுக்கொடுத்தல், ஆட்கள் வியாபாரம் மற்றும் அதைச் சார்ந்த செயற்பாடுகளை தடுப்பதற்காக செயற்படுதல்.

.

II. **தாபனப்பிரிவு**

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க அலுவலர்களைத் தவிர்ந்த அமைச்சினதும் திணைக்களங்களினதும் அலுவலர்களின் தாபன அலுவல்கள்.

III. **நிதிப் பிரிவு**

அமைச்சினதும் அதன் கீழுள்ள திணைக்களங்களினதும் நிதித்திட்டமிடலும் முகாமைத்துவமும் நிதிக்கட்டுப்பாடும்

IV **உட்கட்டமைப்புப்பிரிவு**

நீதிமன்றங்கள், நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலங்கள், தொழில் நியாய சபைகள், மற்றும் அமைச்சின் ஏனைய கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் அவற்றிற்கு பகுதிகளை சேர்த்தலும் மேம்படுத்தலும்.

V **அபிவிருத்தி பிரிவு**

அபிவிருத்தி பிரிவானது நீதி அமைச்சினதும் அதன் கீழ் வரும் திணைக்களங்களினதும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மேற்கொள்கின்றது.

VI. **திட்டமிடற்பிரிவு**

அமைச்சினதும் அதன் கீழுள்ள திணைக்களங்களினதும் கருத்திட்டங்களை திட்டமிடலும் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை கண்காணித்தலும் சீரமைத்தலும்.

VII. **உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு**

அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களினதும் நீதிமன்றங்களினதும் கணக்குகளின் கணக்காய்வு.

# 05. நீதி அமைச்சின் செயலாற்றுகை

## 5.1 சட்டப்பிரிவு

**5.1.1. 2017 ஆண்டில் சனவரி 01 முதல் செப்தெம்பர் 30 ஆம் திகதி வரை நீதி அமைச்சு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றிக்கொள்ளப்பட்ட சட்டங்கள் மற்றும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு உள்ள உத்தேச சட்டமூலங்கள்**

**5.1.1.1 நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட சட்டங்கள்**

**01. 2017 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின் மீது கைமீட்டல் சட்டம்**

இச்சட்டமானது 2017 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின் மீது கைமீட்டல் சட்டம் என அழைக்கப்படுவதுடன், 2017 ஏப்பிரல் மாதம் 04 ஆம் திகதி அது பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது. கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதிகளை கைமீட்டலுக்காக கொடைபெறுநருக்கு எதிராக கொடை தருநரால் கோப்பிடப்படுகின்ற வழக்கொன்றின் போது தோதான நீதிமன்றமொன்றினால் அளிக்கப்படுகின்ற கட்டளையொன்றின் மீது மாத்திரமே முழுமையான நன்றியீனம் மீது கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதியொன்றை கைமீட்கப்பட முடிகிறது. அத்தகைய நன்கொடை உறுதியொன்று நிறைவேற்றப்பட்ட திகதி முதல் பத்து வருடக் காலத்துக்குள் மற்றும் வழக்குக் காரணி எழுந்த திகதி முதல் இரு வருட காலத்துள் சம்பந்தப்பட்ட வழக்கு கோப்பிடப்பட்டு இருந்தால் மாத்திரமே தவிர, அத்தகைய வழக்கொன்றை நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுதலாகாது.

**02. குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் (பூர்வாங்க வழக்கு விசாரணை நடவடிக்கை முறை) சட்டமூலம்**

வழக்காடும்போது அனுபவிக்க வேண்டியுள்ள பெரும் தாமதம், பொது மக்களால் நீதிமன்ற முறைமையின் மீது கட்டியெழுப்பிக் கொண்டுள்ள நம்பிக்கை தளர்ந்து விடுதல், அதன் மூலம் பொது மக்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ள மோசமான பொருளாதாரக் கஷ்டங்களைக் கவனத்திற் கொண்டு வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துவதற்காகத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து பூர்வாங்க வழக்கு விசாரணை நடவடிக்கை முறையை அறிமுகம் செய்வதற்காக குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைக்கு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

வழக்கு விசாரணைகளை துரிதமாக முடித்துக் கொள்ளவதற்கு குறித்த சில அனுமானங்களை அணுகுவதற்காக பூர்வாங்க வழக்கு விசாரணை நடவடிக்கை முறையின் மூலம் பூர்வாங்க வழக்கு விசாரணை நீதிபதிகளுக்கு செயலாற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அச் சட்டமூலம் 2017 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்கச் சட்டமாக 2017.05.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ளப்பட்டது.

**03. வாக்காளர்களைப் பதிவு செய்யும் ( விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்**

வற்புறுத்தலின் காரணமாக தமது காணிகள் மற்றும் ஆதனங்களை கைவிட வேண்டியிருந்த இடம்பெயர்ந்த குடும்பங்களின் மற்றும் ஆட்களின் வாக்குரிமையை பாதுகாத்தல் மற்றும் உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்த ஆட்களுக்கு மற்றும் அவர்களின் பிள்ளைகளுக்கு அவ்வாறு இடம்பெயர்வதற்கு முன்னர் தமது நிரந்தர வசிப்பிடங்கள் அமைந்துள்ள தேர்தல் தொகுதியில் வாக்களிப்பதற்கான தகைமைகளைப் பெறக்கூடிய நடவடிக்கைமுறையை அறிமுகம் செய்வதற்கு இச்சட்டம் தயார்

செய்யப்பட்டது. இச்சட்டமூலம் 2017 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டமாக 2017.07.04 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ளப்பட்டது.

**5.1.1.2. உத்தேச திருத்தச் சட்டமூலங்கள்**

**01. நீதித்துறைச் (திருத்தம்) சட்டமூலம் - மேல்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்துதல்.)**

நீதிமன்றங்களில் குவிந்துள்ள விசாரணைகள் நடைபெறுகின்ற வழக்குகளின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்வதற்காக மேல்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 85 வரை உயர்த்துவதற்கு இச்சட்டமூலம் 2017.08.21ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

2017.08.23ஆம் திகதி நடைபெற்ற ஊழல் எதிர்ப்பு மற்றும் ஊடகம் பற்றிய துறைசார் குழுக் கூட்டமொன்றில் மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 85 அல்ல 110 வரை உயர்த்த வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. அந்த அடிப்படையில் குழுமட்டத்திலான திருத்தமொன்று உள்ளடக்கப்பட்டது. வெகுவிரைவில் இச்சட்டமூலம் குழு மட்டத்திலான திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**02.. பிள்ளைகள் பற்றிய (நீதிமன்றப் பாதுகாப்பு) சட்டமூலம்**

இலங்கையால் சிறுவர் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் சமவாயம் வலுவாக்கப்பட்டதும் பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் சிறுவர் நீதிமன்ற முறைமையை பாதுகாத்தல் சம்பந்தமாக நிலவுகின்ற குறைபாடுகளுக்கு துரித மற்றும் நீண்ட காலப்பதிலைக் காணும் அவசியம் ஏற்பட்டது. தற்போது இது தொடர்பில் 1939 ஆம் அண்டின் 48 அம் இலக்க பிள்ளைகள் மற்றும் இளம் ஆட்கள் பற்றிய கட்டளைச் சட்டம் ஏற்புடையதாகிறது. அந்நோக்கங்களை எய்து கொள்வதற்காக அவ்விடயம் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம். மற்றும் இலங்கையின் UNICEF ஒழுங்கமைப்பு, பொலிசு, சட்ட மருத்துவ அலுவலர்கள் மற்றும் அரச சார்பற்ற ஒழங்கமைப்புக்கள் ஆகிய சேவை வழங்குநர்களுடன் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் I,II மற்றும் VI ஆம் அத்தியாயங்களை நீக்கிவிடுவதற்கும் சிறுவர் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் சமவாயத்தில் உள்ளடங்கிய தரக்கட்டளைகளை உள்ளடங்கி சர்வதேசம் ஏற்றுக்கொண்ட சட்டமூலங்களை தயார் செய்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டது. அதன்படி தொடர்ந்தும் சர்வதேச தரக்கட்டளைகளுக்கு அமைவாக நீதிமன்றச் செயற்பாட்டிற்கு உள்ளாகும் பிள்ளை சம்பந்தமாக சட்ட அலுவல்கள் நிறைவேற்ற வேண்டிய விதத்தைப் பற்றி இச்சட்டமூலத்தால் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இதன்படி சட்டவரைநரால் வரையப்பட்ட சட்டவரைவு சட்டமா அதிபரின் சட்டவாக்கத் தன்மை பற்றிய சான்றிதழுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**03. ஆட்சிரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்**

சட்டமூலம்2016 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் 2016.04.16 ஆம் திகதி நிறைவேற்றிக் கொள்ளப்பட்டதுடன், இச்சட்ட மூலத்தால் 30 வருடகாலம் முழுவதிலும் நடைபெற்ற பயங்கரவாதக் குழுக்களின் செயற்பாடுகளின் காரணமாக நீதிமன்றத்தில் காணிகள் உட்பட ஏதேனுமோர் அசைவற்ற ஆதனத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்காக தமது உரிமைகளை நடைமுறைப்படுத்திக் கொள்ள முடியாதிருந்த ஆட்கள் (அனுகூலம் குறைந்த ஆட்கள்) ஆட்சியுரிமைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளிலிருந்து விலக்கப்படுகின்றனர். (68 ஆம் அத்தியாயம்)

சட்டத்தால் அளிக்கப்பட்ட பயன்களைப் பெறுவதற்காக சட்டம் அமுல்படும் நாள் முதல் இருவருடக்காலத்துள் நீதிமன்றமொன்றில் வழக்கொன்றைக் கோப்பிட வேண்டும். சட்டத்தின் மூலம் மேவப்படுகின்ற ஆட்களின் அறியாமையினால் அல்லது வேறு சில காரணங்களினால் சட்டத்தின் பயன்களை அனுபவிப்பதற்கு சில ஆட்களுக்கு முடியாதுள்ளது.

சட்டம் செல்லுபடியாக உள்ள காலம் முடிவடைதல் சம்பந்தமாக ஆராய்ந்துப் பார்த்து மேலும் இரு (02) வருடங்களால் அதை நீடிப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்கு உட்பட்டு, வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படுகின்ற கட்டளையொன்றின் மூலம் சட்டத்தின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்புச் செய்யவதற்காக அமைச்சருக்கு தத்துவங்களை உரித்தாக்கும் ஏற்பாடுகளை உள்ளடக்குவதன் மூலம் சட்டம் திருத்தஞ் செய்யப்பட வேண்டுமெனவும் தீரமானிக்கப்பட்டது. சட்டமா அதிபரின் அவதானிப்புக்களை ஆராய்ந்து பார்த்து, சட்ட வரைநரால் வரைவு திருத்தஞ் செய்யப்பட்டுள்ளதுடன், அவ்வரைவு சட்டமா அதிபருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**04. ஆபாசமான வெளியீடுகள் சட்டமூலம்**

ஆபாசமான வெளியீடுகள் சம்பந்தப்பட்ட தற்போதைய சட்டம் பிள்ளைகள் தொடர்பில் செயல்படுவதற்காக 1995ல் திருத்தப்பட்ட 1883 வரை சட்டக்கோவையிலும், 1983ல் திருத்தப்பட்ட 1927 ஆபாசமான வெளியீடுகள் கட்டளைச் சட்டத்திலும் உள்ளடங்குகின்றன. இவ்விரு சட்டவாக்கங்களிலும் உள்ளடங்கிய சட்ட ஏற்பாடுகள் தற்காலத்தில் கவனத்திற்கொள்ளப்படுகின்ற குற்றங்களைத் தடுப்பதற்கு போதுமானதல்ல. குறிப்பாக உளதாம் சட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு குற்றங்களில் உள்ள பல்வேறுத்தன்மையை தடுத்தல் ஒருபோதும் போதுமானதொரு மட்டத்தில் செய்ய முடியாதுள்ளது. இறுதியாக சட்டமா அதிபரால் சட்டமூலத்தின் சட்டவாக்கத் தன்மை தொடர்பாக வழங்கப்படுகின்ற சான்றிதழ் எதிர்பார்க்கப்படுகிறது.

**05. நொத்தாரிசு (திருத்தம்) சட்டமூலம்**

போலியாக ஆவணங்களை எழுதி அத்தாட்சிப்படுத்தல் போலியான ஆவணங்களின் மீது காணிகளை விற்பனை செய்தல் போன்ற மோசடியான காணி கொடுக்கல் வாங்கல்கள் பெருமளவில் நடைபெறுவதன் காரணமாக அத்தகைய மோசடியான செயல்களைக் குறைப்பதற்காக மற்றும் அம்மோசடிகாரர்களை சட்டத்தின் முன் உடனே எடுத்துச் செல்வதை துரிதப்படுத்துவதற்காக நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தை திருத்தஞ் செய்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.
அதன்படி மோசடிகளைத் தடுப்பதற்காக சாதனங்களை கையொப்பமிடும் போது உயிரியல் கையொப்பங்களை பயன்படுத்திக் கொள்வதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கி தயார் செய்யப்பட்ட சட்டமூலம் மேலதிக நடவடிக்கைகளுக்காக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சட்டவாக்க விவகாரங்கள் பற்றிய அமைச்சரவைத் துணைக் குழுவினால் 2016.11.01 ஆம் திகதி அச்சட்டமூலம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், சட்டமா அதிபர் திணைக்களத்தின் அவதானிப்புக்களை உள்ளடக்கி இறுதிச் சட்டமூலம் சட்டவரைநரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் அவதானிப்புக்கள் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ள அதேவேளை, சட்டவரைநரிடம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது, அதன் பின்னர் சட்டத்தரணிகள் சங்கத்தின் அவதானிப்புக்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், அதன்படி வரைவு தயார் செய்யப்படுகிறது.

**06. முஸ்லிம் விவாக மற்றும் மணநீக்கச் (திருத்தம்) சட்டமூலம்**

மாண்புமிகு நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி சனாதிபதி சட்டத்தரணி சலீம் மார்சுக் அவர்களின் தலைமையிலான குழுவொன்றின் மூலம் முஸ்லிம் விவாக மற்றும் மணநீக்கச் சட்டத்துக்கான திருத்தங்கள் பற்றிய பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. முஸ்லிம் விவாக மற்றும் மணநீக்க சட்டத்துக்கான உத்தேச திருத்தங்கள் பற்றிய இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

### 07. அற்றோனித்தத்துவச் (திருத்தம்) சட்டமூலம்

மோசடிகளைத் தடுக்கும் நோக்கத்துடன் இக்கட்டளைச் சட்டம் திருத்தஞ் செய்யப்படுகிறது. மாண்புமிகு நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட சனாதிபதி சட்டத்தரணி நிஹால் ஜயமான்ன அவர்களின் தலைமையில் செயல்பட்ட குழுவினால் சட்டமூலம் இறுதியாக தயார் செய்யப்பட்டது. அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின்னர் சட்டவரைநரிடம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

அச்சட்ட மூலத்திற்கு சட்ட வரைநரால் சட்டமா அதிபரின் அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அது உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இச்சட்டமூலம் சம்பந்தமாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் விதப்புரைகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அதன்படி இச்சட்டமூலம் திருத்தஞ் செய்யப்பட்டுக் கொண்டிக்கிறது.

### 08. குற்றத்தடுப்பு/ (திருத்தம்) சட்டமூலம்

1926 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க குற்றத்தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் மூலம் குற்றவாளிகளை இனங்காணுதல் மற்றும் கண்காணித்தல் தொடர்பான சட்டங்களைத் திருத்தஞ் செய்வதற்கு மற்றும் ஒன்றிணைப்பதற்கு முதன்மையாகவும், குற்றமொன்றுக்காக குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் விரலடையாளங்களை வழக்கு விசாரணைக்கு முன்னர் பெற்றுக் கொள்ளவதற்காகவும் ஏற்பாடுகள் உள்ளன.

எவ்வாறாயினும் பூர்வாங்க கட்டளைச் சட்டம் விதிக்கப்பட்டதன் பின்னர் குற்றவியல் செயல்களைத் தீர்மானித்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்காக ஏற்பாடுகளைச் செய்து புதிய சட்டங்கள் பாராளுமன்றத்தால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன் அத்தகைய குற்றவியல் செயல்கள்/ குற்றங்கள் புரியப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்ற ஆட்களின் விரலடையாளங்களைப் பெற்றுக்கொள்ளல் சம்பந்தமாக உளதாம் குற்றத்தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்பாடுகளைச் செய்தல் உத்தேச திருத்தங்களின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

தவறாளர் ஒருவரின் விரலடையாளங்களைப் பெற்றுக்கொள்ளல் செய்யவேண்டிய சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துவதற்காக சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தவறுகளை உள்ளடக்குவதற்காக சட்டமூலத்தில் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அச் சட்டமூலம் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதன் பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 09. குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் (சட்டத்தரணியை அணுகுதல்)

கைது செய்யப்பட்ட ஆளொருவருக்கு சட்டத்தரணி ஒருவரின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்களுக்கு உள்ள உரிமைகளை அறிமுகப்படுதுவதற்காக குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைக்கு செய்யப்படுகின்ற உத்தேச திருத்தங்களை மீளாய்வு செய்வதற்காக மாண்புமிகு அமைச்சரால் சட்டமா அதிபரின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினால் வரைவொன்று தயார் செய்யப்பட்டது.

அதன்படி முதலில் நான்கு (04) வருட காலப்பகுதிக்காக மாத்திரமே வலுவிலுள்ளவாறு சட்டத்தை விதிப்பதற்கும், அதன் தொழிற்பாட்டைப் பற்றி செய்யப்படுகின்ற மதிப்பீடொன்றின் அடிப்படையில் சட்டத்தின் காலத்தை மேலும் நீடிப்புச் செய்வதற்கு ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இறுதி வரைபு சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 10. நம்பிக்கைப்பொறுப்புக் கட்டளைச்சட்டம்

பணம் தூய்தாக்குதல் மற்றும் பயங்கரவாதத்திற்கு பணம் வழங்கல் ஆபத்தைக் குறைத்துக் கொள்வதற்காக இச்சட்டத்தின் விடயப்பொருளை விரிவுபடுத்தி சர்வதேச தரக்

கட்டளைகளுக்கு இசைந்தவாறு திருத்தஞ் செய்யும் அவசியம் ஆசிய பஸிபிக் குழுவினால் நடாத்தப்பட்ட மதிப்பீடுகளின் மூலம் மற்றும் நிதிப்புத்திக்கூறின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேற்கூறிய விடயங்களுக்கு அமைவாக நம்பிக்கைப்பொறுப்புக் கட்டளைச் சட்டத்தை திருத்தஞ் செய்வதற்காக அங்கீகாரத்தை எதிர்பார்த்து நீதி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2016.03.30 ஆம் திகதி அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

சட்டமா அதிபரின் சான்றிதழ் கிடைக்கப்பெற்றதன் பின்னர் சட்டமூலம் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுவதற்கு மற்றும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதன்படி இச்சட்டமூலம் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுவதற்காக அரசாங்க அச்சகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**11. 2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையங்கள் சட்டம்**

2005 ஆம் ஆண்டின் 37 ஆம் சட்டத்தால் திருத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டின் 44 ம் இலக்க இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையச் சட்டத்தில் மூலம் இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையத்தை தாபித்தல் மற்றும் அதற்கு இடைநேர்விளைவான விடயங்கள் சம்பந்தமாக ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

முகாமைச் சபையின் தவிசாளரை நியமிப்பதற்கு நீதித்துறை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரத்தைப் பெற்றுக் கொடுத்து சட்டத்தை திருத்தஞ் செய்வதற்காக முன்மொழியப்பட்டது.

மேலும், சார்புடைய முகவராண்மைகளுக்கிடையிலான பலவீன கூட்டிணைப்பின் காரணமாக இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையத்தின் பணிகள் போதுமான அளவு ஒத்திசைவாக இல்லை என அவதானிக்கப்பட்டுள்ளது. இது பற்றி ஆராய்ந்து பார்க்கப்பட்டதன் பின்னர் நீதிச் செயலாளரால் அல்லது அவரால் பெயர் நியமனம் செய்யப்படுகின்ற பிரதிநிதி ஒருவர் அல்லது கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர் பிரதிநிதி ஒருவர், திறைசேரி செயலாளர் அல்லது அவரால் பெயர் நியமனம் செய்யப்படுகின்ற பிரதிநிதி ஒருவர் மற்றும் நீதி அமைச்சரால் பெயர் நியமனம் செய்யப்பட்ட மொத்த பிரதிநிதிகளின் எண்ணிக்கை இரண்டாக இருக்கும் வகையில் மேலும் மேலதிக பிரதிநிதி ஒருவரை உள்ளடக்கக் கூடியவாறு சட்டத்தின் 5 ஆம் பிரிவை திருத்தஞ் செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதன்படி, சட்டமூலத்தை அரசாங்கக் கசேற்றில் வெளியிடுவதற்காகவும், அதை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காகவும் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுவதற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**12. குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைக்குச் செய்யப்படுகின்ற திருத்தம் (118,119 ஆம் பிரிவுகள்) சத்தியப் பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களை நியமித்தல்.**

தற்போது சத்தியப் பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களை நியமித்தல் பற்றிய முறைசார் நடவடிக்கை முறையொன்று அல்லது அவர்களின் தொழில் நடத்தையைக் கண்காணிக்கும் முறைமையொன்று இல்லை, குடியியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவையின் 119 ஆம் பிரிவில் இது தொடர்பாக குறித்த சில ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ள போதிலும், அவ்வேற்பாடுகளினூடாக போதுமானளவு சிக்கலான நிலைமைகளுக்கு தீர்வு கிடைக்காது என அவதானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆராய்ந்து பார்க்கப்பட்டதன் பின்னர், குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையை திருத்தஞ் செய்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், வரைவு சட்ட வரைநரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, தற்போது நீதி அமைச்சினால் சட்டமூலம் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர் இறுதி வரைவை தயார் செய்வதற்கு சட்டவரைநரிடம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

**13. பிரிவிடல் சட்டத்துக்கான உத்தேச திருத்தங்கள்**

"பங்கு" அல்லது பங்குக்குரிய எந்தவொரு காணியையும் பிரித்தொதுக்குதல் அல்லது விற்பனை செய்வதற்காக வழக்கொன்றைத் தொடுப்பதற்கு "பரவேணி நிலகாரயா" வுக்கு உள்ள உரிமையை உள்ளடக்குவதற்காக பிரிவிடல் சட்டம் சம்பந்தப்பட்ட திருத்தமாகும். திருத்தங்களை உள்ளடக்கிய சட்டவரைபு சட்டமா அதிபரிடம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பான கலந்துரையாடல்களும் நடைபெற்றுவருகின்றன.

**14. 1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டம் (45 ஆம் பிரிவுக்கு செய்யப்படுகின்ற திருத்தம்)**

நிருவாக மாவட்டங்களுக்காக சமாதான நீதிவான்களை நியமித்தல் சம்பந்தமாக பின்வரும் விடயங்களை உள்ளடக்குவதற்கு மேலதிக திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது.

1) நியமனத்தை முடிவுறுத்திக்கொள்ளல், இரத்துச் செய்தல் மற்றும் இடைநிறுத்தல் சம்பந்தமாக ஏற்பாடுகளைச் செய்வதற்கான கட்டளைகள்;
2) ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள சமாதான நீதிவான்களை சம்பந்தப்பட்ட நிருவாக மாவட்டங்களின் கீழ் உள்ளடக்குதல்;

அதற்காக சட்டவாக்கத்தன்மைப் பற்றிய சட்டமா அதிபரின் சான்றிதழ் எதிர்பார்க்கப்படுகிறது.

**15. 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் விடயங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்திற்கு செய்யப்படுகின்ற திருத்தம்**

பணம் தூய்தாக்குதல் மற்றும் பயங்கரவாதச் செயல்களுக்குப் பணம் வழங்குதலை தடுத்தல் சம்பந்தமாக ஆசிய பஸிபிக் குழுவின் விளக்கங்கள் மற்றும் ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சமவாயம் மற்றும் கணினி குற்றங்கள் பற்றிய புடாபேஸ்ட் சமவாயத்திற்கு அமைவாதல் தொடர்பாக கவனத்தைச் செலுத்தி பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தை திருத்தஞ் செய்வதற்காக நீதி அமைச்சுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. சட்டவரைநரால் பூர்வாங்க வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் நீதி அமைச்சு அதை ஆராய்ந்து வருகின்றது.

**16. குற்றவியல் தவறொன்றின் பொறுப்பை ஏற்பதற்கான ஆகக்குறைந்த வயது**

**(அ). தண்டனை சட்டகோவைச் (திருத்தம்) சட்டமூலம்**

12 வயதுக்குக் குறைந்த பிள்ளை ஒருவரால் புரியப்படுகின்ற ஏதும் தவறல்ல என உத்தேச திருத்தத்தால் குறிப்பாகக் காட்டப்பட்டுள்ளது. மேலும் 12 வயதுக்கு மேற்பட்ட 14 வயதுக்குக் குறைந்த ஒரு பிள்ளை தொடர்பில், அப் பிள்ளையால் புரியப்பட்ட குற்றம் சம்பந்தமாக போதுமான எண்ணம் அல்லது புரிந்துணர்வைத் தாங்கிக் கொள்ளக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ள முதிர்ச்சியான மதிநுட்பம் அப்பிள்ளைக்கு உள்ளதா எனத்தீர்மானிக்கும் தற்றுணிபை நீதவானுக்கு அளிப்பதற்காக இச்சட்டத்தால் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இத்திருத்தம் 2016.10.24 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2016.11.01 ஆம் திகதி அதற்கான அமைச்சரவைத் தீர்மானம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் சான்றிதழ் கிடைக்கப் பெற்றுள்ளது.

**(ஆ). குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச் சட்டம்)**

தண்டனை சட்டக்கோவைக்குச் செய்யப்படுகின்ற மேற்குறித்த திருத்தத்திற்கு மேலதிகமாக, பிள்ளையால் புரியப்படுகின்ற குற்றம் சம்பந்தமாக அவரது நடத்தை மற்றும் அதன் விளைவை புரிந்து கொள்வதற்குப் போதுமான அளவு முதிர்ச்சியான அறிவை பிள்ளை பெற்றுள்ளாரா என்பதைப்பற்றி அவதானித்து அரச மருத்துவரின் கருத்தை பொலிசுக்கு அறிக்கையிடுவதற்கும் பிள்ளைக்கு மருத்துவ சிகிச்சை அவசியமாகிறதா என்பதைப் பற்றி தீர்மானிப்பதற்காகவும் அரச மருத்துவர் ஒருவரிடம்

பிள்ளையை கொண்டு செல்வதற்கு நீதவானுக்கு வாய்ப்பளிப்பதற்காக ஏற்பாடுகளைச் செய்வதற்கு இத்திருத்தம் அறிமுகம் செய்யப்பட்டது.

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் (திருத்தம்) சட்டத்திற்கு செய்யப்படுகின்ற திருத்த வரைவு சட்டமா அதிபரின் அவதானிப்புகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டு அந்த அவதானிப்புகள் உள்ளடங்கிய இறுதியான வரைவு அரசியலமைப்புக்கு முரணாக இல்லை என்பதற்கான சான்றிதழை பெற்றுக் கொள்வதற்காக சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**17. குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்திற்கு உத்தேச திருத்தங்கள்**

2015 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் தலையாய நோக்கொன்றாகிய குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பளிப்பதை மேலும் விஸ்தரிப்பதற்காக கிடைக்கப்பெற்ற அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் வேறொரு நாட்டில் உள்ள சாட்சிக்கு இலங்கைக்கு வருகை தராமல் சம்பந்தப்பட்ட நாட்டில் அமைந்துள்ள இந்நாட்டைச் சேர்ந்த தூதராலயத்திலிருந்து தகுந்த முறையொன்றுக்குட்பட்டு சாட்சியத்தின் சரியாந் தன்மை பாதுகாக்கப்படுவதை உறுதி செய்து சாட்சியங்களைப் பெற்றுக் கொடுக்கும் சாத்தியத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு இத்திருத்தத்தின்மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான வரைவு வரத்தமானப் பத்திரிகையில் வெளியிட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**18. கர்ப்பிணித்தன்மையை முடிவுறுத்திக் கொள்ளும் அனுமதி பெற்ற வாய்ப்புக்களை விரிவு படுத்துவதற்காக தண்டனை சட்டக்கோவைக்கு மற்றும் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைக்குச் செய்யப்படுகின்ற திருத்தங்கள்.**

இனங்காணப்பட்ட பின்வரும் குறித்த சந்தரப்பங்களில் பலியாக்கப்பட்டவரின் அல்லது பாதிக்கப்பட்டவர் இளம் வயதுடையவராக இருக்கும் சந்தரப்பமொன்றில் பாதுகாவலரின் விருப்பத்துடன் பாதுகாப்பான மற்றும் சட்டமுறையான கருச்சிதைவு செயல்களுக்கு வாய்ப்புக்களை விரிவுபடுத்தல் இத்திருத்தத்தின் நோக்கமாகிறது.

- கற்பழிப்பு மற்றும் முறையில்லாப் புணர்ச்சியினால் ஏற்படுகின்ற கர்ப்பிணித்தன்மை.
- 16 வயதுக்குக் குறைந்த ஒரு பெண் பிள்ளை கர்ப்பிணியாகுதல் (நியதிச்சட்ட கற்பழிப்பின் பலியாக்கப்பட்ட) மற்றும்
- பாராதூரமான கரும் பலவீனம் உள்ளபோது.

மேற்கூறிய திருத்தங்களுக்காக 2017.01.17 ஆம் திகதி பெறப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் நீதி அமைச்சரால் மத அலுவல்கள் பற்றிய அமைச்சர்கள் உட்பட அனைத்து மதத் தலைவர்களுடன் கலந்துரையாடலொன்றை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இது தொடர்பாக மேலும் ஆராய்ந்துப் பார்ப்பதற்காக சட்டமா அதிபரின் தலைமையிலான குழுவொன்றிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**19. தண்டனை சட்டக்கோவைக்கு செய்யப்படவுள்ள திருத்தங்கள் (மணஞ்சார் கற்பழிப்பு, ஆண்களுக்கிடையே இழிவான பாலியல் செயல்கள் (365அ) மற்றும் இனங்காணப்பட்ட விசேட சந்தர்ப்பங்களில் செய்யப்படுகின்ற கருச்சிதைவு)**

தண்டனை சட்டக்கோவை சம்பந்தப்பட்ட மேற்கூறிய திருத்தங்களை ஆராய்ந்தும் பார்ப்பதற்காக சட்டமா அதிபரின் தலைமையிலான குழுவின் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 5.1.2. இலங்கை சட்ட அறிக்கைகள்

இலங்கை சட்ட அறிக்கைகளை அச்சடிக்கும் அலுவல்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இலங்கையின் உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் பெற்றுக்கொடுக்கப்படுகின்ற முக்கியமான வழக்குத் தீர்ப்புக்கள் உள்ளடங்கிய சட்ட அறிக்கைகள் இரு தொகுதிகள் ஒவ்வொரு வருடத்திலும் அச்சடிக்கப்படுகின்றன.

### 5.1.3 சர்வதேச சமவாயங்களை அமுல்படுத்தல்

#### 5.1.3.1. சிறைச்சாலைகளில் இடநெரிசலை தவிர்த்துக் கொள்வதற்காக தாபிக்கப்பட்ட செயலாற்றுகை செயலணி

சிறைச்சாலைகளின் இடநெரிசலுக்கு காரணமாகின்ற சட்டமுறையான மற்றும் நீதித்துறை விடயங்களைக் கண்டு பிடிப்பதற்காக செயலாற்றுகை செயலணி தாபிக்கப்பட்டதுடன், அதற்காக நீதி அமைச்சின் செயலாளர் மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்பு, மீள் குடியேற்ற மற்றும் இந்து விவாகார அமைச்சின் செயலாளரின் தலைமையில் நெறிப்படுத்துவதுடன், அது தொடர்பாக நீதிச் சேவைகள் ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம், அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம், சட்டவரைநர் திணைக்களம், சமுதாய சீர்திருத்தத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், நீதிபதிகளின் பயிற்சி நிறுவனம், சட்டம் மற்றும் ஒழுங்கு பாதுகாப்பு அமைச்சு பிரதிநிதித்துவத்துடன் இச் செயலணி செயலாற்றுகிறது.

அதன்படி சிறைச்சாலைகளில் நிலவுகின்ற இடநெரிசல் மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு பற்றிய நீதிமன்ற மற்றும் சட்டக் காரணங்களைக் கண்டுபிடித்தல் பற்றிய செயலாற்றுகைச் செயலணியின் முதல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. சட்டஅலுவல்கள் (ஊழல் எதிர்ப்பு) மற்று ஊடகம் பற்றிய துறைசார் கண்காணிப்புக் குழுவின் மூலம் பின்வரும் விதப்புரைகளும் உள்ளடங்கிய அம் முதல் உள்ளடங்கிய அம் முதல் அறிக்கையின் விதப்புரைகள் ஆராயப்படுகின்றன.

- 1999 ஆம் ஆண்டின் சமுதாயஞ்சார் சீர்திருத்தச் சட்டத்தை பயனுள்ளதாக வலுப்படுத்துவதற்கு நீதிச்சேவைகள் ஆணைக்குழவின் மற்றும் இலங்கை நீதிபதிகளின் பயிற்சி நிறுவனத்தின் உதவியுடன் சமுதாய சீர்திருத்த திணைக்களம் மற்றும் நீதவான்களுக்கிடையே கலந்துரையாடலொன்றை நடாத்துதல்.
- தண்டப்பணம் செலுத்த முடியாத ஆட்கள் தொடர்பில் பல்வேறு அளவுகளில் தண்டம் செலுத்துவதற்கு வாய்ப்பளித்தலை பயனுள்ளதாக வலுப்படுத்துவதற்காகவும் மேற்குறித்த நிறுவனங்களுடன் இணைந்து பேச்சுவார்த்தைகளை நடாத்துதல்.
- 1991 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க விளக்கமறியற் படுத்தப்பட்ட சிறைக்கைதிகளை விடுவித்தல் பற்றிய சட்டத்தின் ஏற்பாடுகளின் படி மாதத்திற்கு ஒருமுறை சிறைச்சாலைக்குச் நீதவானின் வருகையை உறுதிப்படுத்தல் மற்றும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் கண்காணிப்புச் செய்தல்.
- சிறைச்சாலைக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்ற சிறைக்கைதிகளின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்வதற்காக பொலிஸ் பிணை பெற்றுக்கொடுத்தல் சம்பந்தமாக பிணைச் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பற்றி இலங்கை பொலிசுக்கு புரிந்துணர்வை அளித்தல்.

#### 5.1.3.2. மரண தண்டனையை ஆயுள் வரை சிறைத் தண்டனையாக தளர்த்தவதற்கான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கு நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழு

2013.09.26 ஆம் திகதியின் போது அனைத்து வழக்குகள் மற்றும் மேன்முறையீடுகள் முடிவடைந்து மரணதண்டனை வழங்கப்பட்டுள்ள சிறைக் கைதிகள் தொடர்பில் ஆராய்ந்துப் பார்த்த அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக ஆக்குதல் இக்குழுவின் மூலம் செய்யப்படுகிறது.

அதிமேதகு சனாதிபதியிடம் அரசியலமைப்பின் 34 ஆம் உறுப்புரையின் மூலம் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் மீது மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த சிறைக்கைதிகளுக்கு பின்வருமாறு 04 முறைகளில் உயர் மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

| **திகதி** | **சிறைக்கைதிகள்** |
|---|---|
| 2015.02.11 | 34 |
| 2016.04.20 | 83 |
| 2016.05.20 | 70 |
| 2017.02.04 | 60 |
| **மொத்தம்** | **247** |

மரண தண்டனை, ஆயுள் தண்டனை மற்றும் நீண்டகால சிறைத்தண்டனை அனுபவிக்கும் சிறைக் கைதிகளின் தண்டனைகளைத் தளர்த்துவதற்காக விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கு முன்னாள் நீதி அமைச்சரால் 2017 ஆண்டில் நியமிக்கப்பட்ட குழுவுக்காக 2017.02.08ம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. அதன்படி குழுவினால் தற்போது நீண்டகால சிறைக்கைதிகள் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

### 5.1.3.3. 2001 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சர்வதேச பிள்ளை கடத்தல் பற்றிய குடியியல் துறைகள் சம்பந்தப்பட்ட சமவாயச்சட்டம்

2001 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சர்வதேச பிள்ளை கடத்தல் பற்றிய குடியியல் துறைகள் சம்பந்தப்பட்ட சமவாயச்சட்டம் தொடர்பில் 52 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ள சில விண்ணப்பங்கள் சம்பந்தமாக வழக்குத் தொடுத்தலின்றி தீர்க்கப்பட்டுள்ளன. தற்போது மேல் நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தில் இது சம்பந்தப்பட்ட 2 வழக்குகள் விசாரணையில் உள்ளன.

### 5.1.3.4. தவறாளர்களை பரிமாறிக் கொள்ளல்

1995 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இலங்கையினுள், தவறொன்றைப் புரிந்த வேறொரு நாட்டின் பிரசை ஒருவரை அந்நாட்டிற்கு ஒப்படைப்பதற்காக மற்றும் வேறொரு நாட்டில் தவறொன்றைப் புரிகின்ற இலங்கைப் பிரசை ஒருவரை இந்நாட்டிற்கு ஒப்படைத்தல் சம்பந்தமாக ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ஐக்கிய இராச்சியத்தில் தவறாளர்களாகிய மூன்று இலங்கையர்கள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தமது தண்டனைக் காலத்தைக் கழிப்பதற்கு இலங்கைக்கு ஒப்படைக்கப்பட்டனர்.

இந்திய அரசாங்கத்தால் செய்யப்பட்ட கோரிக்கைளின் மீது இலங்கையில் தவறாளர்களாகிய இந்திய இன மூன்று சிறைக்கைதிகள் இந்தியாவில் மிகுதி தண்டனைக் காலத்தை கழிப்பதற்கு இந்திய அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டனர்.

குவைட் இராச்சியத்தில இருக்கும் இலங்கை சிறை கைதிகளில் 151 பேர்கள் இலங்கையில் அவர்களின் மிகுதி சிறைத் தண்டனையைக் கழிப்பதற்கு விருப்பத்தை தெரிவித்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சினூடாக தமது கோரிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளதுடன் அது சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் இலங்கை மற்றும் ஈரானுக்கிடையே தவறாளர்களைப் பரிமாற்றிக் கொள்ளும் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது.

இலங்கை மற்றும் தாய்லாந்து அரசாங்கக்களுக்கிடையே சிறைக் கைதிகளைப் பரிமாறிக் கொள்ளும் உடன்படிக்கையை வரைவதற்காக 2017 செப்தெம்பர் மாதம் பேச்சுவார்த்தையொன்று இலங்கையில் நடாத்தப்பட்டதுடன், அவ்வுடன்படிக்கையை கைச்சாத்திடுதல் மற்றும் வலுவாக்குவதற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 5.1.3.5. குற்றவியல் விடயங்களில் பரஸ்பர உதவியளித்தல் சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகள்

குற்றவியல் விடயங்களில் பரஸ்பர உதவியளித்தல் பற்றிய ஏற்பாடுகளை வலுப்படுத்தும் நோக்குடன் சீனா, ஐக்கிய அரபு இராச்சியம், இந்தியா, தாய்லாந்து, பெலாரூஸ்,

பாகிஸ்தான் மற்றும் ருஷ்யா உள்ளிட்ட நாடுகளுடன் இலங்கை உடன்படிக்கைகளின் மூலம் குற்றவியல் விடயங்களில் உதவியளித்தல் தொடர்பாக அரசாங்கங்களினால் புலனாய்வுகளைச் செய்தல் முறைப்பாடுகளை கோவைப்படுத்தல், வழக்குகளை விசாரணை செய்தல் மற்றும் சட்ட நடவடிக்கைகளின் பெறுபெறுகளை செயற்படுத்தல் ஆகிய விடயங்கள் காட்டப்பட்டுள்ளன.

அத்துடன், இலங்கை 2016.06.25 ஆம் திகதி யுகரேனுடன் குற்றவியல் விடயங்கள் சம்பந்தமாக பரஸ்பர உதவியளித்தல் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. யுக்ரேனுடன் கைச்சாத்திடப்பட்ட அவ்வுடன்படிக்கை 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சட்டத்தின் 2 ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட 1992/78 ஆம் இலக்க 2016.11.11 ஆம் திகதிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது.

பரஸ்பர சட்ட உதவியளித்தல் தொடர்பாக இலங்கை மற்றும் சுவிட்சர்லாந்துக்கிடையே குற்றவியல் விடயங்கள் சம்பந்தமாக பரஸ்பர உதவியளித்தல் உடன்படிக்கை பற்றிய பேச்சுவார்த்தைகள் நிறைவு பெற்றுள்ளதுடன், உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுள்ளன.

### 5.1.3.6. வெளிநாடுகளில் உள்ள எதிராளிகளுக்கு/ சாட்சிகளுக்கு இலங்கை நீதிமன்றங்களால் வழங்கப்படுகின்ற அழைப்புக் கட்டளைகள் சம்பந்தப்பட்ட விடயங்கள்

2000 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க குடியியல் மற்றும் வர்த்தக விடயங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின்படி, 2017 சனரி 01 முதல் செப்தெம்பர் 30 வரையிலான காலப்பகுதிக்குள் இலங்கை நீதிமன்றங்களிலிருந்து வழங்கப்பட்ட 337 அழைப்புக்கட்டளைகள் பின்வருமாறு வெளிநாட்டலுவல்கள் அமைச்சினூடாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

| நாடு | வழங்கப்பட்ட அழைப்புக் கட்டளைகள் | நாடு | வழங்கப்பட்ட அழைப்புக் கட்டளைகள் |
|---|---|---|---|
| ஆப்கனிஸ்தான் | 01 | யுக்ரேன் | 01 |
| தென்ஆபிரிக்கா | 01 | ஸ்கொட்லாந் | 01 |
| அவுஸ்திரேலியா | 14 | மலேசியா | 07 |
| பஹரேன் | 03 | ரஷ்யா | 02 |
| பங்களாதேஷ் | 01 | சீஷெல்ஸ் | 01 |
| கனடா | 21 | சிங்கப்பூர் | 04 |
| சீனா | 12 | நெதர்லாந்து | 05 |
| சைப்பிரஸ் | 04 | நியூசீலாந்து | 03 |
| டென்மார்க் | 01 | நோர்வே | 03 |
| தொஹா கட்டார் | 11 | ஓமான் | 01 |
| தாய்லாந்து | 02 | பாகிஸ்தான் | 02 |
| பிரான்சு | 14 | சுவிட்சர்லாந்து | 09 |
| ஜேர்மன் | 05 | ஐக்கியஅரபு ஏமிர்இராச்சியம் | 35 |
| இந்தியா | 20 | ஐக்கிய இராச்சியம் | 42 |
| செக்கொஸ்லோ வெக்கியா | 01 | அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 08 |
| அயர்லாந்து | 02 | அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 08 |
| இஸ்ராயேல் | 03 | கொரியா | 11 |
| இத்தாலி | 36 | சவுதிஅரேபியா | 16 |
| ஜப்பான் | 06 | குவைட் | 17 |
| ஜோர்தான் | 10 | பெல்ஜியம் | 01 |
| **மொத்தம்** | | | **337** |

### 5.1.3.7. இலங்கையில் உள்ள எதிராளிகளுக்கு/ சாட்சிகளுக்கு வெளிநாட்டு நீதிமன்றங்களிலிரந்து வழங்கப்பட்ட அழைப்புக் கட்டளைகள்/ கோரிக்கைகள் பற்றிய விடயங்கள்

2000 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க குடியியல் மற்றும் வர்த்தக விடயங்களின் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் ஆவணங்களைக் கையளிப்பதற்காக பின்வருமாறு வெளிநாடுகளிலிருந்து 73 கோரிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

| நாடு | கோரிக்கைகள் | நாடு | கோரிக்கைகள் |
|---|---|---|---|
| பெல்ஜியம் | 02 | லிட்வியா | 01 |
| கனடா | 16 | நெதர்லாந்து | 02 |
| ஐக்கிய இராச்சியம் | 01 | நோர்வே | 01 |
| பிரான்ஸ் | 08 | பொலாந்து | 01 |
| ஜேர்மனி | 12 | சுவீடன் | 01 |
| ஹங்கேரியா | 01 | சுவிட்சர்லாந்து | 06 |
| இந்தியா | 05 | யுக்ரேன் | 02 |
| இத்தாலி | 09 | அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 02 |
| ஜப்பான் | 01 | சேர்பியா | 02 |
| மொத்தம் | | | **73** |

2002 ஆம் ஆண்டின் 25ம் இலக்க குற்றவியல் விடயங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின்படி 2017.09.30ம் திகதியின் போது வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை 16 ஆகும். இலங்கையிலிருந்து 35 கோரிக்கைகள் வெளிநாடுகளுக்கு முன்வைக்கப்பட்டன.

### 5.1.4 மனித வியாபாரத்திற்கு எதிரான தேசிய செயலணி (NTF)

2010 ஆம் ஆண்டில் நீதி அமைச்சினால் மனித வியாபாரத்திற்கு எதிரான தேசிய செயலணி தாபிக்கப்பட்டதுடன், இலங்கையினுள் மனித வியாபாரத்திற்கு எதிராக செய்யப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பாக அறிவுரைகளைப் பெற்றுக்கொடுத்தல், மற்றும் அல்வலுவல்களைக் கண்காணிப்பதற்காக இச்செயலணி தேசிய கூட்டிணைப்பு நிறுவனமாக செயலாற்றுகிறது. வழக்குத் தொடுத்தலை துரிதப்படுத்துவதும் பலியாக்கப்பட்டோரின் பாதுகாப்பை பலப்படுத்துவதும் அரசாங்கத்தின் பிரதான திறத்தவர்களுக்கிடையே கூட்டிணைப்பை வலுப்படுத்தலும் இச்செயலணியின் நோக்கமாகிறது. நாட்டினுள் நடைபெறுகின்ற மனித வியாபாரத்திற்கு தீர்வுகளை வழங்குதல் சம்பந்தமாக பொறுப்புடைய நிறுவனமாக இனங்காணப்பட்ட சகல நிறுவனங்களினதும் பிரதிநிதிகளை இச்செயலணி கொண்டுள்ளது.

மனித வியாபாரத்திற்கு பலியாக்கப்பட்டோர்களை இனங்காணுதல், அறிவுரைகளுக்காக ஆற்றுப்படுத்தல் மற்றும் அவர்களின் பாதுகாப்பை உயர்த்துதல் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற்பாட்டு நடவடிக்கை முறைகள் இச்செயலணியால் மேம்படுத்தப்பட்டன. அது அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டு 2015 மார்ச் மாதத்தில் அமுல்படுத்தப்பட்டது.

செயலணியால் மனித வியாபாரம் பற்றி பொதுமக்கள் மற்றும் அரசாங்க அலுவலர்களுக்காக நடாத்தப்படுகின்ற புரிந்துணர்வை அளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களின் போது அங்கத்துவ அரசாங்க முகவராண்மைகள் கண்காணிப்பு செய்யப்படுகின்றன. மேலும் இலங்கை பொலிசுக்காக இயல்தகவு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மீது செயலணியின் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மனித வியாபாரம் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் பற்றிய புலனாய்வுகளை துரிதப்படுத்தும் பணிக்காக, அதற்கான விடயங்களை நெறிப்படுத்துவதற்கு விசேட பொலிஸ் கூறொன்று தேசிய செயலணியால் தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் மனித வியாபாரத்திற்கு எதிராக இலங்கை அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட முயற்சிகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் இனங்காணலொன்றாக 2017 ஆண்டின் அறிக்கையின்படி, ஐக்கிய நாடுகளின் இராஜாங்கத் திணைக்களத்தால் இலங்கை கண்காணிப்புப் பட்டியலின் 2 ஆம் தரத்திலிருந்து 1 ஆம் தரம் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

நீதிஅமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட அறிக்கைக்கு அமைவாக அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் இடம்பெயர்ந்து செல்பவர்கள் பற்றிய சர்வதேச ஒழுங்கமைப்பு நீதி அமைச்சுடன் இணைந்து ஆட்கள் வியாபாரத்தை தடுப்பதற்காக

கருத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது. அக்கருத்திட்டம் 2017 மே மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன் தெரிவுசெய்யப்பட்ட 6 மாவட்டங்களின் அரசாங்க அலுவலர்களை பயிற்சியாளர்களாகப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றாகவும்(TOT), ஆட்கள் வியாபாரம் மற்றும் அதை தவிர்த்துக் கொள்ளல் சம்பந்தமாக பொதுமக்களுக்கு புரிந்துணர்வை அளிக்கும் வர்த்தக விளம்பரங்களைப் பிரசாரம் செய்வதையும் அடிப்படையாகக் கொண்டு தொழிற்படுகிறது.

### 5.1.5. நீதி அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற விசேட கருத்திட்டங்கள்

#### 5.1.5.1 ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)

இலங்கை பற்றிய தொழில்நுட்ப உதவுக் கருத்திட்டம் முதலீடு மற்றும் வர்த்தக சட்டப்பிரிவை இலக்காகக் கொண்டு நீதித் துறையை வினைத்திறனுடன் பலப்படுத்தல், வர்த்தகத்துறை சம்பந்தப்பட்ட நிதித்துறை பற்றிய அறிவு மற்றும் உதவுத் தொழில்நுட்பத்தைப் பெற்றுக் கொடுப்பது இக்கருத்திட்டத்தின் நோக்கமாகிறது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவரால் (இணைந்த முகாமை நிருவாகம்) கருத்துரு பத்திரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப உதவுக் கருத்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட ஆக்கச்செலவு 750,000 டொலர் அது ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்ப உதவு விசேட நிதியத்தின் (TASF - iv) மூலம் அளிப்பு அடிப்படையில் வழங்கப்படுகின்ற பணத்தொகையொன்றாகும்.

பணியாட்டொகுதி, உள்நாட்டு தொலைதொடர்பு, மதியுரைநர்களுக்கான அலுவலக இடவசதிகள் மற்றும் பிற அளிப்புக்கள் என்னும் வகையில் இலங்கை அரசாங்கம் உதவுகிறது. கருத்திட்டத்தின் தொழிற்பாட்டுக் காலம் 2017 யூலை மாதம் தொடங்கி 2020 யூலை வரையிலான 3 வருட காலமொன்றாகும்.

கருத்திட்டத்தின் முதலாம் கட்டத்தில், தேவைகள் மதிப்பிடுதலொன்றின் மூலம் பூரணமான கற்கையொன்று செய்யப்படுவதுடன், இலங்கையின் முதலீடு, வர்த்தக மற்றும் வியாபாரங்களுக்காக வினைத்திறனான நீதித்துறையொன்றைத் தயார் செய்வதற்காக துறையின் சட்டகட்டமைப்பை மேம்படுத்துவதற்காக தந்திர செயற்பாட்டுத் திட்டம் மேம்படுத்தப்படுகிறது.
2ஆம் கட்டத்தில் தந்திர செயற்பாட்டுத்திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட முதன்மையான துறைகளை அடிப்படையாகக் கொண்ட மறுசீரமைப்புக்கள் ஒன்று அல்லது இரண்டு தொழில்நுட்ப உதவியின்மூலம் உதவுவதுடன் இறுதியாக தேவைகள் மதிப்பீட்டுக் கற்கை மற்றும் பிரகடனம் செய்யக்கூடிய தந்திர செயற்பாட்டுத் திட்டம் வெளியிடப்படுகிறது.

இத்தொழிநுட்ப உதவி பொதுச்சபையின் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அலுவலகத்தின் மூலம் செயற்படுத்தப்படுவதுடன், நீதி அமைச்சு ஆர்வம் காட்டுபவர்களைக் கூட்டிணைப்புச் செய்யும் பிரதான செயற்படுத்தல் முகவராண்மையாகும்.

#### 5.1.5.2. யுனிசெப் கருத்திட்டம்

**நீதிமன்ற வளவுகளில் பிள்ளைகளுக்கு உகந்த சூழலை உருவாக்குதல்.**

இலங்கை நீதிமன்ற வளவுகளில் பிள்ளைகளுக்கு உகந்த சூழலை உருவாக்குவதற்காக நீதி அமைச்சுக்கு உதவுகிறது. அதன்படி நீதிமன்ற வளவுகளில் பிள்ளைகள் ஓய்வாக இருப்பதற்கு மற்றும் விளையாடுவதற்கு அத்துடன் தாய்மார்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்குக் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் இக்கருத்திட்டத்தின் நோக்கமாகிறது.
இக்கருத்திட்டத்தின் கீழ் அநூராதபுரம் நீதிமன்றத் தொகுதியில் பிள்ளைகளுக்கு உகந்த பிரிவொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், மன்னார், புத்தளம் மற்றும் மொனறாகலை நீதிமன்ற வளவுகளில் அவ்வாறான கட்டடங்களின் நிர்மாண வேலைகள் முடித்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அம்பாறை பிரதேசத்தில் நிர்மாண வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

### 5.1.6. ஏனைய அலுவல்கள்

#### 5.1.6.1. குடியியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவைத் திருத்தத்திற்கு நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழு.

குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையை ஆராய்ந்து பார்த்து காலத்திற்கேற்றவாறு சர்வதேச தரக்கட்டளைக்கு இசைந்தவாறு அதற்குத் தேவையான திருத்தங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவித்து கௌரவ பிரதம நீதியரசர் சனாதிபதி சட்டத்தரணி பிரியசாத்டெப் அவர்களினது தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு சிவில் துறையின் சிரேட்ட சட்டத்தரணிகள், நீதி அமைச்சின் அலுவலர்கள், சட்டவரைநர் திணைக்களத்தின் அலுவலர்கள் மற்றும் தொழில் புரியும் சட்டத்தரணிகளைக் கொண்டுள்ளது.

இதுவரை 14 குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன்படி, குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் பொருள்கோடல்கள் (5ஆம் பிரிவு) நியாதிக்கம் (9ஆம் பிரிவு), பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி ஒருவர் நியமித்தல் (27 ஆம் பிரிவு), நீதிமன்றமொன்றில் வழக்கு கோவைப்படுத்தல் (47 ஆம் பிரிவு) அழைப்புக் கட்டளைகளை வழங்குதல் (59 ஆம் பிரிவு) பதில் கோவைப்படுத்தல் (72 ஆம் பிரிவு), வழக்கு விசாரணை திகதி (80 ஆம் பிரிவு), குறித்த நாளில் நீதிமன்றத்தில் தோன்றாமை (86 ஆம் பிரிவு) வேண்டுதல்களுக்கான திருத்தங்கள் (93 ஆம் பிரிவு), தலையிடுதல்கள் (94 ஆம் பிரிவு), அத்தாட்சிப்படுத்திய பிரதிகளை வழங்குதல் (440 ஆம் பிரிவு), மற்றும் குத்தகைக்கு அளிக்கப்பட்ட மற்றும் வாடகைக்கு அளிக்கப்பட்ட கட்டடங்களின் உடைமையை மீளக் கொள்ளல் மற்றும் உரியவாறு நட்டஈடுகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை முறைக்கு ஏற்புடையதான புதிய அத்தியாயமொன்றை அறிமுகம் செய்தல் ஆகிய விடயங்கள் விசேடித்தவாறு கலந்துரையாடப்படுகின்றன.

#### 5.1.6.2. குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டக்கோவையின் திருத்தங்களுக்காக நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழு

குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவைச் சட்டத்திற்கு மற்றும் தண்டனைச் சட்டக்கோவைக்கு காலத்திற்கேற்றவாறு மற்றும் சர்வதேச தரக்கட்டளைகளுக்கு இசைந்தவாறு தேவையான திருத்தங்களை விதப்புரை செய்யுமாறு உயர்நீதிமன்ற நீதிபதி கௌரவ புவனெக அலுவிஹாரே அவர்களின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அது நீதி அமைச்சின் அலுவலர்கள், குற்றவியல் சட்டத்துறையின் நிபுணர்கள், சட்டமா அதிபர் திணைக்களத்தின் அலுவலர்கள் சிரேட்ட பொலிஸ் அலுவல்கள் மற்றும் தொழில்புரியும் சட்டத்தரணிகளைக் கொண்டுள்ளது.

இது வரை 23 குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், குழுவினால் பின்வருமாறு 3 இடை அறிக்கைகள் நீதி அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**1. 2016.11.25 ஆம் திகதிய முதலாம் இடை அறிக்கை**

இனங்காணப்பட்ட குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் பலியாக்கப்பட்டவரின் அல்லது பலியாக்கப்பட்டவர் இளம் வயதுடையவராக இருக்குமிடத்து, பாதுகாவலரின் சம்மதத்துடன் பாதுகாப்பான மற்றும் சட்டமுறையான கருச்சிதைவுகளுக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதற்காக தண்டனைச் சட்டக்கோவை மற்றும் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டகோவைச் சட்டத்தை திருத்தஞ் செய்வதற்கான விதப்புரைகள் சமர்பிக்கப்பட்டன.

**2. 2017.07.09 ஆம் திகதிய இரண்டாம் இடைஅறிக்கை**

குற்றவியல் வழக்குகள் சம்பந்தப்பட்ட பூர்வாங்க வழக்கு விசாரணை நடவடிக்கை முறையொன்றை அறிமுகப்படுத்தல் மற்றும் அக்கருமத்திற்காக நீதிபதி ஒருவரை நியமிப்பதற்கு சம்பந்தப்பட்ட திருத்தங்களை குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையில் மற்றும் நீதித்துறைச் சட்டத்தில் உள்ளடக்குவதற்கு விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

**3. 2017.09.27 ஆம் திகதிய மூன்றாம் இடைஅறிக்கை**

ஏதேனுமொர நீதிமன்ற நடவடிக்கையில் சந்தேக நபர்கள்/ குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் அடையாளம் காணப்படுகின்ற விசேடித்த சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தின் கட்டளையின் படி நீதிமனறத்தில் ஆஜராகும் அவசியம் குறிப்பிட்ட நிபந்தனைகளின் மீது விடுவிப்பதற்கான திருத்தங்கள் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையில் உள்ளடக்குவதற்கு விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

## 5.2 தாபனப் பிரிவு

நீதிமன்றங்கள், நீதி அமைச்சு மற்றும் நீதி அமைச்சின் கீழுள்ள ஏழு திணைக்களங்களினதும் ஒன்பது நிறுவனங்களினதும் தாபன அலுவல்கள் தாபனப்பிரிவின் மூலம் செய்யப்படுகின்றன. பயிற்சி மற்றும் வினைத்திறனான மனித வளமொன்றைப் பெற்றுக் கொடுத்தலை உறுதிப்படுத்தல், நீதி நிருவாகக் கருமத்தின்போது தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் ஏனைய கூட்டிணைப்பு அலுவல்களும் இப்பிரிவினால் செய்யப்படுகின்றன. அதன் கீழ் தேவைப்படுகின்ற பணியாட்டொகுதியை அங்கீகரித்துக் கொள்ளல், ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைகளைத் தயார் செய்தல், தகுதியானவர்களைத் தெரிவு செய்தல், ஆட்சேர்ப்புச் செய்தல், பயிற்றுவித்தல், இடமாற்றஞ் செய்தல், பதவி உயர்வு செய்தல், ஒழுக்காற்று நடவடிக்கைகள், மேலதிகநேர பிரயாணச் செலவுகள், கடன் முற்பணங்களைப் பெற்றுக் கொடுத்தல், சான்றுப் பொருட்களைக் கையாளுவதற்குத் தேவையான கூட்டிணைப்பு அலுவல்கள் மற்றும் அவசியமாகும் போது சுற்றறிக்கைகளை வழங்குதல் என்பன இப்பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

மேற்குறித்த பணிகள் நீதிமன்ற நிருவாகம், திணைக்கள நிருவாகம் மற்றும் உள்ளக நிருவாகம் ஆகிய துணைப் பிரிவுகள் மற்றும் அதன் கீழுள்ள கூறுகளின் மூலம் செயற்படுத்தப்படுகின்றன.

### 5.2.1 நீதிமன்ற நிருவாகப் பிரிவு

தீவு முழுவதிலும் அமைந்துள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் கடமையாற்றுகின்ற நீதிச் சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அலுவலர்களைத் தவிர்ந்த ஏனைய 4387 அலுவலர்களின் சகல தாபன அலுவல்களும் இப்பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

#### 5.2.1.1 புதிய பதவிகளை உருவாக்குதல்

பின்வரும் பதவிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கான 2017.08.16 ஆம் திகதிய முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

| பதவிப்பெயர் | பதவிகளின்எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | ஹோமாகம மேல்நீதிமன்றம் | ஹோமாகம குடியியல்மேன்முறையீட்டுமேல்நீதிமன்றம் | நீர்கொழும்புகுடியியல் மேன்முறையீட்டுமேல் நீதிமன்றம் | மொத்தம் |
| அபிவிருத்தி அலுவலர் | 10 | 02 | 02 | 14 |
| கட்டளைச் சேவகரும் எழுத்தாணை நிறைவேற்றுநரும் | 03 | - | - | 03 |
| நீதிமன்றக்கூவுநர் மற்றும் கட்டியக்காரர் | 01 | - | - | 01 |
| அலுவலகப் பணியாளர் சேவை | 12 | 06 | 06 | 24 |
| பிஸ்கால் பியொன் | 02 | - | - | 02 |
| பிஸ்கால் மாதா | 02 | - | - | 02 |
| மொத்தம் | 30 | 08 | 08 | 46 |

பின்வரும் பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் **2017.08.28** மற்றும் 2017.09.27 தினங்களில் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| **பதவிப்பெயர்** | பதவிகளின்எண்ணிக்கை | | | | | | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஹோமாகம மேல்நீதிமன்றம் | ஹோமாகம மாவட்ட நீதிமன்றம் | ஹோமாகம குடியியல் மேல்நீதிமன்றம் | கலகெதர நீதவான் நீதிமன்றம் | புதிய உயர் நீதிமன்றம் மூன்று மண்டபம் | கொழும்பு புதிய வர்த்தக உயர் நீதிமன்றம் | கம்பஹா மேலதிக உயர் நீதிமன்றம் | இரத்னபுர மேலதிக உயர் நீதிமன்றம் | பலபிட்டிய குடியியல் மேல்நீதிமன்றம் | புத்தளம் குடியியல் மேல்நீதிமன்றம் | நீர்கொழும்பு குடியியல் மேல்நீதிமன்றம் | |
| அபிவிருத்திஅலுவலர் | - | 03 | - | 03 | 09 | 02 | 03 | 03 | 02 | 02 | - | 27 |
| கட்டளைச் சேவகரும் எழுத்தாணை நிறைவேற்றுநரும் | - | - | - | 04 | 06 | 05 | 03 | 03 | - | - | - | 21 |
| நீதிமன்றக்கூவுநர் மற்றும் கட்டியக்காரர் | - | - | - | - | 03 | - | 01 | 01 | - | - | - | 05 |
| அலுவலகப்பணியாளர் சேவை | - | - | - | 12 | 36 | 14 | 12 | 12 | 06 | 06 | - | 98 |
| நீதிமன்றப் பாதுகாவலர் | 02 | - | 02 | 02 | 06 | 01 | 02 | 02 | 02 | - | 02 | 21 |
| பிஸ்கால் பியொன் | - | - | - | - | 03 | - | 02 | 02 | - | - | - | 07 |
| பிஸ்கால் மாதா | - | - | - | - | 03 | - | 02 | 02 | - | - | - | 07 |
| மொத்தம் | 02 | 03 | 02 | 21 | 66 | 22 | 25 | 25 | 10 | 08 | 02 | 186 |

### 5.2.1.2 ஆட்சேர்ப்பு

| பதவி | நிறை வேற்று | மூன்றா ம்நிலை | இரண்டாம் நிலை | முதனி லை | மொத் தம் |
|---|---|---|---|---|---|
| கா.சே.சே. | - | - | - | **385** | **385** |
| கட்டளைச்சேவகரும்எழுத்தாணை நிறைவேற்றுநரும் | - | - | - | **178** | **178** |
| நீதிமன்றக்கூவுநர் மற்றும் கட்டியக்காரர் | - | - | - | **9** | **9** |
| நீதிமன்றப்பாதுகாவலர் | - | - | - | **32** | **32** |
| பிஸ்கால்மாதா | - | - | - | **15** | **15** |
| மொத்தம் | - | - | - | **619** | **619** |

அ) இதற்கு மேலதிகமாக கட்டளைச்சேவைகரும் எழுத்தாணை நிறைவேற்றுநரும் பதவிகள் 134மற்றும் நீதிமன்றக்கூவுநர்மற்றும் கட்டியக்காரர்பதவிகள் 17 க்காக ஆட்சேர்ப்பு செய்துகொள்வதற்காக எழுத்துப்பரீட்சை 2017.07.16 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

ஆ) அலுவலகபணியாளர் சேவையின் 144 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்து கொள்வதற்கு 2017.09.26 ஆம் திகதி நடாத்தப்பட்டது. அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

#### 5.2.1.3 நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகளுக்காக வசதிகளை வழங்குதல்

| சேவைகள் | 2016.12.31 ல் உள்ள இணைப்புகள் எண்ணிக்கை (a) | 2017.09.30 வழங்கப்பட்ட இணைப்பு எண்ணிக்கை (b) | 2017.01.01 - 2017.09.30 ல் புதிய தொலைபேசி தொடர்ப்புகளின் எண்ணிக்கை | (b) நிதி பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| தொலைபேசி வசதிகள் | 517 | 533 | 16 | 131,446 |
| உள்ளக தொலைபேசி வலையமைப்புகள் | 20 | 24 | 04 | 870,532 |
| இணையவசதிகள் | 93 | 141 | 48 | 162,572 |
| மொத்தம் | | | | 1,164,550 |

### 5.2.2 திணைக்கள நிர்வாகம்

நீதியமைச்சின் கீழ்உள்ள ஏழு திணைக்களங்கள் மற்றும் ஒன்பது நிறுவனங்களின் நிர்வாக அலுவல்களை நெறிப்படுத்தல் இதன் கீழ் செய்யப்படுகிறது.

#### 5.2.2.1 புதிய பதவிகளை உருவாக்கல்

| பதவிப்பெயர் | நிறை வேற்று | மூன்றாம் நிலை | இரண்டாம் நிலை | முதனி லை | மொத் தம் |
|---|---|---|---|---|---|
| சட்டமா அதிபர் திணைக்களம் | | | | | |
| அபிவிருத்திஅலுவலர் | - | - | 02 | - | 02 |
| சட்டவரைநர் திணைக்களம் | | | | | |
| உதவி சட்டவரைநர் (தமிழ்) | 05 | - | - | - | 05 |
| உயர் நீதிமன்றம் | | | | | |
| ஆராய்ச்சி அலுவலர் | 34 | - | - | - | 34 |
| குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபை. | | | | | |
| பணிப்பாளர்(நிருவாகம் மற்றும் முகாமை) | 01 | - | - | - | 02 |
| பணிப்பாளர் (நிதி) | 01 | - | - | - | |
| வர்த்தக மத்தியஸ்த நிலையம் | | | | | |
| நிறைவேற்று பணிப்பாளர் | 01 | - | - | - | 09 |
| பதிவாளர் | 01 | - | - | - | |
| கருத்திட்டஅலுவலர் | - | - | 04 | - | |
| சாரதி | - | - | - | 01 | |
| அலுவலகப்பணியாளர் | 43 | - | 06 | 02 | 52 |

#### 5.2.2.2 ஆட்சேர்ப்பு

| நிறுவனங்கள் | பதவிபெயர் | எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|
| பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் | பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் | 01 | 03 |
| | பிரதி பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் | 02 | |
| குற்றச்செயல்களுக்கப்பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசியஅதிகாரசபை | பணிப்பாளர் (சட்டம் மற்றும் சட்டவலுவாக்கல்) | 01 | 21 |
| | பணிப்பாளர் (கொள்கைகள்மற்றும்நிகழ்ச்சி திட்டங்கள்) | 01 | |
| | பணிப்பாளர் (நிதி) | 01 | |
| | பணிப்பாளர் (நிருவாகம்மற்றும்முகாமை) | 01 | |
| | முகாமைச்சபைச் செயலாளர் | 01 | |
| | முகாமைத்துவ உதவியாளர் | 10 | |
| | அலுவலகப் பணியாளர் | 06 | |
| சட்டஆணைக்குழுத் திணைக்களம் | உதவிச்செயலாளர் பதவி | 02 | 02 |
| தொழில்நியாயசபைகள் | சுருக்கெழுத்தாளர் | 10 | 10 |

பேச்சுமொழிப்பெயர்ப்பாளர் பதவி வெற்றிடங்களுக்காக எழுத்துப்பரீட்சை 2017.07.02 ஆம் திகதி நடாத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகளின் மீது தொழில்மற்றும் நேர்முகப்பரீட்சைகள் 2017.10.13 ஆம்திகதி நடாத்தப்படவுள்ளன.

### 5.2.2 உள்ளக நிர்வாகம்

உள்ளக நிருவாகத்தின் கீழ் நிருவாகம், சமாதான நீதிவான், திடீர் மரண விசாரணையாளர், மற்றும் சட்ட மருத்துவ அலுவலர், சமாதான நீதிவான் மற்றும் உத்தியோகப்பற்றற்ற நீதிவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சத்தியப் பிரிமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர் மற்றும் போக்குவரத்து ஆகிய கூறுகள் தொழில்படுகின்றன.

#### 5.2.3.1 நிர்வாக்கூறு

5.2.3.1.1 பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு பின்வரும் பதவிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்காக 2017.06.09 ஆம் திகதிய முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

| பதவிபெயர் | எண்ணிக்கை |
|---|---|
| தொழில்நுட்ப அலுவலர் | 06 |
| மொழிபெயர்ப்பாளர்(சிங்களம்/ தமிழ்) | 01 |

5.2.3.1.2 **ஆட்சேர்ப்பு**

| பதவி | நிறைவேற்று நிலை | மூன்றா ம்நிலை | இரண்டாம் நிலை | ஆரம்ப நிலை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| சிரேட்டஉதவிச் செயலாளர் (சட்டம்) | **01** | - | - | - | **01** |
| பொறியியலாளர் | 01 (ஒப்பந்தஅடிப் படையில்) | - | - | - | **01** |
| மேசன்தொழிநுட்ப வல்லுனர் | - | - | - | **04** | **04** |
| தச்சுத்தொழிநுட்ப வல்லுனர் | - | - | - | **05** | **05** |
| நீர்க்குழாய்பொருத்துநர் | - | - | - | **03** | **03** |
| மின்தொழிநுட்பவல்லுனர் | - | - | - | **02** | **02** |
| தொழிலாளர் | - | - | - | **10** | **10** |
| மொத்தம் | **02** | - | - | **24** | **26** |

அ. தொழில்நுட்ப அலுவலர் 08 வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு செய்துகொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது,

5.2.3.1.3 பயிற்சிகள் மற்றும் திறன்விருத்தி

நீதிஅமைச்சில் சேவை செய்கின்ற பதவிநிலை அலுவலர்கள் தொடக்கம் சிற்றூழியர்கள் வரையிலான சகல ஊழியர் தரங்களையும் மேவுகின்றவகையில் பின்வருமாறு பயிற்சிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

**(அ) உள்நாட்டுப்பயிற்சி**

| **பணியாளர்கள் தொகுதி** | **அலுவலகர்கள் எண்ணிக்கை** | **நிதி பெறுமதி (ரூபா)** |
|---|---|---|
| பதவிநிலைஅலுவலர்கள் | 60 | 372,900 |
| ஏனைய பணியாட்டொகுதி | 115 | 642,965 |
| மொத்தம் | **175** | **1,015,865** |

இதற்கு மேலதிகமாக அரசாங்கத்துடன் இணைந்த தொழிற்பயிற்சி நிறுவனங்களின் மூலமும் அரச பல்கலைக்கழக கற்கை நெறிகளுக்கும் அமைச்சினால் ஆற்றுப்படுத்தப்பட்ட பயிலுநர்களின் எண்ணிக்கை 54 ஆகும்.

**(ஆ) வெளிநாட்டுப்பயிற்சி**

| **அலுவலகர்கள் மற்றும் பயிற்சியின் தன்மை** | **அலுவலர்களின் எண்ணிக்கை** | **நிதி (ரூபா)** |
|---|---|---|
| நீதிபதிகள் – பயிற்சிகள்மற்றும் கருத்தரங்குகள் | 199 | 109,097,087 |
| அமைச்சின் அலுவலர்கள் - கருத்தரங்குகள் | 7 | 4,099,339 |
| அமைச்சின் அலுவலர்கள் - பயிற்சி | 21 | 13,449,847 |
| மேல்நீதிமன்றக் கணக்காளர்கள் - பயிற்சி | 2 | 1,212,068 |
| **மொத்தம்** | **229** | **127,858,341** |

**5.2.3.1.4 ஒழுக்காற்று முகாமைத்துவம்**

அ. முதனிலைப் புலனாய்வுகள்

2017.01.01 ஆம் திகதி தொடக்கம் 2017.09.30 ஆம் திகதி வரை 10 புதிய முதனிலை புலனாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் முன்னைய ஆண்டுகளில் முடிவடையாதிருந்த 33 முதனிலைப்புலனாய்வுகள் முடிவுறுத்திக் கொள்ளப்பட்டன.

ஆ. முறைசார் ஒழுக்காற்று விசாரணை

2017.01.01 ஆம் திகதி தொடக்கம் 2017.09.30 வரை 09 புதிய முறைசார் ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், முன்னைய ஆண்டுகளில் முடிவடையாதிருந்த 04 முறைசார் ஒழுக்காற்றுக் கட்டளைகளைப் பெற்றுக் கொடுத்து முடித்துக்கொள்ளப்பட்டன.

**5.2.3.1.5 கடன் அங்கீகரித்தல்.**

| கடன்வகை | அலுவலர்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) |
|---|---|---|
| ஆதன/ வீட்டு | 08 | 16,177,836 |
| அவதி | 155 | 15,547,040 |
| பண்டிகை | 170 | 1,700,000 |
| விசேட | 71 | 284,000 |
| துவிச்சக்கர வண்டி | 02 | 12,000 |
| **மொத்தம்** | 406 | 33,720,876 |

**5.2.3.2 சமாதான நீதிவான் பிரிவு**

| நியமனத்தன்மை | எண்ணிக்கை |
|---|---|
| தீவு முழுவதுக்கும் | 4759 |
| நீதிமன்ற வலயத்திற்கு | 965 |
| மொத்தம் | **5724** |

5.2.3.3 திடீர் மரண விசாரணையாளர் மற்றும் சட்ட மருத்துவ அலுவலர் பிரிவு.

1. அ) தீவு முழுவதிலும் 594 திடீர் மரண விசாரணையாளர்கள் சேவையில் உள்ளதுடன், நீதிநிருவாகச் செயற்பாட்டில் மிக முக்கியமான பணிகள் அவர்களால் நிறைவேற்றப்படுகின்றன.

அதன்படி, பொதுமக்களுக்கு உயரிய வசதிகள் ஏற்படுகின்ற வகையில் திடீர் மரண விசாரணையாளர்களை நியமித்தல் மற்றும் திடீர் மரண விசாரணையாளர் பிரிவுகளை நாளதுவரையாக்குதல் இக் கூறின் மூலம் செய்யப்படுகிறது.

| மாவட்டம் | வெற்றிடங்களுக்காக வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளவை |
|---|---|
| இரத்தினபுரி மற்றும் மாத்தறை | நேர்முகத் தேர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. |
| அம்பாறை மற்றும் அநுராதபுரம் | விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன |
| யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு,கிளிநொச்சி, வவுனியா,மன்னார்,பொலநறுவை, கேகாலை,பதுள்ளை,கம்பஹா,களுத்துறை | இனங்காணப்பட்ட வெற்றிடங்களுக்கு வர்த்தமானப் பத்திரிகை தயார் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. |

(ஆ) சட்ட மருத்துவ அலுவலர்

சட்ட மருத்துவ அலுவல்களில் ஈடுபட்டிருக்கும் நிபுணத்துவ சட்ட மருத்துவ அலுவலர்கள், பல்கலைக்கழக சிரேட்ட விரிவுரையாளர்கள்/ பேராசியர்கள், உதவி சட்ட மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்களுக்காக பிரேத பரிசோதனைகளை

நடாத்துதல் மற்றும் மருத்துவ அறிக்கைகளைத் தயார் செய்தலுக்காக படிகளைப் பெற்றுக்கொடுத்தல் சம்பந்தப்பட்ட அலுவல்கள் இக்கூறின் மூலம் செய்யப்படுகின்றன.

5.2.3.4 **சமாதான நீதிவான் மற்றும் உத்தியோகப்பற்றற்ற நீதவான் மற்றும் சத்தியப்பிரமாண ஆணையாளர்கள் பிரிவு.**

அ. தொழில் 15 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள 20 சட்டத்தரணிகள் சமாதான நீதிவான் மற்றும் உத்தியோகப்பற்றற்ற நீதவான்களாக இவ்வாண்டினுள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆ. உயர் நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்த 462 சட்டத்தரணிகள் சத்தியப்பிரமாண ஆணையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

5.2.3.5 **சத்தியப் பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்கள்**

குடியியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையின்படி சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களை நியமித்தல் மாவட்ட நீதவான்களால் செய்யப்படுவதுடன் அந்த நியமனங்களை செய்வதற்கான தேவையான விதப்புரைகளை பெற்றுக்கொடுத்தல் நீதியமைச்சின் மூலம் செய்யப்படுகிறது.

சிங்களம் தமிழ் ஆங்கிலம் மற்றும் ஏனைய மொழிகளுக்காக சத்தியப்பிரமாணம்செய்த மொழிபெயர்ப்பாளர்கள் 1663 பேர்கள் தற்போது தீவுமுழுவதிலும் உள்ளதுடன், சிங்களம் தமிழ் ஆங்கிலம் மொழிகளுக்காக புதிய சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களை நியமிப்பதற்கான பரீட்சை 2017 ஒக்ரோபர் மாதம் 28ம் திகதி நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5.2.3.6 போக்குவரத்துப் பிரிவு

அனைத்து மேல்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் சட்டத்துறை அலுவலர்களுக்காக போக்குவரத்து வசதிகளை வழங்கல், வாகனங்களைக் காப்புறுதி செய்தல் மற்றும் வாகனப் பராமரிப்பு அலுவல்கள் இப்பிரிவின் மூலம் செய்யப்படுகின்றன.

அனைத்து மேல்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் ஏனைய நீதித்துறை அலுவலர்களுக்காக 228 செலவின தலைப்பின் கீழ் 149 வாகனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதில் 114 வாகனங்கள் நீதிபதிகளுக்காக பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. மிகுதி வாகனங்கள் நீதிபதிகளின் கோரிக்கைகள் கிடைக்கும் வரை அமைச்சில் வைக்கப்பட்டுள்ளன.

அமைச்சின் செலவின தலைப்பு 110 இன் கீழ் பேணப்படுகின்ற வாகனங்களின் எண்ணிக்கை.

| அமைச்சின் செலவின தலைப்பின் கீழ் வாகனங்களை ஒதுக்குதல் | வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| மாண்புமிகு அமைச்சர் மற்றும் பணியாட்டொகுதி | 07 |
| மாண்புமிகு பிரதி அமைச்சர் மற்றும் பணியாட்டொகுதி | 09 |
| அமைச்சின் அலுவலர்கள் | 13 |
| தொகுதி | 42 |
| **மொத்தம்** | **71** |

2017.09.30 இல் வாகனங்களின் பராமரிப்பு

| வாகன விடயம் | செலவினம் ரூபா |
|---|---|
| 110-1-1-1301 | 5,691,170.20 |
| 110-1-1-2003 | 2,659,283.80 |
| 110-1-2-1301 | 6,894,011.43 |
| 110-1-2-2003 | 1,063,607.65 |
| **மொத்தம்** | **16,308,073.08** |

## 5.3 நிதிப் பிரிவு

நீதி அமைச்சு, நீதிமன்ற நிருவாகம், அமைச்சின் கீழான திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் நிதித்திட்ட முகாமை மற்றும் நிருவாகம் சம்பந்தப்பட்ட அலுவல்கள் மற்றும் அவற்றுக்கான கணக்கு அலுவல்களைப் பேணுவது நிதிப்பிரிவின் மூலம் செய்யப்படுகின்றன.

அவ்வலுவல்களை நிறைவேற்றும் போது,

i. வினைத்திறனான மற்றும் பயனுள்ள நிதி முகாமை முறைமையொன்றை செயற்படுத்தல்.

ii. நிதி ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்

iii. நிறுவனத்துக்குரிய சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்,

iv. அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக நிதி பயன்படுத்தல்.

v. கணக்கியல் மற்றும் அறிக்கை செய்தல் ஆகிய அலுவல்களின் மீது விசேட கவனம் செலுத்தப்படுகிறது.

இப்பணிகளை நிறைவேற்றுவதற்காக நீதிமன்ற நிருவாகம். பெறுகைகள், கணக்குகள் மற்றும் செலுத்துதல்களாக நிதிப் பிரிவினுள் கணக்காளர்களின் கீழ் 04 துணைப்பிரிவுகள் தொழில் படுகின்றன.

### 5.3.1. 2017.09.30 திகதிக்கு நிதி முன்னேற்றம்

2017 ஆண்டில் அமைச்சு நிருவாகம் மற்றும் நீதிமன்ற நிருவாகம் செலவின் தலைப்புக்களின் கீழ் முறையே 1,076.8 மில்லியன் ரூபா மற்றும் 8,142.2 மில்லியன் ரூபா தேசிய வரவு செலவுத் திணைக்களத்தால் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளமை அவ்வேறுபாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு **கைப்பற்றிக்** கொள்ளப்பட்ட நிதி முன்னேற்றம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

#### 5.3.1.1. செலவினத் தலைப்பு நீதி அமைச்சு

| விபரம் | ஏற்பாடுகள் (மில்.ரூபா) | செலவினம் (2017.09.30) (மில்.ரூபா) | முன்னேற்றம் |
|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம்** | **833.9** | **560.9** | 67% |
| • ஆளுக்குரிய வேதனாதிகள் | 221.1 | 160.5 | |
| • பிரயாணச் செலவு | 20.1 | 12.5 | |
| • வழங்கல் சேவைகள் மற்றும் பிற | 592.7 | 357.9 | |
| **மூலதனச் செலவினம்** | **242.9** | **126.2** | 52% |
| • சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் | 17.4 | 4.7 | |
| • சொத்துக்களைக் கொள்ளல் | 110.5 | 87.1 | |
| • பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி | 16.5 | 12.7 | |
| • பிற | 98.5 | 21.7 | |
| முழு மொத்தம் | 1,076.8 | 687.1 | 64% |

**5.3.1.2 செலவினத் தலைப்பு 228 நீதிமன்ற நிருவாகம்**

| விபரம் | ஏற்பாடுகள் (மில்.ரூபா) | செலவினம் (2017.09.30) (மில்.ரூபா) | முன்னேற்றம் |
|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம்** | **5,591.70** | **4,136.50** | |
| • ஆளுக்குரிய வேதனாதிகள் | **4,531.70** | **3,346.50** | |
| • பிரயாணச் செலவு | **53.20** | **41.20** | **74%** |
| • வழங்கல் சேவைகள் மற்றும் பிற | **1,006.80** | **748.80** | |
| **மூலதனச் செலவினம்** | **2,549.50** | **1,059.10** | |
| • சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் | 226.50 | 121.50 | |
| | | | **42%** |
| • சொத்துக்களைக் கொள்ளல் | 124.00 | | 22.00 |
| • கட்டடங்களை நிர்மாணித்தல் | 2,003.20 | 797.90 | |
| • பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி | 175.80 | 111.40 | |
| • பிற | 20 | 6.30 | |
| முழு மொத்தம் | **8,141.20** | **5,195.60** | **64%** |

**5.3.2. 2017 ஆண்டின் செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு நிதிப்பிரிவின் துணைப் பிரிவுகளின் முன்னேற்றம் வெவ்வேறாக பின்வருமாறு.**

**5.3.2.1 நீதிமன்ற நிருவாகப் பிரிவு**

தீவு முழுவதிலும் அமைந்துள்ள மேல் நீதிமன்றங்கள் மாவட்ட நீதிமன்றங்கள், நீதவான் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நியாய சபைகளின் கணக்கு அலுவல்கள் 24 வலய மேல் நீதிமன்றக் கணக்கு அலுவலகங்களின் மூலம் நிதி அலுவல்களின் கண்காணிப்பு மற்றும் கூட்டிணைப்பு செய்தல் செய்யப்படுகிறது. நீதிமன்றங்களால் திரட்டப்படுகின்ற தண்டப்பணங்கள், பிணைப் பணங்கள் மற்றும் நானாவித கட்டணங்களாக சேர்க்கப்படுகின்ற பணத்தை மத்திய அரசாங்கத்திற்கு மற்றும் மாகாண சபைகளுக்கும் பெற்றுக் கொடுத்தல் பிரதான பணிகள் என்பதுடன் 2017 ஆண்டின் செப்தெம்பர் மாதம் வரையிலான வருமானங்கள், வைப்புக்கள், பெறுகைகள் மற்றும் செலுத்துதல்கள் பின்வருமாறு.

(அ). **வருமானங்கள்-**

| விபரம் | 2017. மதிப்பீடு (மில். ரூபா) | 2017.09.30.க்கு வருமானம் திரட்டுதல் (மில். ரூபா) |
|---|---|---|
| தண்டப்பணம் மற்றும் பறிமுதல் செய்தல்கள் சம்பந்தப்பட்ட வருமானம் திரட்டுதல் | **725.00** | **838.40** |
| ஏனைய வருமானத் திரட்டுதல் | **239.50** | **212.60** |
| முழு மொத்தம் | **964.50** | **1,051.00** |

(ஆ). **வைப்புக்கள்**

| விபரம் | வைப்புப் பெறுகைள் (மில்.ரூபா) | வைப்புச் செலுத்துதல்கள் (மில். ரூபா) |
|---|---|---|
| பிணை வைப்புக்கள் | 1,003.90 | 505.70 |
| மூன்றாம் தரப்பினருக்கு மீளச் செலுத்துவதற்காக தற்காலிகமாக தடுத்து வைத்துக் கொள்ளும் வைப்புக்கள் | 5,035.80 | 4,612.80 |
| மாகாண சபைகளுக்கு வருமானங்களை அனுப்புதல் | 2,230.20 | 2,010.40 |
| ஏனைய வைப்புக்கள் | 36.80 | 45.40 |
| முழு மொத்தம் | 8,306.70 | 7,174.30 |

5.3.2.2. **பெறுகைப் பிரிவு**

(அ) நீதிமன்றங்களின் வினைத்திறனை மேம்படுத்திக் கொள்வதற்கு மற்றும் அலுவலக அலுவல்களை இலகுபடுத்திக் கொள்வதற்காக பின்வருமாறு இவ்வாண்டினுள் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| அலுவலக உபகரணம் | அளவு | பெறுமதி (மில்.ரூபா) |
|---|---|---|
| கணனி | 100 | 14.5 |
| பதிகருவி | 75 | 1.4 |
| நிழற்படப் பிரதி இயந்திரம் | 40 | 9.7 |
| மடி கணனி | 39 | 5.9 |
| தொலைநகல் | 20 | 0.4 |
| மொத்தம் | | 31.9 |

(ஆ). பின்வரும் அலுவலக உபகரணங்கள் சம்பந்தமாக பெறுகை அலுவல்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன் 2017 ஆண்டின் எதிர்வரும் காலத்துக்குள் இவை நீதிமன்றங்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்படும்.

| அலுவலக உபகரணம் | அளவு | பெறுமதி (மில்.ரூபா) |
|---|---|---|
| கணனி | 125 | 45.5 |
| பதிகருவி | 50 | |
| நிழற்படப் பிரதி இயந்திரம் | 37 | |
| மடி கணனி | 07 | |
| சாதாரண நாற்காலி (மரம்) | 2,500 | |
| பெட்டகம் (பெரிய) | 10 | |
| இரும்பு கெபினெட் | 75 | |
| இரும்பு அலுமாரி | 100 | |
| நூலக அலுமாரி | 30 | |
| சட்டத்தரணி நாற்காலி | 850 | |

(இ). இதுவரை நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலங்களுக்காக வீட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு 14.3 மில்லியன் ரூபாத் தொகையொன்றும் நீதிமன்றங்களின் ஏனைய அலுவலக உபகரணத் தேவைகளுக்காக 27.7 மில்லியன் ரூபாத் தொகையொன்றாகிய ஏற்பாடுகள் மேல் நீதிமன்ற வலயங்களுக்கு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன.

### 5.3.2.3. கணக்குப் பிரிவு

i. கணக்குப் பிரிவினால் பின்வரும் பிரதான பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ii. செலவினத் தலைப்பு 110 மற்றும் 228 இன் வருடாந்த வரவு செலவு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு 2017.08.08 ஆம் திகதி தேசிய வரவு செலவுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

iii. செலவினத் தலைப்பு 110 மற்றும் 228 இன் 2016 வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் ஏனைய கணக்குகள் தயார் செய்யப்பட்டு 2017.03.31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

iv. செலவினத் தலைப்பு 110 மற்றும் 228 இன் அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு அலுவல்கள் செய்யப்பட்டு வருடாந்த கணக்குகள் 2017.04.30 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்பிக்கப்பட்டுள்ளன.

v. 2016 ஆண்டு தொடர்பில் அமைச்சின் மற்றும் நீதிமன்றங்களின் வருடாந்த மதிப்பீட்டுச் சபை அலுவல்களைக் கூட்டிணைத்தல் மற்றும் ஏலவிற்பனைகளை நடாத்துவதற்கு அங்கீகாரங்களை வழக்கும் அலுவல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

vi. பிற திணைக்களங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் நிதி முகாமை மற்றும் கணக்கு அலுவல்களைக் கூட்டிணைத்தல்.

vii. அமப/16/0681/731/01 ஆம் இலக்க 2016 மே மாதம் 11 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி நீதி அமைச்சு சுற்றறிக்கை இல. 2018/5 இன் அறிவுரைகளின் படி நீதிமன்றங்களால் பறிமுதல் செய்யப்பட்ட மண் மற்றும் மரங்களை மத வழிபாட்டுத் தலங்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

viii. தற்போது நிர்மாணித்துக் கொண்டிருக்கும் சந்தஹிருசேய கருத்திட்டத்திற்காக அமப/15/1458/703/013 ஆம் அமைச்சரவைத் தீர்மானத்தின் படி பறிமுதல் செய்யப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் விதப்புரைகளின் மீது பெற்றுக் கொடுத்தல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ix. நீதிமன்றங்களால் பறிமுதல் செய்யப்பட்ட பண்டங்களை ஏலத்தில் விடுவதன் மூலம் 2017.09.30 ஆம் திகதியின் போது 98.5 மில்லியன் ரூபாவாகிய வருமானத்தை திரட்டியுள்ளதுடன், நீதிமன்றங்களில் உள்ள பறிமுதல் செய்யப்பட்ட பண்டங்கள் துரிதமாக ஏலத்தில் விடுவதற்காகத் தேவையான நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

### 5.3.2.4. செலுத்தற் பிரிவு

நிதிப் பிரிவின் செலுத்தற் கிளையின் மூலம் அமைச்சு நிருவாக செலவினத் தலைப்பின் கீழான சகல மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலுத்துதல் அலுவல்கள் செய்யப்படுகின்றன. 2017 ஆண்டின் செப்தெம்பர் 30 ஆம் திகதியின் போது மீண்டுவரும் செலவினம் 560.90 மில்லியன் ரூபா மற்றும் மூலதனச் செலவினம் 126.2 மில்லியன் ரூபாவாக 687.1 மில்லியன் ரூபா செலவுகள் செய்யப்பட்டுள்ளன.

## 5.4 உட்கட்டமைப்புப் பிரிவு

பொதுமக்களுக்கு பயனுள்ளதும் வினைத்திறன்மிக்கதுமான நிறைவேற்றும் அரச கொள்கையினை நடைமுறைப்படுத்தும்பொருட்டு தேவையான பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை இனங்காணுதல், வழங்குதல் மேம்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன உட்கட்டமைப்பு பிரிவின் முக்கிய விடயங்களாகும்.

அதன் கீழ் புதிய நீதிமன்றக் கட்டிடத்தொகுதிகளை மற்றும், நீதிபதிகளின் உத்தியோக பூர்வ வாசஸ்தலங்களை நிர்மாணித்தல், திருத்துதல் மற்றும் பேணுதல் போன்ற நடவடிக்கைகள் இப்பிரிவின் கண்காணிப்பு, வழிகாட்டல், ஒருங்கிணைப்பு என்பவற்றின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.

அமைச்சினால் மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்கள் கீழ்வரும் மூன்று வகைகளில் அமுறப்படுத்தப்படும்.

- பாரியளவிலான கருத்திட்டங்கள்– ரூ. 100 மில். மேற்பட்டவை
- சிறியளவிலான கருத்திட்டங்கள்– ரூ. 100 மில். கீழ்ப்பட்டவை
- புனருத்தாபன நீதிமனறக் கருத்திட்டங்கள்

**2017.01.01 – 2017.09.30 வரை பூர்த்தியாக்கப்பட்டுள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்களின் சாராம்சம்**

| | 2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு தொகை ரூ. மில் | நிதி ரீதியான முன்னேற்றம் 2017.09.30 தொகை ரூ. மில் | % | கருத்திட் டங்கள் எண்ணிக் கை |
|---|---|---|---|---|
| ***பாரியளவிலான கருத்திட்டங்கள்*** | | | | |
| *கருத்திட்டங்கள்– வரவு செலவு திட்ட மதிப்பீடு* | 1,139.59 | 604.89 | 53% | 10 |
| *வரவு செலவு திட்ட முன்மொழிவு* | 595.00 | 153.69 | 26% | 5 |
| **உப தொகை** | **1,734.59** | **758.58** | **44%** | |
| *சிறியளவிலான கருத்திட்டங்கள்* | 200.00 | 39.09 | 20% | 25 |
| *புனருத்தாபன கருத்திட்டங்கள்* | 200.00 | 107.70 | 54% | 522 |
| **மொத்தம்** | **2,134.59** | **905.36** | **42%** | **562** |

### 5.4.1 பாரியளவிலான கருத்திட்டங்கள்

#### 5.4.1.1 2017.01.01 – 2017.09.30 வரை பூர்த்தியாக்கப்பட்டுள்ள பாரியளவிலான கருத்திட்டங்கள்

| கருத்திட்டம் | மொத்த மதிப்பீடு ரூ.மில் | |
|---|---|---|
| ஹோமாகம நீதிமன்றக் கட்டிடத் தொகுதி | 470.81 | மொத்த செலவீனம் ரூபா 463 மில். |
| கலகெதர நீதிமன்றக் கட்டிடம் | 70.11 | இறுதிக் கொடுப்பனவு கொடுக்கப்படவேண்டும் |

ஹோமாகம நீதிமன்றக் கட்டிடத் தொகுதி





கலகெதர நீதிமன்றக் கட்டிடம்





**5.4.1.2** கீழ்வரும் பாரியளவிலான கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

| கருத்திட்டம் | மொத்த மதிப்பீடு ரூ.மில் | 2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ. மில் | நிதி ரீதியான முன்னேற்றம் 30/09/2017 | | பௌதீக ரீதியான முன்னேற்றம் 30/09/2017 |
|---|---|---|---|---|---|
| | | | ரூ. மில் | % | |
| காலி நீதிமன்றக் கட்டிடத் தொகுதி | 823.15 | 250 | 15.42 | 6% | 47% |
| வத்தளை நீதிமன்ற கட்டிடத்தொகுதி நிலை 1 | 194 | 39.1 | 8.25 | 21% | 99% |
| வத்தளை நீதிமன்ற கட்டிடத்தொகுதி நிலை 11 | 170.54 | *147.8 | 18.95 | 13% | 52% |
| மாத்தறை நீதிமன்றக் கட்டிடத்தொகுதி | 1,119.55 | 300 | 200.56 | 67% | 36% |

காலி நீதிமன்றக் கட்டிடத் தொகுதி





வத்தளை நீதிமன்ற கட்டிடத்தொகுதி





மாத்தறை நீதிமன்றக் கட்டிடத்தொகுதி





**5.4.1.3 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள்**

| கருத்திட்டம் | மொத்த மதிப்பீடு ரூ.மில் | 2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ. மில் | நிதி ரீதியான முன்னேற்றம் 30/09/2017 | | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | | ரூ. மில் | % | |
| அநுராதபுர நீதிமன்றக் கட்டிடத் தொகுதி | 370 | 150 | 55.2 | 37% | வேலை ஆரம்பிக்கப்பட்டு முற்பணம் கொடுக்கப்பட்டுள்ளது |
| பொலநறுவ நீதிமன்ற கட்டிடத்தொகுதி | 382 | 150 | 57 | 38% | |
| கம்பளை நீதிமன்ற கட்டிடத்தொகுதி | 458 | 140 | 78.5 | 56% | |
| ருவானவெல்ல நீதிமன்றக் கட்டிடம் | 275 | 120 | 47.17 | 39% | |
| மாங்குளம் நீதிமன்றக் கட்டிடம் | 463 | 79.35 | 79.35 | 100% | |
| முல்லைத்தீவு நீதிமன்றக் கட்டிடம் | 414 | 100 | 71.07 | 71% | |
| யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டிடம் | 242 | 100 | 41.49 | 41% | |

#### 5.4.1. 4 வடிவமைத்தல் நிலையிலுள்ள பாரியளவிலான கருத்திட்டங்கள்

| கருத்திட்டங்கள் | மொத்த மதிப்பீடு ரூ.மில் |
|---|---|
| கஹட்டகஸ்திகிலிய சுற்று நீதவான் நீதிமன்றக் கட்டிடம் | **113** |
| மதவாச்சிய சுற்று நீதவான் நீதிமன்றக் கட்டிடம் | **151** |

### 5.4.2 சிறியளவிலான கருத்திட்டங்கள்

#### 5.4.2.1 2017.01.01 – 2017.09.30 வரை பூர்த்தியாக்கப்பட்டுள்ள சிறியளவிலான கருத்திட்டங்கள்

| | கருத்திட்டம் | மொத்த மதிப்பீடு ரூ.மில் | 2017 ஆம் ஆண்டிற்கான மொத்த செலவீனம் ரூ. மில் |
|---|---|---|---|
| 1 | கெஸ்பாவ மாவட்டநீதவான் நீதிமன்ற ஆவணக் காப்பறை மற்றும் சான்றுப்பொருள் அறையை நிருமாணித்தல் | 25.63 | 22.03 |
| 2 | திஸ்ஸமகாராம மாவட்டநீதவான் நீதிமன்ற ஆவணக் காப்பறை மற்றும் சான்றுப்பொருள் அறையை நிருமாணித்தல் | 12.03 | 9.45 |
| 3 | வெல்லவாய நீதிமன்ற ஆவணக் காப்பறை மற்றும் சான்றுப்பொருள் அறையை நிருமாணித்தல் மற்றும் அலுவலக புனரமைப்பு | 19.16 | 13.34 |
| 4 | வெல்லவாய மற்றும் எம்பிலிபிட்டிய நீதிமன்றக் ஆவணக் காப்பறை மற்றும் சான்றுப்பொருள் அறையை நிருமாணித்தல் மற்றும் அலுவலக இறாக்கை நிருமாணித்தல் | 9.15 | 7.63 |
| 5 | பருத்தித்துறை மாவட்டநீதவான் நீதிமன்ற ஆவணக் காப்பறை மற்றும் சான்றுப்பொருள் அறையை நிருமாணித்தல் | 22.76 | 17.28 |
| 6 | களுவாஞ்சிகுடி நீதவான் நீதிமன்ற ஆவணக் காப்பறை மற்று சான்றுப்பொருள் அறையை நிருமாணித்தல் | 20.96 | 16.5 |
| 7 | எல்பிட்டிய நீதவான் நீதிமன்றக் ஆவணக் காப்பறை மற்றும் சான்றுப்பொருள் அறையை நிருமாணித்தல் மற்றும் அலுவல புனரமைப்பு | 9.67 | 12 |
| 8 | எம்பிலிபிட்டிய நீதவான் நீதிமன்றக் அலுவலக மற்றும் விடுதிகள் புனரமைப்பு | 68.57 | 65.75 |

#### 5.4.2.2 கீழ்வரும் சிறியளவிலான கருத்திட்டங்கள் அமுற்படுத்தப்படுகின்றன

| | கருத்திட்டம் | மொத்த மதிப்பீடு ரூ.மில் | 2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ. மில் | நிதி ரீதியான முன்னேற்றம் 30/09/2017 ரூ. மில் | பௌதீக % |
|---|---|---|---|---|---|
| 1 | பொலநறுவ நீதிபதிகள் வாசஸ்தலம் புனரமைப்ப பிபில நீதிபதிகள் வாசஸ்தலம் புனரமைப்பு | 35.09 | 2.44 | 2.44 | பிபில-75% பொலநறுவ 85% |
| 2 | அம்பாறை நீதவான் நீதிமன்ற கட்டிடம் மற்றும் சிறுவர்களுக்கான விளையாட்டு இடங்கள் நிர்மாணித்தல் | 4.21 | 3 | - | 50% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | நொச்சியாகம சுற்று நீதவான் நீதிமன்றக் கட்டிட புனரமைப்பு | 24.5 | 4.9 | - | புதிய ஒப்பந்தகார்ர் களை தெரிவிற்கான விலைமனு கோரல்- |

### 5.4.3 புனருத்தாபனக் கருத்திட்டங்கள்

**5.4.3.1 கீழ்வரும் கருத்திட்டங்கள் 2017.01.01 இல் இருந்து 2017.09.30 வரை புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன.**

| | கருத்திட்டம் | 2017 ஒதுக்கீடு ரூபா மில் | கருத்திட்ட எண்ணி | 30.09.2017 செலவு ரூபா மில் |
|---|---|---|---|---|
| 1 | நீதிஅமைச்சின் உட்கட்டமைப்பு பிரிவு | 38.41 | 14 | 17.53 |
| 2 | கொழும்பு | 17.29 | 36 | 8.91 |
| 3 | களுத்தறை | 18.28 | 32 | 8.11 |
| 4 | காலி | 14.72 | 75 | 6.08 |
| 5 | மாத்தறை | 2.47 | 14 | 1.40 |
| 6 | மட்டக்களப்பு | 9.62 | 10 | 2.76 |
| 7 | யாழ்ப்பாணம் | 12.82 | 11 | 12.82 |
| 8 | நீர்கொழும்பு | 3.94 | 15 | 1.66 |
| 9 | கம்பஹ | 8.08 | 27 | 5.96 |
| 10 | குருணாகல | 13.38 | 35 | 6.00 |
| 11 | கண்டி | 8.12 | 19 | 2.78 |
| 12 | அவிசாவல | 11.85 | 22 | 6.03 |
| 13 | இரத்னபுர | 14.59 | 38 | 2.77 |
| 14 | பதுளை | 8.60 | 23 | 0.42 |
| 15 | அநுராதபுர | 11.86 | 31 | 9.13 |
| 16 | கேகாலை | 8.63 | 16 | 3.21 |
| 17 | சிலாபம் | 0.58 | 06 | 0.41 |
| 18 | வவுனியா | 5.83 | 16 | 0.85 |
| 19 | அம்பாறை | 2.99 | 01 | 0 |
| 20 | திருகோணமலை | 7.99 | 14 | 3.72 |
| 21 | நுவரெலியா | 8.11 | 04 | 0.12 |
| 22 | மொனராகலை | 9.60 | 20 | 1.90 |
| 23 | பொலநறுவ | 2.36 | 16 | 0.80 |
| 24 | கல்முனை | 0.56 | 02 | 0.53 |
| 25 | தங்காலை | 9.12 | 25 | 3.52 |
| | **மொத்தம்** | **250** | **522** | **107.46** |

## 5.5 அபிவிருத்திப் பிரிவு

நீதியமைச்சின் கீழான திணைக்களங்கள் நிறுவனங்களுக்குத் தொடர்புடையதான காணிகளை இனங்காணுதல் நிர்ணயம் செய்தல் பெற்றுக்கொள்ளல் போன்றன அபிவிருத்திப் பிரிவின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. அதுபோலவே இதுவரையில் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படாத நிறுவனங்கள் உத்தியோக பூர்வ வாசஸ்தலங்களிற்கு வாடகையடிப்படையில் கட்டிடங்களை பெற்றுக் கொள்வதும் நடைபெறுகின்றன.

### 5.5.1 நீதி அமைச்சுக்குரிய காணிகளின் நிர்ணயத்தை உறுதிப்படுத்தல்

அபிவிருத்திப் பிரிவின் மூலம் 2017.01.01 முதல் 2017.09.30 வரையிலான காலப்பகுதிக்குள் நீதிமன்றக் கட்டமைப்புக்கள், நீதிபதிகளின் வாசஸ்தலங்கள் தொடர்பான காணிகளின் நிர்ணயத்தை உறுதிப்படுத்தல் தொடர்பாக கீழ்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

#### 5.5.1.1. அமைச்சரவையின் தீர்மானத்தின்படி பெறப்பட்ட காணிகள்

அ) கொழும்பு புதிய நீதிமன்ற மனையை நிர்மாணிப்பதற்காக பி.சீ.சீ. லங்கா நிறுவனத்திற்குச் சொந்தமான பூமியில் 6 ஏக்கர் (1,80618 ஹெக்டேயர்) இடப்பரப்பொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவைத் தீர்மானத்தின்படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. காணியை அளந்து எல்லைகளைக் காட்டப்பட்டதன் பின்னர் அரசாங்கக் காணிகளைத் திணைக்களங்களுக்கு உரித்தாக்கிக்கொள்ளும் விண்ணப்பம் பிரதேச செயலாளரிடம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

ஆ) காலி நீதிமன்றத்த தொகுதியை நிர்மாணிப்பதற்காக பூஸா பிரதேசத்தில் இலங்கை இராணுவம் மற்றும் கடற்படையினர் அனுபவிக்கும் காணிகளில் போதுமான இடப்பரப்பொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவைத் தீர்மானத்தின்படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அக்காணியின் எல்லைகளைக் காட்டி 2017.04.20 ஆம் திகதி அமைச்சுக்கு உடைமை கையளிக்கப்பட்டுள்ளது.

இ) பூகொட நீதவான் நீதிமன்றத்தின் பி/8674/15 ம் இலக்க வழக்கு தொடர்பான மல்வானையில் அமைந்துள்ள 16 ஏக்கர் 1 ரூட் 8 பர்ச்சஸ் விசாலமான காணியில் 4 ஏக்கர் நிலம் சட்டத்துறையின் பயிற்சி நிலையமொன்றை அமைப்பதற்காக அமைச்சிடம் பாரப்படுத்துவதற்கு அமப17/1265/731/011-IV மற்றும் 2017 யூன் 28ம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி அக்காணிக்குள் அமைந்துள்ள கட்டிடமும் உள்ளடக்கப்பட்டவாறு உட்பிரவேசிப்பு வழியுடன் 4ஏக்கர் காணிப்பகுதியை அளவையிட்டு வரைவுப்படம் தயாரித்து நீதியமைச்சிடம் விரைவாக சமாப்பிக்குமாறு தொம்பே பிரதேச செயலாளரிடம் 2017.08.15 ம் திகதிய கடித மூலம் கேட்கப்பட்டுள்ளது.

#### 5.5.1.2 புதிய நீதிமன்றங்களைத் தாபிப்பதற்கும், அலுவலக வாசஸ்தலங்களை நிர்மாணிப்பதற்கும் தகுதியான காணிகளை தெரிவு செய்தல்.

உத்தேச நீதிமன்றங்கள் உட்பட மற்றும் 23 நிர்மாணங்கள், 10 அலுவலக வாசஸ்தலங்கள் 03 குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றங்கள், மேலதிக மேல்நீதிமன்றங்கள் 03 என்பவை 2017 ஆண்டில் நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளன.

| கருத்திட்டம் | உரித்துச் சான்றிதழ்கள் கிடைக்கப் பெற்றுள்ள நீதிமன்றங்கள்/ அலுவலக வாசஸ்தலங்கள் | உரித்தாக்கிக் கொள்வதற்கு விண்ணப்பித்துள்ள நீதிமன்றங்கள் | உரித்தாக்கிக் கொள்வதற்கு ஆவணங்கள் தயார் செய்து கொண்டிருக்கும். | வாடகை அடிப்படையில் | புதிய காணித் துண்டொன்றைக் கண்டுபிடித்தல் |
|---|---|---|---|---|---|
| நீதிமன்றங்கள் மற்றும் பிற நிர்மாணங்கள் (23) | **03** | **13** | **07** | **-** | **-** |
| அலுவலக வாசஸ்தலங்களை நிர்மாணித்தல் (10) | **01** | **06** | **03** | | **-** |
| குடியியல் மேன்முறையீட்டு மேல்நீதிமன்றங்களைத் தாபித்தல் (06) | **01** | **-** | **02** | **02** | **01** |

அ) 2017 ஆண்டின் நீதிமன்ற மற்றும் அலுவலக வாசஸ்தலங்கள் அமைந்துள்ள 04 காணிகளுக்காக உரித்துச் சான்றிதழ்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

ஆ) சட்டவிவகாரம் மற்றும் (ஊழலுக்கெதிரான) ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுக்கூட்டத்தின் 2017.09.20 ஆம் திகதிய அறிக்கையின்படி புதிய நீதிமன்றங்களை நிர்மாணித்தலுக்காக தேவையான காணி மற்றும் கட்டிடங்களை இனங்காணுதல் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

#### 5.5.1.3 தற்போது நீதிமன்றங்கள் மற்றும் அலுவலக வாசஸ்தலங்கள் நிர்மாணித்துள்ள மற்றும் நிர்மாணிக்கப்படவுள்ள காணிகளை நிர்ணயித்துக் கொள்வதற்காக தகவல்களைத் திரட்டல்

அ) காணிகளை நிர்ணயிப்பதற்காக அனைத்து மேல்நீதிமன்ற பதிவாளர்களுக்கு மற்றும் வலய தொழில்நுட்ப அலுவலர்களுக்கு வினாத்தொடரொன்றை அனுப்பி தகவல்கள் சேகரித்துக் கொண்டிருப்பதுடன் அத்தகவல்களின்படி வலயங்களைச் சேர்ந்த அனைத்து நீதிமன்றங்களினதும் தகவல்களைப் பொழிப்புச் செய்வதற்கு மற்றும் அமைச்சிடம் உரித்தாக்கிக் கொள்ளப்படாத காணிகளை உரித்தாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இதுவரை 08 நீதிமன்ற வலயங்களின் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன).

ஆ) அமைச்சுக்கு உரித்தாக்கிக் கொண்டுள்ள காணிகள் மற்றும் அக்காணிகளில் அமைந்துள்ள கட்டடங்களை மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு 08 நீதிமன்றங்களின் தகவல்கள் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதுடன் மேலும் 27 பற்றிய தகவல்கள் ஆற்றுப்படுத்தப்படவுள்ளன.

### 5.5.2 நீதி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலங்களுக்காக கட்டடங்களை குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் பெற்று கொள்ளல்

அ) மகரகம, இரத்மலானை, காலி ஆகிய தொழில்நியாய சபைக் கட்டடங்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடங்களுக்கான குத்தகை உடன்படிக்கைகளை தயார் செய்யப்பட்டுள்ளன.

ஆ) குருநாகல் மாகாண மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கான குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டடத்திற்கான குத்தகை உடன்படிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

இ) 2017.01.01 முதல் 2017.09.30 வரையிலான காலப்பகுதிக்குள் 65 அலுவலக வாசஸ்தலங்களுக்காக மேற்கூரியவாறு குத்தகை உடன்படிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளன.

| மாவட்டம் | தயார் செய்யப்பட்டுள்ள குத்தகை உடன்படிக்கைகள் | | | |
|---|---|---|---|---|
| | மேல்நீதிமன்றங்கள்/ குடியியல் மேன்முறையீட்டு மேல்நீதிமன்ற நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலங்கள் | மாவட்ட நீதிபதி/ மேலதிக மாவட்ட நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலங்கள் | நீதவான்/ மேலதிக நீதவான் அலுவலக வாசஸ்தலங்கள் | மொத்தம் |
| கொழும்பு | 1 | 4 | 8 | 13 |
| இரத்தினபுரி | 2 | 3 | 2 | 7 |
| குருநாகல் | 1 | 1 | 3 | 5 |
| கண்டி | 1 | 1 | 1 | 3 |
| நுவரெலியா | 1 | - | 2 | 3 |
| மாத்தறை | 1 | - | 4 | 5 |
| காலி | 3 | 2 | - | 5 |
| பொலனறுவை | - | 1 | - | 1 |
| களுத்துறை | - | - | 4 | 4 |
| புத்தளம் | - | - | 1 | 1 |
| மொணறாகலை | 1 | - | - | 1 |
| அம்பாறை | 1 | 1 | 1 | 3 |
| திருகோணமலை | - | - | 2 | 2 |
| கேகாலை | - | 3 | - | 3 |
| கம்பஹ | - | 1 | 1 | 2 |
| அவிசாவளை | - | - | 1 | 1 |
| சிலாபம் | - | 3 | 1 | 4 |
| தங்காலை | - | 1 | - | 1 |
| பதுளை | - | - | 1 | 1 |
| மொத்தம் | 12 | 21 | 32 | 65 |

## 5.6 திட்டமிடற் பிரிவு

### 5.6.1 அறிமுகம்

திட்டமிடல் பிரிவு அமைச்சிலும் அதன் கீழ் வரும் திணைக்களங்களிலும் உள்ள கருத்திட்டங்களின் திட்டமிடல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்பான பணிகளுடன் பின்வரும் பணிகளையும் ஆற்றுகிறது: -

- அமைச்சுக்காக வருடாந்த மூலதன வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டை தயார் செய்தல்
- வருடாந்த தொழிற்பாட்டுத் திட்டத்தை தயார் செய்தல்.
- காலாண்டு முன்னேற்ற அறிக்கையைத் தயார் செய்தல் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல்.
- முன்னேற்ற அறிக்கையை தயார் செய்து எதிர்வரும் ஆண்டின் நிதி ஏற்பாடுகளை பெற்றுக் கொள்வதற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல். மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயார் செய்தல்.
- வழக்குகள் சம்பந்தப்பட்ட புள்ளிவிபரங்களைத் திரட்டுதல் வழக்குகள் பற்றிய வருடாந்த அறிக்கையை தயார் செய்தல்.
- கருத்திட்ட அறிக்கைகளை தயார் செய்தல் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரைகளைப் பெற்றுகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- நீதி அமைச்சின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற மாவட்ட ரீதியான மற்றும் பிரதேச ரீதியான அபிவிருத்தி கருமங்களை மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுடன் கூட்டிணைத்தல்.

- சட்டவிவகாரம் மற்றும் (ஊழலுக்கெதிரான) ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுக்கூட்டத்தினை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- தகவல்தொழில் நுட்பசேவைகள் பிரிவை கண்காணித்தல்

### 5.6.2. முனேற்றம் 2017.01.01 முதல் 2017.09.30 வரை

அ) வரவு செலவு மதிப்பீடுகளைச் சமர்ப்பித்தல்

2018 ஆண்டுக்கான நீதி அமைச்சின் மூலதன செலவீன மதிப்பீடுகள் 2017.08.08 ஆம் திகதி தேசிய வரவு செலவு தினணக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

ஆ) வருடாந்த தொழிற்பாட்டுத் திட்டத்தை சமர்ப்பித்தல்

2017 ஆண்டின் மூலதனச் செலவுகளுக்கான அமைச்சின் தொழிற்பாட்டுத் திட்டம் சனாதிபதி செயலகத்திற்கு, பிரதமர் செயலகத்திற்கு, தேசியகொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சிற்கு மற்றும் தேசிய வரவுசெலவு திணைகளத்திற்கு 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

இ) முன்னேற்ற அறிக்கைகள் மீளாய்வு

| விடயம் | எண்ணிக்கை |
|---|---|
| மூலதனச் செலவினங்களுக்காக காலாண்டு ரீதியில் தயார் செய்யப்பட்ட முன்னேற்றறிக்கைகள் | 03 |
| அபிவிருத்தி கருத்திட்டங்களுக்காக மாதாந்தம் தயார் செய்யப்பட்ட முன்னேற்றிக்கைகள் (பாரிய அளவிலான கருத்திட்டங்கள் 13, சிற்றளவிலான கருத்திட்டங்கள் 29 மற்றும் மறுசீரமைப்புக் கருத்திட்டங்கள் 522) | 12 |
| நடாத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் | 03 |
| பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்ட கருத்திட்டங்கள் | 564 |

ஈ) முன்னேற்றறிக்கைகளைச் சமா்ப்பித்தல்

| அறிக்கை | நிறுவனம் |
|---|---|
| தேசிய வரவு செலவு சுற்றறிக்கையின்படி அபிவிருத்திக் கருத்திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் | தேசிய வரவு செலவு திணைக்களத்திற்கு நிதி முன்னேற்றம் மாதத்திற்கு ஒரு முறை மற்றும் பௌதீக முன்னேற்றம் காலாண்டிற்கு ஒரு முறை அறிக்கையிடப்பட்டுள்ளன. |
| உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்டமுன்மொழிவுகளின் முன்னேற்றம் | அ) கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு சனாதிபதி செயலகத்திற்கு, மற்றும் அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு காலாண்டு ரீதியில் அறிக்கையிடப்பட்டன.<br>ஆ) இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கைக்காக தகவல்கள் சமா்ப்பிக்கப்பட்டுள்ளன. |
| மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களுக்காக முன்னேற்றறிக்கைகளைச் சமா்ப்பித்தல் | கம்பஹா மாவட்ட செயலகத்திற்கு மற்றும் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்திற்கு அறிக்கையிடப்பட்டது. |

உ) வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமா்ப்பித்தல்

| நிறுவனங்கள் | அறிக்கைகள் | திகதி |
|---|---|---|
| நீதிஅமைச்சு | 2016 ம் ஆண்டு செயலாற்றுகை அறிக்கை | பாரளுமன்றிற்கு 2017.05.30ல் சமா்ப்பிக்கப்பட்டது |
| அரசாங்க பகுப்பாய்வாளா் திணைக்களம் | 2016 ம் ஆண்டு செயலாற்றுகை அறிக்கை | பாரளுமன்றிற்கு2017.09.20 ல் சமா்ப்பிக்கப்பட்டது |
| பொது நம்பிக்கைப் பொறுப்பாளா் திணைக்களம் | 2016 ம் ஆண்டு செயலாற்றுகை அறிக்கை | பாரளுமன்றிற்கு 2017.06.16ல் சமா்ப்பிக்கப்பட்டது |
| சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் | 2016 ம் ஆண்டு செயலாற்றுகை அறிக்கை | பாரளுமன்றிற்கு 2017.05.12ல் சமா்ப்பிக்கப்பட்டது |
| சட்டமா அதிபா் திணைக்களம் | 2016 ம் ஆண்டு செயலாற்றுகை அறிக்கை | பாரளுமன்றிற்கு 2017.09.19ல் சமா்ப்பிக்கப்பட்டது |
| சட்டமா வரைஞா் திணைக்களம் | 2016 ம் ஆண்டு செயலாற்றுகை அறிக்கை | பாரளுமன்றிற்கு 2017..09.19ல் சமா்ப்பிக்கப்பட்டது |
| இலங்கை நீதிபதிகள் நிறுவனம் | 2014 வருடாந்த அறிக்கை | பாரளுமன்றிற்கு 2017..04.06ல் சமா்ப்பிக்கப்பட்டது |
| | 2015 வருடாந்த அறிக்கை | அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன |
| மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைச் சபை | 2015 வருடாந்த அறிக்கை | 2017.09.26ல் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படடுள்ளது. |

ஊ பாராளுமன்ற பிரச்சினைகள் மற்றும் துறைகள் சாா் கண்காணிப்பு குழு தொடா்பான முன்னேற்றம்

I. நீதி அமைச்சினால் 05 பாராளுமன்ற வினாக்களுக்கு விடையளிக்கப்பட்டுள்ளது.

II. சட்ட நடவடிக்கைகள் (ஊழல் எதிர்ப்பு) மற்றும் ஊடகம் பற்றிய 12 துறைசார் கண்காணிப்புக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. அதன்படி அக்கூட்டங்களின் போது சட்டமா அதிபர் திணைக்களம், நீதி அமைச்சு இலஞ்சம் மற்றும் ஊழல்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின்படி குற்ற நீதி நிருவாகத்தை துரிதமாகவும் வினைத்திறனுடனும் செய்வதற்கான விதப்புரைகள் உள்ளடக்கி சட்ட நடவடிக்கைள் (ஊழல் எதிர்ப்பு) மற்றும் ஊடகம் பற்றிய துறைசார் கண்காணிப்புக் குழுவினால் 2017.09.20 ஆம் திகதி அறிக்கையொன்று வழங்கப்பட்டது. அவ்வறிக்கையை அமைச்சரவைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டதன் பின்னர் 2017.10.05 ஆம் திகதி அமைச்சரவைத் துணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. அவ்விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**எ) அரசாங்க திட்டமிடல் நிகழ்ச்சித் திட்டங்களும் கண்காட்சி கூட்டிணைப்பும்**

I. “உறுதியான யுகம்” தேசிய கண்காட்சிக்காக நீதி அமைச்சின் கண்காட்சிக் கூட்டமொன்று 2017.03.31 ஆம் திகதி தொடக்கம் 2017.04.04 ஆம் திகதிவரை பண்டாரநாயக்க சர்வதேச கருத்தரங்கு மண்டப வளவில் நடாத்தப்பட்டது. அரச கரும மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக அக்கண்காட்சிக் கூடம் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது.

II. திறந்த பொருளாதாரத்திற்கு 40 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டு 2017.07.27 ஆம் திகதி தொடக்கம் 2017.07.30 ஆம் திகதி வரை நீதி அமைச்சின் கண்காட்சிக் கூடமொன்று மகரகம இளைஞர் மன்றத்தில் நடாத்தப்பட்டது.

(ஏ) 2017.01.01 தொடக்கம் 2017.09.30 வரையான வழக்குகள் சம்பந்தப்பட்ட புள்ளி விபரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

| நீதிமன்றங்கள் | 2016ஆம் ஆண்டு இறுதியிலிருந்து முன் கொணர்ந்தவை | 2017.09.30 வரையான பதியப்பட்ட வழக்குகள் எண்ணிக்கை | 2017.09.30 வரையான முடிவுறுத்தப்பட்ட வழக்குகள் எண்ணிக்கை | 2017.09.30 ஆம் திகதியில் மீதியாகவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 3,566 | 901 | 684 | 3,783 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 4,837 | 671 | 628 | 4,880 |
| வா்த்தக மேல் நீதிமன்றம | 5,882 | 604 | 360 | 6,126 |
| மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் | 6,142 | 1,344 | 1,512 | 5,974 |
| மேல் நீதிமன்றம் | 16,463 | 6,078 | 5,398 | 17,143 |
| மாவட்ட நீதிமன்றம் * | 174,490 | 32,652 | 25,225 | 181,917 |
| நீதவான் நீதிமன்றம்** | 398,062 | 299,421 | 297,892 | 399,591 |
| **மொத்தம்** | **610,358** | **341,775** | **331,836** | **620,297** |

* 82 மாவட்ட நீதிமன்றகளில ் 72 மாவட்ட நீதிமன்றகளின் தரவுகளே கிடைக்கப்பெற்றன
**100 நீதவான் நீதிமன்றகளில்80 நீதவான் நீதிமன்றகளின் தரவுகளே கிடைக்கப்பெற்றன

**ஏ) எதிர்பார்க்கப்படும் கருத்திட்டங்கள்**

| | கருத்திட்டம் | முன்னேற்றம் |
|---|---|---|
| 01 | கொழும்பு புதிய நீதிமன்ற மனை நிர்மாணிப்பு | • சீனாவின் யென்ஜியென் குறூப் கம்பெனியினால் சமர்பிக்கப்பட்ட சுயேச்சைக் கருத்திட்ட முன்மொழிவு மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டு அதன் அவதானிப்புக்கள் 2017.03.28 ஆம் திகதி பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவை குழுவிற்கு அனுப்பப்பட்டது.<br>• 2017.06.13 ஆம் திகதி அமைச்சரவையினால் இம் மும்மொழிவின் தகுதி மற்றும் கருத்திட்டத்தின் தரங்களை பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவின் கீழ் நியமிக்கப்பட்ட விசேட குழுவொன்றின் மூலம் புலனாய்வு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.<br>• பொருளாதரா முகாமைத்துவம் பற்றிய அலுவலர்கள் குழுவினால் 2017.07.04 ஆம் திகதி நிர்மாணிக்கும் மற்றும் குத்தகை அடிப்படையின் கீழ் கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு சீன கம்பனியின் சம்மதத்தை விசாரிப்பதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.<br>• சீனக் கம்பெனி அதற்காக சம்மத்தை தெரிவிக்காதபடியால் 2017.08.18 ஆம் திகதி பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அலுவலர் குழுவினால் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு முதலீட்டாளரொருவர் மூலம் திறந்த சந்தை விலைமனுக்கள் கோரப்பட்டு கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | | • 2017.09.13 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவினால் மேற்படி தீர்மானத்தை உறுதி செய்யப்பட்டது. |
| 02 | நீதிமன்ற தன்னியக்கம் | • ஆண்டில் இதுவரை 06 தொழிற்பாட்டுக் குழுக் கூட்டங்கள் ஆண்டில் நடாத்தப்பட்டுள்ளன.<br>• இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவராண்மையினால், அர்னஸ்ட் அன்ட் யங்க் நிறுவனத்தின் மூலம் செய்யப்பட்ட பூரண கற்கை அறிக்கை 2017.07.31 ஆம் திகதி கையளிக்கப்பட்டது.<br>• கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக கொள்கை ரீதியிலான அங்கீகாரம் 2017.08.22 ஆம் திகதி அமைச்சரவையினால் வழங்கப்பட்டுள்ளது.<br>• ஹங்கேரிய அரசாங்கத்தின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் நிவாரண கடன் உதவி நிகழ்ச்சித்திட்டத்தில் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அலுவலர் குழுவினால் 2017.09.08 ஆம் திகதி உள்ளடக்கப்பட்டுள்ளது.<br>• ஹங்கேரிய நிபணத்துவ குழுவொன்று அவதானிப்பு விஜயமொன்று மேற்கொண்டிருந்தது. |

## 5.7 உள்ளக கணக்காய்வுப் பிரிவு

### 5.7.1 அறிமுகம்

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்கள், மீயுயர் நீதிமன்ற முகாமைச் சபை, நீதிபதிகளின் பயிற்சி நிறுவனம். மற்றும் சட்ட உதவி ஆணைக்குழு ஆகிய மூன்று நியதிச்சட்ட நிறுவனங்கள், அமைச்சு நிருவாக செலவு விடயத்தின் துணைக் கருத்திட்டமொன்றாக தொழில்படுகின்ற மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு, நீதிமன்ற நிருவாக செலவு விடயத்தின் துணைக் கருத்திட்டமொன்றாக தொழில்படுகின்ற தொழில்நியாய சபைச் செயலகம், நீதிமன்ற நிருவாக செலவு விடயத்தின் கீழான மேல்நீதிமன்றங்கள், குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் நீதவான் நீதிமன்றங்கள் ஆகியவற்றின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் செய்யப்படுகிறது.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பணியாட்டொகுதி

- பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்
- 05 நிதி உதவியாளர்கள்
- 05 அபிவிருத்தி அலுவலர்கள்
- 03 முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும்
- 02 அலுவலகப் பணியாளர்களைக்

கொண்டுள்ளது. இவ்வலுவலர்கள் முறைகள் கணக்காய்வின் மீது விசேட கவனத்துடன் மேற்கூறிய நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வு அலுவல்களைச் செய்வதுடன் 2017 சனவரி 01 ஆம் திகதி முதல் 2017 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரை

- 11 மேல் நீதிமன்றங்கள்
- 03 மாவட்ட/ நீதவான் நீதிமன்றங்கள்
- 04 மாவட்ட நீதிமன்றங்கள்
- 07 நீதவான் நீதிமன்றங்கள்
- 01 வர்த்தக மேல்நீதிமன்றம்
- 02 திணைக்களங்கள்
- நீதி அமைச்சின் 01
- நிறுவனங்கள் 01
- விசேட 01

என்னும் வகையில் 31 பூரண கணக்காய்வுகள் நடாத்தப்பட்டுள்ளன.

## 06. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் செயலாற்றுகை

## 6.1 சட்டமா அதிபர் திணைக்களம்

**நோக்கு**

இலங்கைக்காகவும் அங்கு வாழ்கின்ற சகல மக்களுக்காகவும் நீதியையும் நியாயத்தையும் நிறைவேற்றுவதற்காக பயனுள்ளவாறு பதிலளிக்கும் செயற்பாட்டின் முன்னோடி அரச நிறுவனமாக செயல்படுதல்

**பணி**

- இலங்கையின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்வதற்காக மதிப்புடனும் அபிமானத்துடனும் நேர்மையாகவும் செயலாற்றுதல் மற்றும் எம்மால் இயன்றளவில் இலங்கை மக்களுக்கு சேவை செய்தல்
- சமுதாய மற்றும் பொருளாதார சுபீட்சம், சம சந்தர்ப்பங்கள் மற்றும் மனிதநேயத்தை ஊக்குவிக்கும் முயற்சியின் போது இலங்கை மக்களுக்காக நீதி, பாதுகாப்பு மற்றும் சுயாதீனத்தை உறுதிப்படுத்துவதற்காக பாரபட்சமின்றியும் நீதியாகவும் இலங்கையின் சட்டங்களை அமுல்படுத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் முயற்சிக்கும்.

**நோக்கம்**

- இலங்கை அரசாங்கம், அரசாங்க நிறுவனங்கள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளுக்காகத் தேவையான சகல சட்ட முறையான சேவைகள் மற்றும் சட்ட ஆலோசனைகளை உடனடியாக வழங்கல் மற்றும் அரசாங்கத்தின் விரிவான குறிக்கோள்களை விஸ்தரிப்புச் செய்யும் செயற்பாட்டின் போது விசேடித்த பணியொன்றை நிறைவேற்றுதல்.

### 6.1.1 அறிமுகம்

சட்டமா அதிபர், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு சார்பாக தோன்றும் தலைமைச் சட்ட ஆலோசகர் என்பதுடன் திணைக்களத்தின் தலைவராகவும் பொறுப்புக் கூறும் உத்தியோகத்தராகவும் கடமையாற்றுகின்றார். சட்டமா அதிபர் திணைக்களமானது "ஏ" வகுப்பு திணைக்களம் என்பதுடன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.09.21 ஆம் திகதிய 1993/13 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானி பிரகடனத்தின் பிரகாரம் நீதி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் வருகின்றது.

சட்டமா அதிபர் திணைக்களமானது, மத்திய அரசு, மாகாண சபைகள், அரச திணைக்களங்கள், நியதிச் சட்டச் சபைகள் மற்றும் அரச பங்களிப்பு நிறுவனங்களுக்கு சட்ட உதவியை வழங்கி வருகின்றது. திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர்கள், சிவில், குற்றவியல், அரசியலமைப்பு மற்றும் வர்த்தக விடயங்களில் அரச மற்றும் அரச சார்பான நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் இலங்கையிலுள்ள உயர் நீதிமன்றம் ஏனைய நீதிமன்றங்கள் தொழில் நியாய சபைகள் என்பவற்றில் தொடரப்பட்ட வழக்குகளில் அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்கள் சார்பாகத் தோன்றுவர்.

சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளுக்காக திணைக்களத்தில் முறையே சிவில் பிரிவு குற்றவியல் பிரிவு மற்றும் அரச சட்டத்தரணிகள் பிரிவு ஆகிய மூன்று அலகுகள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் நிருவாக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தாபனப் பிரிவும் கணக்குப் பிரிவும் தாபிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மேற்கூறப்பட்ட அலகுகளுக்கு மேலதிகமாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் முறையாக நடைபெறுவதற்கு கூட்டுத்தாபனப் பிரிவு, மேலதிக அவசரகால சட்டத்தின் கீழ் கடமைகளை மேற்கொள்ள மேலதிக அவசரகால

ஒழுங்குவிதிகளின் கீழான பிரிவு, சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு, குடிவரவு மற்றும் குடியகல்வுப் பிரிவு, பொதுமக்கள் மனுப் பிரிவு மற்றும் உயர்நீதிமன்ற அலகு ஆகியன தாபிக்கப்பட்டுள்ளன.

### 6.1.2 சட்டமா அதிபர் திணைக்களத்தின் கடமைகள்

- சிவில், குற்றவியல், அரசியலமைப்புச் சட்டம், வர்த்தகம் போன்ற விடயங்கள், சர்வதேச சட்ட நடவடிக்கைகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பான விடயங்கள் என்பன தொடர்பாக அரசாங்கத்திற்கும் அரச நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கல்
- உயர் நீதிமன்றம் ஏனைய நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நியாய சபைகளில் தொடரப்பட்ட வழக்குகளில் அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தல்
- புதிய சட்டங்களை சட்டவாக்கம் செய்யும் போதும் நடைமுறையிலுள்ள சட்டங்களைத் திருத்தும் போதும் தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குதல்.

மேற்கூறப்பட்ட கடமைகளை மேற்கொள்வதற்கு திணைக்களத்தின் பின்வரும் பிரிவுகள் உதவுகின்றன.

- குற்றவியல் பிரிவு
- சிவில் பிரிவு
- அரச சட்டத்தரணிகள் பிரிவு
- உயர் நீதிமன்றப் பிரிவு
- கூட்டுத்தாபனப் பிரிவு

மேலும் திணைக்களத்தின் தங்குதடையின்றிய செயற்பாடுகளுக்கு சிறப்பாக இனங்காணப்பட்ட பொறுப்புக்களையுடைய சிறப்புப் பிரிவுகள் உள்ளன.

- பொதுமக்கள் மனு அலகு (இப் பிரிவு மக்கள் மனுக்கள் தொடர்பில் வழக்குகளை கையாளும்)
- சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு (இப் பிரிவு சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளை கையாள்வதற்கு தாபிக்கப்பட்டுள்ளது)

மேற்கூறப்பட்ட பிரிவுகளும் அலகுகளும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் முக்கிய செயற்பாடுகளை கையாளுகின்றன. அத்துடன் இத் திணைக்களத்தின் நிருவாக நடவடிக்கைகளுக்காக கணக்குப் பிரிவும் தாபனப் பிரிவும் தாபிக்கப்பட்டுள்ளன.

### 6.1.3 2017.01.01 தொடக்கம் 2017.09.30 வரையான காலப்பகுதிக்கான ஒவ்வொரு பிரிவுகளினதும் முன்னேற்றம்

| பிரிவுகள் | திறக்கப்பட்ட வழக்குக் கோப்புகள் | கோவையிடப்பட்ட குற்றச்சாட்டுகள் | வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் | விடுவிக்கப் பட்டவை | மூடப்பட்ட வழக்குகள் |
|---|---|---|---|---|---|
| சிவில் பிரிவு | 2,117 | - | - | - | 283 |
| குற்றவியல் பிரிவு | 3,044 | 1,167 | 879 | 336 | 2,431 |
| அரச சட்டத்தரணிகள் | 127 | - | - | - | 1,010 |
| உயர் நீதிமன்றப் பிரிவு | 412 | - | - | - | 41 |
| கூட்டுத்தாபனப் பிரிவு | 1,331 | - | - | - | 1,385 |
| பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு | 1,596 | 2,273 | 178 | 37 | 2,486 |
| பொதுமக்கள் மனுக்கள் பிரிவு | 486 | - | - | - | 222 |
| மொத்தம் | 9,113 | 3,440 | 1,057 | 373 | 7,858 |

- சிவில் பிரிவில் பதியப்பட்ட அதிகமான வழக்குகள் அரச சட்டத்தரணிகள் பிரிவினால் கையாளப்படுகின்றன என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

**6.1.4 சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள்**

| கருத்திட்டம் | மொத்த மதிப்பீடு ரூபா மில். | 2017 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு | 2017.09.30 - நிதி ரீதியான முன்னேற்றம் | | 30.09.2017 பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா மில். | % | |
| புதிய அலுவலக கட்டிடம் அமைத்தல் | 1,182.00 | 500.00 | 88.09 | 18% | 18% |
| மன்னார் அரச விடுதி அமைத்தல் | 26.50 | 3.00 | 1.85 | 62% | 50% |
| வவுனியா அரச விடுதி அமைத்தல் | 26.50 | 5.00 | 3.63 | 73% | 85% |
| **மொத்தம்** | **1,235.00** | **508.00** | **93.57** | **18%** | -- |

**6.1.5 2017.01.01 - 2017.09.30 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | 2017 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு (ரூபா மில்) | 2017.09.30 வரையான செலவு (ரூபா மில்) | 2017.09.30 நிதி ரீதியான முன்னேற்றம் |
|---|---|---|---|
| *மீண்டெழும் செலவினம்* | 713.91 | 525.17 | 74% |
| *மூலதன செலவினம்* | 608.50 | 134.01 | 22% |
| **மொத்தம்** | **1,322.41** | **659.18** | **50%** |

## 6.2. சட்டவரைஞர் திணைக்களம்

**நோக்கு**

அரசாங்கத்தின் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுவதன் மூலம் நல்லாட்சியை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திற்குத் துணைபுரிதல்.

**பணி**

அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுவதில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அத்தகைய சட்டவாக்கத்தின் வரைதல் அரசியலமைப்பிற்கிணங்கச் செய்யப்படுதல்.

### 6.2.1 அறிமுகம்

சட்டவரைஞர் திணைக்களம்,"A"தரத்திலான அரசாங்கத் திணைக்களமொன்றாகவுள்ளது. அதியுத்தம சனாதிபதி அவர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் பணியாற்றிய இத் திணைக்களம், 18.01.2015ஆந் தேதிய 1897/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின்படி நீதிமற்றும் தொழில் அலுவல்கள் அமைச்சரின் நேரடி மேற்பார்வையின் கீழ் வந்ததுடன், இத்திணைக்களம் 21.09.2015 ஆந் தேதிய 1933/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின்படி நீதியமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் பணியாற்றுகின்றது.

சட்டவரைஞர் திணைக்களத்தின் முக்கியபணி, அரசியலமைப்புக்கிணங்கவும் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட முடிபுகளுக்கு இணங்கவும் பல்வேறு விடயங்கள் பற்றிய அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கங்களாக உருமாற்றுதலாகும். அரசாங்கத்தின் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுகின்ற நடைமுறையில் இத்திணைக்களமானது, புதியசட்டவாக்கங்களை ஆக்குவதற்கும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் சட்டமூலங்களை வரைகின்றதுடன், பல்வேறு அரசாங்க அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களையும் மீளாய்வு செய்கின்றது. இத்திணைக்களத்துக்குப் பொறுப்பிக்கப்பட்ட ஏனைய கடமைகள், வரைவுச் சட்டமூலங்களைப் பரிசீலனை செய்வதற்குக் கூட்டப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றுவதனையும் சட்டமூலங்கள் விவாதத்துக்கு எடுக்கப்படும்போது பாராளுமன்றத்தில் சமூகமாயிருப்பதனையும் பாராளுமன்றத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுவதனையும் உள்ளடக்கும். அரசகூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்டமுறையான குழுக்களும் உட்பட, இத்திணைக்களம் எல்லா அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சேவைகளை வழங்குகின்றது. பல்வேறு சட்டமூலங்களையும் துணைநிலைச் சட்டவாக்கங்களையும் தயாரித்தல் தொடர்பாக இத்திணைக்களமானது அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சட்டமதியுரையையும் வழங்குகின்றது.

### 6.2.2 சட்டமூலங்களை வரைதல் தொடர்பாக திணைக்களத்தின் பணிகள் பின வருமாறாகும்

(1) புதிய சட்டவாக்கங்களை மும்மொழிகளிலும் ஆக்குவதற்கும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் என சட்டமூலங்களை வரைதல்.

(2) துணை நிலைச் சட்டவாக்கங்களை மீளாய்தலும் மற்றும் (அவசியமானவிடத்து) அவற்றை மும்மொழிகளிலும் வரைதலும்.

(3) சட்டங்களைத் தயாரித்தலுடன் சம்பந்தப்பட்ட பாராளுமன்றக் கடமைகளைப் புரிதல்.

(4) மாகாண சபை நியதிச்சட்டங்களை வரைதல்.

(5) தனிப்பட்ட உறுப்பினா் சட்டமூலங்களை (கூட்டிணைத்தல்களின் வரைவுச் சட்டமூலங்கள்) மும்மொழிகளிலும் மீளாய்தல்.

சட்டங்களையும், துணைநிலைச் சட்டவாக்கங்களையும், மாகாணசபை நியதிச்சட்டங்களையும் வரைதல் தொடர்பில் இத்திணைக்களம் சட்ட மதியுரையையும் வழங்குகின்றது.

இத்திணைக்களத்தின் தனித்துவமான சிறப்புக்கூறு என்னவெனில், இத்திணைக்களம் அதன் சொந்தக் கட்டமைக்கப்பட்ட வேலை நிகழ்ச்சித் திட்டத்தைக் கொண்டிருப்பதில்லை என்பதாகும். இதற்கான காரணம், திணைக்களத்தின் வேலை நிகழ்ச்சித்திட்டம், தேவைப்பட்ட கொள்கை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதன் மேல், கொடுக்கப்பட்டவொரு நேரத்தில், அரசாங்க அமைச்சுக்களினதும், அத்தகைய அமைச்சுக்களின் கீழுள்ள பல்வேறு திணைக்களங்களினதும் சட்டமாக்கல் தேவைகளின் மீது அவசியமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளமையாகும். ஆதலால், சட்டவரைஞர் திணைக்களத்தின் செயல் நிறைவேற்றுகைப் பதிவு, ஏதேனும் குறிப்பிட்ட ஆண்டு பூராகவும் முறையான துறைசார் அமைச்சுக்களினால் அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முதனிலை மற்றும் திருத்தச் சட்டவாக்கங்களுக்காக அத்துடன் துணைநிலைச் சட்டவாக்கங்களுக்காகச் செய்யப்பட்ட வேண்டுகோள்களை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதன் அடிப்படையின் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது. இத்திணைக்களத்தின் பிரதான பணியாகவுள்ள சட்டவாக்கங்களை வரைதலின் நோக்கெல்லையினுள் அடங்குகின்ற ஏதேனும் வடிவத்திலான சட்டவாக்கம் வேண்டுகோள் விடுக்கும் அமைச்சுக்கு அல்லது திணைக்களத்துக்கு அது அனுப்பப்படுவதற்கு முன்னர் மும்மொழிகளிலும் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

## 6.2.3 2017.01.01 இலிருந்து 2017.09.30 வரையான முன்னேற்றமீளாய்வு

**6.2.3.1 வேலைகள் முடித்துக்கொண்டுள்ள கோவைகளின் விபரம்** – (2017.01.01 - 2017.09.30)

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| கடமையின் தன்மை | 01.01.2017 அன்றுள்ளவாறு முதனிலைஅல்லதுபூர்த்திசெய்யப்பட்டசட்டமூலங்களாகச் சமர்ப்பிக்கப்பட்டு, ஆனால் சட்டத்துறைத் தலைமையதிபதியினதுஅல்லதுஏனைய அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் அவதானிப்புகள் அல்லதுஅறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெறவுள்ளகோரிக்கைகளின் எண்ணிக்கை | 2017.01.01அன்றுள்ளவாறு வரைதல் பூர்த்திசெய்யப்பட்டிராதகோரிக்கைகளின் எண்ணிக்கை | ஆண்டினுள் திறத்தவர்களிடமிருந்துபெறப்பட்டகோரிக்கைகளின் எண்ணிக்கை | இவ்வாண்டிலும் முன்னையஆண்டுகளிலும் மூன்றுமொழிகளிலும் பூரத்திசெய்யப்பட்டு இயைபானதிறத்தவர்களுக்குதிருப்பிஅனுப்பப்பட்டவையும் மற்றும் மேலதிகதிருத்தங்களுக்காகபுதியஅறிவுறுத்தல்களுக்காகமீளஅனுப்பப்படவையும் | மொத்தம் |
| சட்டமூலங்களை வரைதல் (முதன்மைச் சட்டவாக்கங்களும்.சட்டவாக்கங்களின் திருத்தமும்) | 138 | 21 | 53 | 24 | 236 |
| தனிப்பட்டஉறுப்பினர்களின் (கூட்டிணைத்தல்) சட்டமூலங்கள் | 108 | | 28 | - | 136 |
| துணைநிலைச் சட்டவாக்கங்களின் திருத்தம். (முதனிலைமற்றும் திருத்த) | 119 | 17 | 124 | 18 | 278 |
| மாகாணசபைகளின்.நியதிச்சட்டங்கள் | 23 | 2 | 2 | - | 27 |

| | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|
| கடமையின் தன்மை | மூன்றுமொழிகளில் பூர்த்திசெய்யப்பட்டு 30.09.2017 அன்றுள்ளவாறு பையானதிறத்தவர்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டவையுமான கோரிக்கைகள் (பூர்த்திசெய்யப்பட்டு பலதடவைகள் வெளியே அனுப்பப்பட்டவையுமான இறுதி வரைவுகள்,ஒவ்வொரு தடவையும் அனுப்பப்பட்ட வரைவு உள்ளடங்கலாக | நீண்டகாலமாக அறிவுறுத்தலின்மையால் மூடப்பபட்டகோப்புகளின் எண்ணிக்கை | 30.09.2017 அன்றுள்ளவாறு முதனிலை அல்லது பூர்த்தி செய்யப்பட்ட சட்டமூலங்களாகச் சமர்ப்பிக்கப்பட்டு, ஆனால் சட்டத்துறைத் தலைமையதிபதியினது அல்லது ஏனைய அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் அவதானிப்புகள் அல்லது அறிவுறுத்தல்களுக்காக எதிர்பார்க்கப்பட்டுள்ளவையுமான கிடைக்கப்பெற்றுள்ளவையுமான கோரிக்கைகளின் எண்ணிக்கை | 30.09.2017 அன்றுள்ளவாறு பூர்த்தி செய்யப்படாத வரைவுகள் தொடர்பிலானகோரிக்கைகளின் எண்ணிக்கை |
| சட்டமூலங்களை வரைதல் (முதன்மைச் சட்டவாக்கங்களும் சட்டவாக்கங்களின் திருத்த(மும்) | 50 | 6 | 170 | 10 |
| தனிப்பட்டஉறுப்பினர்களின் (கூட்டிணைத்தல்)சட்டமூலங்கள் | 6 | 1 | 129 | |
| துணைநிலைச் சட்டவாக்கங்களின் திருத்தம். (முதனிலைமற்றும் திருத்த) | 140 | - | 101 | 37 |
| மாகாணசபைகளின் நியதிச்சட்டங்கள் | 1 | - | 24 | 2 |

குறிப்பு :

1. நிரை 9 மற்றும் 10 முதனிலை அல்லது பூர்த்தி செய்யப்பட்ட சட்டமூலங்களாகச் சமர்ப்பிக்கப்பட்டு, ஆனால் சட்டத்துறை தலைமையதிபதியினதும் ஏனைய அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் அவதானிப்புகள் அல்லது அறிவுறுத்தல்களுக்காக எதிர்பார்த்துள்ள கோரிக்கைகளின் எண்ணிக்கையும் வரைவு பூர்த்தி செய்யப்படாதவை தொடர்பிலான கோரிக்கைகளின் எண்ணிக்கை.

இத் திணைக்களத்தினால் கவனத்துக்கெடுக்கப்பட்டு, பூர்த்திசெய்யப்பட்டு அனுப்பப்பட்ட கோரிக்கையொன்று, முக்கியமாக அறிவுறுத்தும் முகவராண்மைகள் கொள்கையை மாற்றிக்கொண்டிருப்பதன் காரணமாக மேலதிகத் திருத்தங்களாகப் புதிய அறிவுறுத்தல்களுடன் மீண்டும் அனுப்பிவைக்கப்படக்கூடும். எவ்வாறாயினும், அத்தகையவொரு கோரிக்கை பெறப்படும்போது, அது முன்னரே இறுதியாக்கப்பட்டிருப்பதனைப் பொருட்படுத்தாது, இத்திணைக்களம், ஒரு புதிய கோரிக்கைக்குக் கொடுக்கின்ற அதே நேரத்தையும் கவனத்தையும் அதற்காக அர்ப்பணித்து அதனைக் கவனத்துக்கெடுக்க வேண்டியுள்ளது. மேலும், பூர்த்திசெய்யப்பட்ட வரைவுகளுக்கு அத்தகைய திருத்தங்களுக்கான கோரிக்கைகள், இறுதிவரைவு மும்மொழிகளிலும் அனுப்பப்பட்ட பின்னருங் கூட செய்யப்படுகின்றனவென்பதுடன், சிலவேளைகளில் இந்நடவடிக்கை முறை பலதடவைகள் இடம்பெறுகின்றது. பின்வருவன சில உதாரணங்களாகவுள்ளன:-

| சட்டமூலத்தின் பெயர் | வரைவுவெளியில் அனுப்பப்பட்டதடவைகளின் எண்ணிக்கை (30.09.2017 என்றுள்ளவாறு) |
|---|---|
| தேசியக் கணக்காய்வுச் சட்டமூலம். | 22 |
| மோட்டார் வாகனச் சட்டமூலம். | 22 |
| ஆரச காணி (விசேடஏற்பாடுகள்) சட்டமூலம். | 13 |
| குாணி வங்கிகளைத் தாபிப்பதற்கானசட்டமூலம். | 13 |
| குாணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டம். | 14 |
| ஜெனரால் சேர் ஜோன் கொத்தலாவலைதேசியப் பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலம். | 10 |
| இலங்கைநிலைபெறுதகுஅபிவிருத்திச் சட்டமூலம். | 15(குழுநிலைதிருத்தங்கள் உள்ளடங்கலாக) |
| வலிந்துதவுசமூகசேவைகள் (பதிவுசெய்தலும் மேற்பார்வைசெய்தலும்) சட்டமூலம். | 11 |
| தேசியக் கண் வங்கிச் சட்டமூலம். | 09 |
| உள்ளூரதிகாரசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம். | 15(குழுநிலைதிருத்தங்கள் உள்ளடங்கலாக) |

ஆதலால், கோரிக்கையொன்று இத்திணைக்களத்தினால் கவனத்துக்கெடுக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டிருப்பினும் கூட, இவை,“பூர்த்திசெய்யப்பட்டிராத கோரிக்கைகள்” என்றவகுதியில் தொடர்ந்தும் பிரதிபலிக்கப்படக்கூடும்.

**2. தனிப்பட்ட உறுப்பினர்களின் சட்டமூலங்கள் (கூட்டிணைத்தல் பற்றி)**

அமைச்சரவையின் உபகுழுவினால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க, கணக்காய்வுச் சட்டமூலம், தகவலுக்கான உரிமைச் சட்டமூலம் மற்றும் அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகள் தொடர்பான சட்டமூலம் என்பன சட்டமாக்கப்படும் வரை, தனிப்பட்ட உறுப்பினர்களின் சட்டமூலங்கள் (கூட்டிணைத்தல்) தொடர்பான மேலதிக அறிவித்தல் பெறப்படும்வரை, தற்காலிகமாக பணிநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஆகவே, 2017.09.30 அன்றுள்ளவாறு நிறுத்திவைக்கப்பட்டு பூர்த்திசெய்யப்படாத தனிப்பட்ட உறுப்பினர்களின் சட்டமூலங்களின் எண்ணிக்கை (கூட்டிணைத்தல்பற்றி) 129ஆகவுள்ளது.

**3. சட்டமூலங்கள் (முதன்மைச் சட்டவாக்கங்களும் சட்டவாக்கங்களைத் திருத்துதலும்)**

நிறைவேற்றப்படாத 10 சட்டமூலங்கள் (முதன்மைச் சட்டவாக்கங்களும் சட்டவாக்கங்களின் திருத்தமும்) இயைபான அமைச்சுக்களினதும், திணைக்களங்களினதும், நிறுவனங்களினதும் அறிவுறுத்தல்களை அல்லது அவதானிப்புகளை அல்லது அமைச்சரவையின் அங்கீகாரத்தைக் கொண்டிராதவையாக அல்லது இன்னமும் கலந்துரையாடலின் கீழுள்ளவையாக உள்ளன.

**4. துணைநிலைச் சட்டவாக்கங்களை மீளாய்தல்**

மீளாய்வு பூர்த்திசெய்யப்படாத 17 கோரிக்கைகள் தொடர்பாக (துணைநிலைச் சட்டவாக்கங்கள்) இயைபான அமைச்சுக்களினதும், திணைக்களங்களினதும், நிறுவனங்களினதும் அறிவுறுத்தல்கள் அல்லது அவதானிப்புகள் பெறப்பட்டிராதவையாக அல்லது இன்னமும் கலந்துரையாடலின் கீழுள்ளவையாக உள்ளன.

**6.2.3.2 01.01.2027 இலிருந்து 30.09.2017 வரையிலான நிதி முன்னேற்றறிக்கை**

| விபரம் | 2017 ஆம் ஆண்டுக்கான நிதியேற்பாடுகள் (ரூபா.மி) | 30.09.2017 அன்றுள்ளவாறானசெலவினம் (ரூபா.மி) | 30.09.2017 அன்றுள்ளவாறான முன்னேற்றறிக்கை (ரூபா.மி) |
|---|---|---|---|
| மீண்டும் வரும் செலவினம் | 109.20 | 71.14 | 65% |
| மூலதனச் செலவினம் | 30.20 | 19.55 | 65% |
| மொத்தம் | 139.40 | 90.69 | 65% |

## 6.3 சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்

1969ம் ஆண்டின் 03ம் இலக்க இலங்கை சட்டஆணைக்குழு சட்டத்தின்மூலம் இலங்கை சட்ட ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. இது சட்ட மறுசீரமைப்பை மேற்கொள்ளும் பிரதான அரசாங்க நிறுவனமாகும். சட்ட ஆணைக்குழு திணைக்களத்தின் பிரதான பணி தேவையான நிருவாக மற்றும் ஆராய்ச்சி உதவிகளை வழங்குவதாகும்.

**நோக்கு**

- நல்லாட்சிக்காக சட்ட மறுசீரமைப்பை மேம்படுத்தல்.

**செயற்பணிகள்**

- சட்ட மறுசீரமைப்பை மேம்படுத்துவதற்காக 1969 ம் ஆண்டின் 03 ம் இலக்க சட்ட ஆணைக்குழுச் சட்டத்தால் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட மற்றும் விதிக்கப்பட்ட பணிகளை அமுல்படுத்தல்.

### 6.3.1 நோக்கமும் தொழிற்பாடுகளும்

சட்ட ஆணைக்குழுவின் பிரதான நோக்கம் சட்ட மறுசீரமைப்பை விருத்திசெய்வதாகும். அதற்காக சட்டஆணைக்குழு பின்வரும் பணிகளை ஆற்றுகிறது.

I. சட்டத்தை குறியீடுசெய்தல்
II. முரண்பாடுகளை ஒழித்தல்
III. சட்டத்தை முறையாக அபிவிருத்தி செய்து மறுசீரமைப்பதற்காக பொருள் அளவிலானதும் நடவடிக்கைமுறை சார்ந்ததுமான சட்டத்தை மீளாய்வு செய்தல்
IV. வழக்கொழிந்த மற்றும் அனாவசியமான சட்டங்களை அகற்றுதல்
V. சட்டத்தை எளிதாக்குதலும் நவீனமயப்படுத்தலும்
VI. சட்டத்தை மறுசீரமைப்பதற்காக எவ்வாறான பிரேரணைகளையும் பெற்று பரிசீலித்தல்
VII. மறுசீரமைப்பதற்காக காலத்திற்குகாலம் சட்டத்தின் வெவ்வேறு பிரிவுகளை ஆராய்வு செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்து அமைச்சருக்கு வழங்குதல்
VIII. ஏனைய நாடுகளின் சட்டமுறை சம்பந்தமான தகவல்களை பெறல்
IX. துணைச் சட்டவாக்கங்கள் நன்கு ஏற்றுக்கொண்ட கோட்பாடுகளுக்கும் சட்டத்திற்கும் இயைபானதென்பதை, பாதுகாக்கும் எண்ணத்துடன் பாராளுமன்றம் அல்லாத வேறு சபைகளால் துணைச் சட்டங்களை ஆக்கும் அதிகாரத்தை அமுல்படுத்துவதை நிரந்தரமாக மீளாய்வு செய்தல்.
X. வழக்காடுதல் சம்பந்தப்பட்ட நிருவாகத் தன்மையின் நடவடிக்கை முறை உட்பட சட்ட நடவடிக்கை முறைகளை பகுத்தறிவு செய்தல் மற்றும் இலகுபடுத்துவதற்காக நிகழ்ச்சித் திட்டங்களை முறையாகத் தயார் செய்தல்.
XI. சிங்களம், தமிழ் ஆங்கிலம் ஆகியமொழிகளில் சட்டத்தை குறியீடுசெய்வதற்கு நிகழ்ச்சித் திட்டங்களைத் தயார் செய்தல்.

### 6.3.2 2017.01.01 தொடக்கம் 2017.09.30 வரையான முன்னேற்றம்

| 1) முதியோர்கள் சம்பந்தப்பட்ட சட்டத்துக்கான திருத்தம் | |
|---|---|
| பின்னணி | முதியோர்களுக்காக தற்போதுள்ள சட்டமுறையான பாதுகாப்பை வலுப்படுத்தல் |
| தற்போதைய நிலைமை | கலந்தாலோசனை நடைபெறுகிறது. |
| 2) கைதுசெய்யும் சட்டத்துக்கான திருத்தம் | |
| பின்னணி | பொலிஸ் அலுவலர்களுக்குரிய கைது செய்யும் நியதிச்சட்ட அதிகாரம் சம்பந்தப்பட்ட நடைமுறைக்கோவையை மீள்நோக்குதல். |
| தற்போதைய நிலைமை | கலந்தாலோசனை நடைபெறுகிறது. |

| | |
|---|---|
| *3) ஜினீவா சமவாயத்தின் அரசாங்கத்திறத்தவராக ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கையின் கடப்பாடுகளைக் கவனத்திற்கொண்டு 2006 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஜினீவா சமவாயச்சட்டத்தை மீளாய்வு செய்தல்.* | |
| பரிந்துரை | மீளாய்வுசெய்தல் |
| பின்னணி | 2006 ஆம்ஆண்டின் 4 ஆம் இலக்க ஜினீவா சமவாயச்சட்டத்தை மீளாய்வு செய்தல். |
| தற்போதைய நிலைமை | கலந்தாலோசனை நடைபெறுகிறது. |
| 4) பராயமடையாதவர்கள் இறந்துவிடுவதன் மீது நட்டாீடுசேதம் அறவிடுதல் | |
| பின்னணி | நீதி அமைச்சினால் சட்டஆணைக்குழுவின் அவதானிப்புக்காக 2017.05.08 ஆம் திகதி இத்திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டது.<br>*கவனயீனம் அல்லது திடீர் விபத்தொன்றின் காரணமாக பராயமடையாத பிள்ளை ஒருவரின் மரணம், ஏற்பட்டபோது. அதன் பிரதிபலனாக அப்பிள்ளையின் பெற்றோருக்கு ஏற்படுகின்ற உள மற்றும் மனவேதனைக்காக வழக்கொன்றை தொடுப்பதனால் நட்டாீடுசேதம் அறவீடுசெய்துகொள்வதற்கு. அப்பெற்றோர்களுக்கு முடியாமை உரோமடச்சுசட்டத்தின் நிலைப்பாடாகியுள்ளது. மேற்கூறிய நிலைப்பாடு தற்காலத்தில் நீதியின் கோட்பாடுகளுக்கு இசைவாக இல்லை. மூன்றாம் திறத்தவரின் கவனயீனம் காரணமாக பராயமடையாதபிள்ளை ஒருவரின் மரணம் நடைபெற்றபோது அதன்பிரதிபலனாக பெற்றோர்களுக்கு ஏற்படுகின்ற உளமற்றும் மனவேதனைக்காக நட்டாீடுசேதம் அறவீடுசெய்து கொள்வதற்கு அப்பிள்ளையின் பெற்றோர்களுக்கு முடிந்ததாக இருக்கவேண்டும். மூன்றாம் திறத்தவரின் கவனயீனம்பராயமடையாத பிள்ளை ஒருவரின் மரணத்திற்கு காரணமாகும் போது, அப்பிள்ளையின் பெற்றோர்களுக்கு ஏற்படுகின்ற மனவேதனைக்காகவும்,அப்பிள்ளையின் எதிர்கால உழைப்பு இழப்புக்காகவும் நட்டாீடுசேதம் அறவீடுசெய்து கொள்வதற்கு அப்பிள்ளையின் பெற்றோர்களுக்கு முடிந்ததாக இருக்கவேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதற்காக சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கான திருத்தம்.* |
| தற்போதைய நிலைமை | *பராயமடையாத பிள்ளை ஒருவருக்குப்பதிலாக அக்குடும்பத்தின் வேறு எவரேனும் பெண் அல்லது ஆண்பிள்ளை ஒருவரின்மரணம் ஏற்பட்டசந்தர்ப்பமொன்றிலும் கூடநட்டாீடுசேதம் அறவீடு செய்துகொள்வதற்கு முடிந்ததாக இருக்கவேண்டுமென்பது சட்டஆணைக்குழுவின்கருத்தாகிறது. இது சம்பந்தமாக ஆணைக்குழுவினால் நீண்ட கலந்தாலோசனையொன்றின் இறுதியில் பல கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இணங்கிய நிபந்தனைகளின் மீது சட்டமூலத்தைவரைவு செய்து, சட்ட ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்கு சட்டவரைஞராகிய திருமதி. தீபானிகுமாரஜீவ அவர்களால் பொறுப்பேற்கப்பட்டது.* |
| *5)* 2007 ஆம்ஆண்டின் 7 ஆம்இலக்ககம்பெனிகள்சட்டத்துக்கானதிருத்தங்கள் | |
| பின்னணி | 2007 ஆம்ஆண்டின் 7 ஆம் இலக்ககம் பெனிகள் சட்டத்துக்கான திருத்தங்கள்.<br>2017.06.22 ஆம் திகதி பிரதமர் அலுவலகத்தால் சட்ட ஆணைக்குழுவிடம் இத் திருத்தம் ஆராய்ந்துப்பார்ப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டது.<br>*நிருவாகிகள் மற்றும் ஒடுக்குதல் சம்பந்தமாக தற்போதுள்ள ஏற்பாடுகள் இக் கருமத்திற்காக போதுமானதல்ல என இனங்காணப்பட்டுள்ளது. விசேடமாக, கம்பெனியொன்று தொடர்பாக ஆகும் போது, கலைத்தல் ஒருமுறை நடாத்தும்போது அவற்றின் இயற்கை முடிவாகிய கம்பெனிகலைத்தல்வரை அச்செயல்கள் ஆகுவதனால், மீண்டும் உருவாக்குவதற்கானவாய்ப்பு இல்லை. நிருவாகிகள் சம்பந்தமாக சட்டத்தில் தற்போது உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகள் கம்பெனியாலே செய்யப்படுகின்ற கோரிக்கைக்கு மட்டுப்படுகிறது.* |
| தற்போதைய நிலைமை | *கலந்தாலோசனை நடைபெறுகிறது.* |
| 6) மணநீக்கம், கட்டுக்காப்பு மற்றும் பிரிமனைப் பணம் சம்பந்தப்பட்ட சட்டம் | |
| பின்னணி | *மீளச்சீர்செய்து கொள்ள முடியாத விவாக முறிவுகள் சம்பந்தப்பட்ட மணநீக்கம், பிரிமனைப் பணம் மற்றும் கட்டுக்காப்பு பற்றிய தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் அவ் விடயங்களை இலகுவாக புரிந்து கொள்ளகூடியவாறு முறைப்படி தயார் செய்து அச்சட்டங்கள் மற்றும் கட்டளைச்சட்டங்கள் அனைத்தும் ஒன்றுசேர்த்து ஒரே கட்டளைச் சட்டமாகக் கோவைப்படுத்தல்.*<br>*கட்டுக்காப்பு : பிள்ளையின்நன்மைக்காக*<br>*பிரிமனைப்பணம் : நியாயமான மற்றும் நீதியான நியாயாதிக்கம்*<br>*பராமரிப்பு : நியாயாதிக்கத்தை நீதவான் நீதிமன்றத்திற்கல்ல மாவட்ட நீதிமன்றத்திற்கு உரித்தாக்க வேண்டுமென்பதுடன், தண்டிப்பதற்கான அதிகாரத்தையும் மாவட்ட நீதிமன்றத்திற்கு உரித்தாக்க வேண்டும்.* |
| தற்போதைய நிலைமை | *இவ் விடயம் சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டு சட்டவாக்கத்தை வரைவதற்காக அப் பரிந்துரைகள் சட்டவரைநராகிய திருமதி. தீபானிகுமாரஜீவ அவர்களுக்கு கையளிக்கப்பட்டன.* |

### 6.3.3 2017.09.30 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | ஒதுக்கம் (ரூபா. மில்.) | செலவு (ரூபா. மில்.) | 2017-09-30 (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 15.34 | 11.19 | 72% |
| மூலதன செலவினம் | 1.95 | 1.51 | 77% |
| **மொத்தம்** | **17.29** | **12.70** | **73%** |

## 6.4 அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்

**நோக்கு**

நியாயமான சட்டத்தை மதிக்கின்ற சமுதாயத்தைக் கட்டியேழுப்புதல்

**செயற்பணிகள்**

நீதிமன்றங்கள், சட்டத்தை அமுல்படுத்துகின்ற நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு சட்ட மருத்துவ, மற்றும் உணவு விஞ்ஞானம் பற்றிய பகுப்பாய்வு, அறிவுரை மற்றும் மதியுரை சேவைகளை வழங்குதல்.

### 6.4.1 செயற்பாடுகள்

இலங்கையிலுள்ள ஒரேயொரு சட்ட ஆய்வுகூடமான அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் உணவு விஞ்ஞானப்பிரிவு, தடயவியல் விஞ்ஞானப்பிரிவு ஆகிய இரு பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளது. உணவு விஞ்ஞானப் பிரிவானது உணவு, மதுபானம், பால் மற்றும் நீர் ஆகிய நான்கு ஆய்வுகூடங்களை உள்ளடக்கியுள்ளது. தடயவியல் விஞ்ஞானப் பிரிவானது எறிபடை தடயவியல் பிரிவு, நீர்ப்பாய தடயவியல் மற்றும் DNA பிரிவு, நச்சு தடயவியல் பிரிவு, வெடிபொருட்கள் மற்றும் தீ புலனாய்வுப் பிரிவு, போதைப் பொருள் தடயவியல் பிரிவு, சந்தேகத்திற்குரிய ஆவணங்கள் தடயவியல் பிரிவு, மற்றும் நானாவித தடயவியல் பிரிவு ஆகிய ஏழு துறைகளைக் கொண்ட உப பிரிவுகளைக் கொண்டுள்ளது.

அறிவுரைகள் ஆலோசனைகள் மற்றும் விஞ்ஞான சேவைகள் வழங்குவதன் மூலம் இது சேவை வழங்கும் ஒரு திணைக்களமாவதுடன் நீதிமன்றங்கள், பொலிஸ், சுங்கத் திணைக்களம், மதுவரி திணைக்களம், துறைமுகங்கள், உள்ளுராட்சி நிறுவனங்கள், சுகாதாரம், பிற அரசாங்க திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் இருந்துபெறப்படும் சான்றுப் பொருட்களை விஞ்ஞான பரிசோதனை மற்றும் ஆய்வு செய்து ஆய்வு அறிக்கைகளை வழங்குகிறது. இதற்கு மேலதிகமாக பல்வேறு அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அரசாங்க அனுசரணை பெறுகின்ற நிறுவனங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற உணவுகள், மதுபானங்கள், பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்கள் தரக்கட்டுப்பாட்டு அலுவல்களுக்காக பரிசோதனை செய்யப்படுவதுடன் இலங்கை சுங்கத்தால் ஆற்றுப்படுத்தப்படுகின்ற மாதிரிகள் தரம் மற்றும் சுங்கவரி வகைப்படுத்தலுக்காக பரிசோதனை செய்யப்படுகின்றன. மேலும் நாடு முழுவதிலுமுள்ள நீதிமன்றங்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தேகத்திற்குரிய ஆவணங்களை பரிசோதனை செய்து அறிக்கையிடுதலும் இத் திணைக்களத்தின் மூலம் செய்யப்படுகின்றது.

பரிசோதனைக்காக சமர்ப்பிக்கப்படும் சான்றுப் பொருட்கள் அல்லது மாதிரிகள், உணவு மற்றும் மருந்துகள் சட்டம், தேசிய சுற்றாடல் சட்டம், மதுவரிக் கட்டளைச் சட்டம், புகையிலை மற்றும் மதுபான தேசிய அதிகாரசபை சட்டம், ஒப்பனைப் பொருட்கள் அவுடதங்கள் மற்றும் சாதனங்கள் சட்டம், பீடைகொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டம், சுடுகலன் கட்டளைச் சட்டம், விசம், அபின் மற்றும் அபாயகர ஔடத சட்டம், வெடிபொருள் சட்டம், தீங்கு விளைவிக்கும் ஆயுத சட்டம், மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டம், குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை, குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை, சான்றுகள் கட்டளைச்சட்டம் போன்ற பல்வேறு சட்டங்கள் மற்றும்


கட்டளைச்சட்டங்களின் கீழ் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அறிக்கை வழங்குதல் இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக பிற அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அரசாங்கத்தின் ஆதரவு பெறுகின்ற நிறுவனங்களிற்கு தேவைப்படும் சந்தர்ப்பங்களில் விஞ்ஞான மதியுரைஞராகவும் இத்திணைக்களம் செயலாற்றுகிறது. விசேஷமாக, இலங்கை கட்டளைகள் நிறுவனத்திற்கு தரத்தை உருவாக்குவதில் இந்நிபுணர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். இந்நிபுணர்கள் பாதுகாப்பு அமைச்சின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு உதவிபுரிகின்றனர்.

#### 6.4.2 2017.01.01 தொடக்கம் 2017.09.30 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்

| பகுதி | 2017.01.01 இல் உள்ள வழக்குகள் | 2017.09.30 வரை பெறப்பட்ட வழக்குகள் | 2017.09.30 வரை அறிக்கையிடப்பட்ட வழக்குகள் | 2017.09.30 இல் அறிக்கையிடப்படாது உள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|
| போதை வஸ்துக்களும் பிற மருந்துகளும் | 1,210 | 7,798 | 7,171 | 1,837 |
| சுடுபடைக்கலன்களும் யுத்த தளபாடங்களும் | 392 | 287 | 358 | 321 |
| வெடிபொருளும் தீப்பிடித்தலும் | 195 | 309 | 340 | 164 |
| நச்சுப்பொருட்கள் | 1,033 | 1,861 | 1,725 | 1,169 |
| இரத்தம் மற்றும் பிற சரீர திரவங்கள் | 1,577 | 1,215 | 790 | 2,002 |
| ஆட்சேபனைக்குரிய பத்திரங்கள் – எச். | 301 | 651 | 565 | 387 |
| - எச்டி. | - | 300 | 151 | 149 |
| பல்வேறு சட்ட மருத்துவப் பொருட்கள் | 149 | 337 | 281 | 205 |
| தலைமை அலுவலக நீதிமன்ற மாதிரிகள் | 50 | 1,603 | 1,604 | 49 |
| பல்வேறு குடிவகை மற்றும் புகையிலை | 3 | 1,674 | 1,638 | 39 |
| குடிவகை- குருநாகல் | 00 | 1,691 | 1,689 | 2 |
| உணவுச் சட்டத்தின் கீழ் உணவு மாதிரிகள் | 31 | 4,798 | 4,800 | 29 |
| பல்வேறு- உணவு வகைகள் | 3 | 1,213 | 1,214 | 2 |
| **மொத்தம்** | **4,944** | **23,737** | **22,326** | **6,355** |

#### 6.4.3 2017.01.01 தொடக்கம் 2017.09.30 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்




### 6.4.4 திறன் விருத்தி

2017.09.30 ஆம் திகதிக்கு உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சிகளின் செலவுகள் பின்வருமாறு:

1. உள்நாட்டு பயிற்சிகளுக்காக 56 அலுவலர்கள் பங்குபற்றியுள்ளனர் அதற்கென 516.,232.60 ரூபாத் தொகையொன்று செலவிடப்பட்டுள்ளது.
2. 2017 ஆம் ஆண்டில் வெளிநாட்டு பட்டப்பின் படிப்பிற்காக ஒரு அலுவலர் பங்குபற்றியதுடன் 2016 ஆம் ஆண்டில் வெளிநாட்டு பட்டப்பின் படிப்பிற்கான மூன்று

அலுவலர்கள் பங்குபற்றியுள்ளனர். அதன்படி இதற்கென 8,363,642.47 ரூபா செலவாகியுள்ளது. வெளிநாட்டு மாநாடுகளில் அலுவலர்கள் 6 பேரின் பங்குபற்றுதலுக்கு 2,352,874.90 ரூபா செலவாகியுள்ளது.

### 6.4.5 2017.09.30 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | 2017 ற்கான ஒதுக்கம் (ரூபா மில்.) | 2017.09.30 ற்கான செலவு (ரூபா மில்.) | 30.09.2017 நிதிரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 256.05 | 188.04 | 73% |
| மூலதன செலவினம் | 95.64 | 53.23 | 56% |
| **மொத்தம்** | **351.69** | **241.27** | **69%** |

## 6.5 பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்

**நோக்கு**

அர்ப்பணிப்பு நோக்குள்ள ஸ்தாபகர்களால் பொது நம்பிக்கை பொறுப்பாளரில் கொண்டுள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்தி பயனாளிகளின் நோக்கை எய்தல்

**குறிக்கோள்**

திணைக்களத்திடம் உள்ள வளங்கள் மற்றும் இயலுமைக்கு அமைய உயர் சேவையை வழங்கக் கூடிய வகையில் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்படும் மற்றும் அனுப்பப்படும் பொறுப்புகள் இறந்த நபர்களின் பூதல் பயனாளிகள் உள்ளடங்கலாக உரிய சகல தரப்பினருக்கும் திருப்திகொள்ளும் விதத்தில் நிர்வகித்தல்'' ஆகும்.

.

### 6.5.1 கடமைகள்

#### 6.5.1.1 சட்டப் பின்னணி

1931 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க 1938ம் ஆண்டின் 59 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தினாலும் 1973ம் ஆண்டின் 44 ஆம் இலக்க மற்றும் 1975 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சட்டத்தாலும் 1983ம் ஆண்டின் 41 ஆம் இலக்க மற்றும் 1988 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்ட 1922ம் ஆண்டின் 01 ஆம் இலக்க பொது நம்பிக்கை பொறுப்பு கட்டளைச் சட்டத்தின் மூலம் இலங்கையினுள் பொது நம்பிக்கையாளர் பதவியை சுயாதீனமாக தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு பொது முத்திரையுடன் தாபிக்கப்பட்டுள்ளதோடு அப் பதவியின் பெயரால் வழக்கு தொடுக்கவும் வழக்காடுவதற்கும் சட்ட வல்லமை உள்ளதாகும்.

நம்பிக்கை சம்பந்தமாக பொது நம்பிக்கை பொறுப்பாளர் கட்டளைச்சட்டத்திற்கு மேலதிகமாக 1918 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, 1934 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் மூலமும் 1968 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க மற்றும் 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்ட 1917 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நம்பிக்கை பொறுப்பாளர் கட்டளைச் சட்டம் அமுலுக்கு வருவதுடன் அவ் அதிகாரச்சட்டம் நிசப்பதமாயிருக்கும் சந்தர்ப்பத்தில் ஆங்கிலச் சட்டத்தில் உள்ள ஒப்புரவு (Law of Equity) உரித்தானதாகும்.

#### 6.5.1.2 பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் அதிகாரமும் கடமைகளும்

பொது நம்பிக்கை பொறுப்பாளர் கட்டளைச் சட்டம், குடியியல் நடவடிக்கை முறை சட்டக் கோவை, நீதிமன்ற அமைப்பு முறை சட்டம் மற்றும் வேறு எழுத்து மூல விதிகளின் படி கீழ் காணப்படும் கடமைகள் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

1. சாதாரண நம்பிக்கைப் பொறுப்பாளர்,
2. பாதுகாப்பு வழங்கும் நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது பாதுகாப்பான நம்பிக்கைப் பொறுப்பாளராக செயற்படுதல்.

3. சொத்து திரட்டல் கட்டளையின் கீழ் சொத்து திரட்டல்
4. பராயமடையாத ஒருவரின் சொத்து நம்பிக்கைப் பொறுப்பாளராக அல்லது உதவு நண்பனாக (பாதுகாப்பு முகாமையாளராக) செயற்படுதல். (மாவட்ட நீதிமன்றினால் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில்)
5. மனவளர்ச்சி குன்றிய நபரின் சொத்து முகாமையாளராக செயற்படுதல் (மாவட்ட நீதிமன்றினால் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில்)
6. அசையா சொத்தின் ஒப்பந்த முகாமையாளராக செயற்படுதல்
(பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பாளராக செயற்படும் போது அப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்ட "நம்பிக்கைச் சபையால் காலத்திற்கு காலம் எடுக்கப்படும் தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு மட்டும் பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பாளர் பிணிக்கப்படுகின்றார்.)
7. வெளிநாட்டிலுள்ள இலங்கையர் ஒருவருக்கு அற்றோனிதத்துவகாரராக அவருக்கு கொடுக்கப்பட வேண்டிய பணத்தைப் பெற்றுக் கொள்ள அல்லது செலுத்த நடவடிக்கை எடுத்தல்
8. குடியியல் நடைமுறைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகளின் கீழ் நீதிமன்றினால் சொத்து சம்பந்தமாகவும் மற்றும் வேறு விடயம் சம்பந்தமாகவும் செயற்படுதல்
9. நீதிமன்றம் கையேற்கும் சந்தர்ப்பத்தில் மரணசாதனமற்ற நபரின் நிருவாகியாக செயற்படுதல்
10. நீதிமன்ற அமைப்பு முறை சட்டத்தின் கீழ் சொத்து சேகரிப்பாளராக செயற்படுத்தல்.
11. குற்றம் புரிந்தமைக்காக சிறையிலிடப்பட்டுள்ளவரின் சொத்துக்கு முகாமையாளராக செயற்படுதல்.
12. விகாரைக்குரிய சொத்துக்களின் பொறுப்பாளராக செயற்படுதல்.

**6.5.1.3** மேற்குறித்த கடமைகளை விட வேறு விடயங்களில் பொதுநம்பிக்கைப் பொறுப்பாளரின் தலையீடுகள்

பொது நம்பிக்கை பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் பின் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களுக்கு அமையவும் வேறு எழுத்துமூல விதிகளுக்கு அமையவும் வழங்கப்பட்டுள்ள வேறு கடமைகள்

- 1988 ஆம் ஆண்டின் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச்சட்டத்தின் 10 (அ) பிரிவிற்கு அமைய பணிபுரிவதற்காக வெளிநாட்டில் இருப்போர், வெளிநாட்டில் இருக்கும் போது மரணித்தால் அவர்களுக்காக வழங்கப்படும் நட்டஈடு தங்கிவாழ்பவர்களுக்கும் அல்லது சட்டப்படியான வாரிசுகளுக்கிடையே பங்கீடு செய்யும் செயற்பாட்டை சரியான முறையில் பிழையின்றி நடாத்துவது மற்றும் அக் கடமையை இலகுபடுத்தும் முகமாக சம்பந்தப்பட்ட பணிபுரிபவர்களை பதிவு செய்தல்.
- 1944 ம் ஆண்டின் 42 ஆம் இலக்க விகாரையின் காணி (நட்டஈடு) கட்டளைச் சட்டத்தை செயற்படுத்தல்.
- 1981 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1931 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பௌத்த விகாரை தேவாலகம சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள கடமைகளை புரிதல்
- 1973 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க ஐக்கிய புதினப் பத்திரிகை நிறுவனத்தில் உள்ள பங்குகளுக்கு அரசின் சார்பில் நம்பிக்கைப் பொறுப்பாளராக செயற்படுதல்.

**6.5.1.4 பொதுநம்பிக்கையாளரது சேவைகள்**

பொது நம்பிக்கையாளர் நீதிமன்றத்தின் வழிநடத்துதலுடன் அல்லது தீர்மானத்துடன் அல்லது நிதியங்கள் மற்றும் இறுதி விருப்பு ஆவணங்களின் நோக்கங்களுக்கு அமைவாக பொதுமக்களுக்க சேவை செய்வார்.

- கல்விகளில் நிதி கஷ்டங்களை எதிர்கொள்ளும் திறமை வாய்ந்த பிள்ளைகளுக்கு புலமைபரிசுகள் வழங்கல்
- அத்தியாவசிய மற்றும் மருத்துவ சிகிச்சைகள் தேவைப்படும் நோயாளிகள் மருததுவ சிகிச்சைக்கான ஏற்பாடுகள்
- நிதியங்கள் மற்றும் அல்லது இரதவிருப்பு ஆவணம் எனபனவற்றின் நோக்கங்களின்படி சமயம் சார்ந்த இடங்களை மேற்பார்வை செய்வதற்கும் மற்றும் விருத்தி செய்யவும் நிதி உதவி வழங்குதல்.
- தேவைப்படும் நபர்கள் மற்றும் அல்லது நிறுவனங்களுக்கு நன்கொடை வழங்குதல்
- சமய நடவடிக்கைகள் மற்றும் பலவித காரணங்களுக்காக உதவியை எதிர்பார்த்து உள்ள நபர்களுக்கு நன்கொடைகள் வழங்குதல்
- பண்ணை சொத்துக்கள் அல்லது நம்பிக்கை நிதி முகாமைத்துவம்
- வரையறுக்கப்பட்ட ஐக்கிய புதினப் பத்திரிகை நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு இருவரையும் மற்றும் தலைவரையும் நியமித்தல்
- பிறநாட்டு நஷ்டஈடுகளை வழங்குதல்
- பௌத்த ஆலயங்களுக்கு நஷ்டஈட்டை பங்கிடுதல்
- அரச நிறுவனமாக சம்பாதித்த வருமானத்தில் சதவிகிதத்தை அரச திறைசேரிக்கு வழங்குதல்

**6.5.2 நம்பிக்கைப் பொறுப்பு மரணசொத்தின் எண்ணிக்கை**

| ஆண்டு | அமுல்படுத்தப்படுகின்ற நம்பிக்கை பொறுப்புகளின் எண்ணிக்கை | அமுல் படுத்தப்படுகின்ற மரணசாதனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2014 | 1034 | 134 |
| 2015 | 1044 | 137 |
| 2016 | 1067 | 140 |
| 2017.09.30 | 1075 | 141 |

**6.5.3 பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ள நிதியின் அளவு**

பொது நம்பிக்கைப் பொறுப்பு திணைக்களத்திற்கு உரித்தாக்கபட்டுள்ள மற்றும் நிறுவப்பட்டுள்ள நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் மரணசாதனங்களுக்குத் தொடர்புடைய பொது நம்பிக்கை பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறவிடப்படும்.

| ஆண்டு | தொகை (ரூபா) |
|---|---|
| 2014 | 6,675,487.77 |
| 2015 | 10,188,334.08 |
| 2016 | 14,986,797.37 |
| 2017.09.30 | 9,321,186.38 |

**6.5.4 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல்**

| | செயற்பாடு | உள்ளபடியான தொகை (2017.09.30) | |
|---|---|---|---|
| | | நலன்பெறுனர் களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| 1. | மாணவர் உதவிக் கொடுப்பனவு | 448 | 2,681,233.56 |
| 2. | மருத்துவ உதவிக் கொடுப்பனவு | 177 | 5,598,420.00 |
| 3. | மதத் தலங்களின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்திக்கான கொடுப்பனவு | 8 | 819,614.62 |
| 4. | புண்ணிய உதவிக் கொடுப்பனவு | 51 | 3,424,130.00 |
| 5. | உதவி அற்றோருக்கான உதவிக் கொடுப்பனவு | 410 | 2,225,171.38 |
| 6. | பொறுப்பு நோக்கத்தின் படி ஏனைய கொடுப்பனவுகள் | 492 | 25,835,466.89 |
| 7. | விகாரை நட்டஈடு விடுவிப்பு | 56 | 87,045,382.50 |
| 8. | வெளிநாட்டு நட்டஈடு விடுவிப்பு | 69 | 155,839,057.95 |
| 9. | பொறுப்பு / பூதல் ஆதன முகாமைத்துவம் (தோட்ட பிரிவு/ தேறிய இலாபம்) | 12 | 7,773,800.86 |
| | மொத்தம் | **1,723** | **291,242,277.76** |

**6.5.5 2017.01.01 தொடக்கம் 2017.09.30 வரையிலான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | 2017ற்கான ஒதுக்கம் (ரூபா மில்) | 30.09.2017 ற்கான செலவு (ரூபா மில்) | 2017.09.30 நிதி ரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 50.37 | 35.36 | 70% |
| மூலதனச் செலவினம் | 2.28 | 0.66 | 29% |
| **மொத்தம்** | **52.65** | **36.02** | **68%** |

## 6.6 கடன் இணக்க சபை திணைக்களம்

**நோக்கு**

அசையா சொத்து சம்பந்தப்பட்ட கடனை திருப்பி செலுத்துவதற்கு பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு ஒரு நிவாரண ஏற்பாட்டை வழங்குதல்.

**செயற்பணிகள்**

கடன் கொடுக்கல் வாங்கல்களுக்காகவே எழுதப்பட்ட அடைவு முறிகள், நிபந்தனையுடன் கூடிய உறுதி மற்றும் அறுதி என்பவற்றின் மீது பெறப்பட்ட கடன்களை குறைந்த வட்டி வீதத்துடன் தவணைமுறையில் செலுத்துவதன்மூலம் பிணையாக வைக்கப்பட்ட விவசாய நிலங்கள், வீடு போன்ற அசையா சொத்துக்களை திரும்பப் பெறுவதற்கு கடன்பட்டோருக்கு சட்டப் பாதுகாப்பையும் உதவியையும் வழங்கல்

**குறிக்கோள்**

அசைவற்ற ஆதனங்கள் தொடர்பான கடன் கொடுக்கல் வாங்கல்களுக்காகவே எழுதப்பட்ட அடைவு முறிகள், நிபந்தனையுடன் கூடிய உறுதி மற்றும் அறுதி என்பவற்றின் மீதான கடன்களை மீளச் செலுத்துவதன்மீது தீர்வொன்றை எட்டுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உதவுதல்.

### 6.6.1 அறிமுகம்

1941ம் ஆண்டின் 39 ம் இலக்க கடன் இணக்க சபை கட்டளைச்சட்டத்தின் கீழ் இத் திணைக்களம் தாபிக்கப்பட்டது. இத் திணைக்களமானது காணி, நெல்வயல்கள், பெருந்தோட்டங்கள், வீடுகள் போன்ற அசைவற்ற ஆதனங்களின் உறுதியை நிபந்தனையுடன் பிணைவைத்து பெற்றுக்கொண்ட கடன்களின் மூலமும் சத்தியக்கடதாசி மற்றும் காசோலை போன்ற ஆவணங்களின்மீது பெறப்பட்ட பிணையற்ற கடன்களின் மூலம் ஏற்பட்ட கடன்சுமைக்கு உள்ளான மக்களுக்கு ஏதாவது நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது.

1999ம் ஆண்டின் 29ம் இலக்க திருத்த சட்டம் கடன் கொடுக்கல் வாங்கல்களுக்காகவே எழுதப்பட்ட அறுதியுறுதிகளின் மீது இச்சபை இடையீடு செய்வதற்கு வழிவகுத்து இதன் நிவாரண உதவி நடவடிக்கைகளை மேலும் விரிவடையச் செய்துள்ளது.

இச் சபையின் செயற்பாட்டின் மூலம் கடன் கொடுத்தவர்களால் கடன்பட்டவர்கள் சுரண்டப்படுவதற்கு உள்ள சந்தர்ப்பங்கள் முடக்கப்படுகின்றன. சபையின் தலையாய நோக்கம் இது எனினும் கடன் கொடுத்தவர்களுக்கும் அநீதி ஏற்படுவதற்கு இடமளிக்காது. ஈட்டு உறுதிகளின் மீது மற்றும் நிபந்தனையுடனான அறுதிஉறுதிகளின் மீது வைக்கப்பட்டுள்ள அசைவற்ற ஆதனங்கள் தொடர்பில் கடனாளிக்கு இலகுவானதும் கடன் கொடுத்தவர் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான நிபந்தனைகள் மீது அவ்வாதனங்களை மீட்டுக் கொள்வதற்கு உதவியளித்தல் இச்சபையின் நோக்கமாகிறது.

கடன் இணக்க சபையானது அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஐந்து (5) உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுடன் அவரில் ஒருவர் சபையின் தலைவராக அமைச்சரால் நியமிக்கப்படுவார். சபைக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு எந்தவித கட்டணங்களும் அறவிடப்படுவதில்லை. அத்துடன் இச்சபையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு முத்திரைத் தீர்வை எதுவும் கிடையாது. வர்த்தமானி மற்றும் அறிவித்தல் கட்டணமாக ஒரு சிறிய தொகை மாத்திரமே அறவிடப்படுகிறது. ஆகவே கடன் சுமையால் பாதிக்கப்பட்ட சராசரி நபரொருவருக்கு மிகப்பெரிய சேவையொன்று வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரர் சட்டத்தரணிகள் மூலம் தம்மை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டியது கட்டாயமில்லாதிருப்பது பொதுமக்களுக்கு ஆறுதலாக உள்ளது.

இச்சபையின் நடைமுறை நீதிமன்ற நடைமுறையிலிருந்து வேறுபட்டது. இச்சபையில் எட்டப்படும் உடன்படிக்கைகள் கட்சிக்காரர்களினது இணக்கத்துடன் *ஏற்படுவதேயன்றி சபையின் பணிப்பின்மூலம் அமுல்படுத்தப்படுவதல்ல.* அவ்வாறாயினும் நியாயமற்ற வட்டிகளை குறைப்பதற்கு சபையினால் முன்வைக்கப்படுகின்ற நியாயமான முன்மொழிவுகளை கடன் கொடுத்தவர்கள் ஏற்றுக்கொள்ளாதுவிடின் அது தொடர்பாக கட்டளைச் சட்டத்தின் கீழ் கடனாளிக்கு சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்கும்

சபைக்கு தத்துவங்கள் உள்ளன. அத்துடன் கடன் கொடுத்தவர் இறுதி விசாரணைக்காக வழங்கப்பட்ட அறிவித்தலின் படி விசாரணைக்கு சமூகமளிக்காவிடின் மறுகட்சியின்றி வழக்கு விசாரணை ஒன்றின் பின்னர் கடனாளிக்கு சான்றிதழ் ஒன்று வழங்கப்படுகின்றது. ஆயினும் அவ்வாறு செய்யப்படுவது பதிவு அஞ்சலில் அல்லது கிராம உத்தியோகத்தர் மூலம் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு கடன்கொடுத்தவரிற்கு அறிவித்து கடன் கொடுத்தவர் வேண்டுமென விசாரணைக்கு சமூகமளிப்பதை தவிர்த்துக் கொள்கிறார் என சபை உணருமிடத்து மாத்திரமே இத்தகைய சந்தர்ப்பமொன்றில் அத்தகைய சான்றிதழ் ஒன்றை வழங்குவதனால் ஏற்படும் நன்மை கடனாளியைச் சேரும்.

நீதிமன்றத்தில் அந்த விடயம் சம்பந்தமாக வழக்கு விசாரணை ஒன்று நடைபெறும் சந்தர்ப்பத்தில் இச் சான்றிதழை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தால் கடன் செலுத்துவதற்கு அதிகபட்சம் 10 ஆண்டுகள் வரை கால அவகாசம் வழங்குவதற்கும் வட்டியை குறைந்த வட்டி விகிதமாக மாற்றுவதற்கும் கடன் இணக்க கட்டளைச்சட்டத்தின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

### 6.6.2 2017.01.01 தொடக்கம் 2017.09.30வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்

| விபரம் | விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| முன்கொண்டு-வரப்பட்ட விண்ணப்பங்கள் 2017.01.01 | 825 |
| புதிய விண்ணப்பங்கள் | 285 |
| மீளாய்வுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் | 26 |
| மொத்த விண்ணப்பங்கள் 2017.09.30 | **1,136** |
| தீர்க்கப்பட்ட விண்ணப்பங்கள் | 119 |
| நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | 135 |
| மீளாய்வு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் | 37 |
| சான்றிதழ் வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் | 08 |
| மீளப்பெறப்பட்ட விண்ணப்பங்கள் | 18 |
| நடவடிக்கை எடுக்கப்பட்டமொத்த விண்ணப்பங்கள் | **317** |
| வருடஇறுதியில் இல் உள்ளவாறான மிகுதி விண்ணப்பங்கள் | **819** |

### 6.6.3 2017 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | 2017 ஒதுக்கம் (ரூபா மில்) | 30.09.2017 செலவு (ரூபா மில்) | 2017-09-30 (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 18.47 | 11.56 | 62% |
| மூலதன செலவினம் | 0.85 | 0.14 | 15% |
| **மொத்தம்** | **19.32** | **11.70** | **61%** |

## 6.7 மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு

**நோக்கு**

மத்தியஸ்தத்தினூடாக நல்லிணக்கம் மற்றும் சமுதாய சகவாழ்வு

**பணி**

இலங்கைப் பிரசைகள் சம்பந்தப்பட்ட வினைத்திறனான பிணக்குகளைத் தீர்க்கும் மாற்றுவழி நடைமுறையொன்றை தீவு முழுவதிலும் விஸ்தரித்தல்.

### 6.7.1 மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு பற்றிய அறிமுகம்

- 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் மூலம் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

- நீதிமன்றச் செயற்பாட்டை இலகுபடுத்தும் நோக்கத்துடன் நீதிமன்றங்களிடம் சமர்ப்பிக்கப்படுகின்ற சிறு பிணக்குகளைத் தீர்க்கும் மாற்றுவழி நடைமுறையொன்றாக மத்தியஸ்த செயற்பாட்டை வலுப்படுத்தல் மத்தியஸ்த சபைகள் தாபிப்பதற்கான தலையாய நோக்கமாகும்.
- மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மத்தியஸ்த செயற்பாட்டின் மூலம் இரு திறத்தவர்கள் அல்லது அதற்கு மேற்பட்டோர்களுக்கிடையே ஏற்படுகின்ற பிணக்குகளைத் தீர்த்துக் கொள்வதற்காக மூன்றாம் திறத்தவராக மத்தியஸ்தர்கள் செயலாற்றுகின்றனர்.
- தமது பிணக்குகளைத் தீர்க்கும் வசதியான மற்றும் குறைந்த செலவிலான பொறிமுறையொன்றாக மத்தியஸ்த சபைகள் நடைமுறையின் மீது சமுதாயம் கவனம் செலுத்தப்பட்டதும் ஒவ்வொரு வருடத்திலும் சுமார் மூன்று இலட்சம் அளவிலான பிணக்குகள் மத்தியஸ்த சபைகளிடம் ஆற்றுப்படுத்தப்படுகின்றன.
- மத்தியஸ்த சபைகளுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்ற பிணக்குகளின் எண்ணிக்கை மற்றும் பிணக்குகளைத் தீர்க்கும் நூற்றுவீதத்தின் மீது மத்தியஸ்த சபைகளின் முன்னேற்றம் அளவிடப்படுகிறது.

### 6.7.2 மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் அமைப்பு, தத்துவங்கள் மற்றும் செயற்பாடு

- **அமைப்பு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி அவர்களால் மூன்று (03) வருட பதவிக் காலத்துக்காக ஐந்து பேர்களைக் கொண்ட மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படுகிறது.

- **தத்துவங்கள் மற்றும் செயற்பாடு**

மத்தியஸ்த சபைகள் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கருமத்திற்காக மத்தியஸ்தர்களை நியமித்தல், மாற்றஞ் செய்தல், சேவையிலிருந்து விலக்குதல் மற்றும் அவர்களின் ஒழுகாற்றைக் கட்டுப்படுத்தலும், மத்தியஸ்தர்களால் இச் சட்டத்தின் கீழ் தமது பணி மற்றும் கருமத்தை நிறைவேற்றுதலை கண்காணித்தல் மற்றும் நிருவகித்தலும் அம் மத்தியஸ்தர்களுக்குத் தேவைப்படக் கூடிய பணிப்புகளை வழங்குதலும் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் செயற்பாடாகும்.

### 6.7.3 மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகள்

1. மத்தியஸ்த சபைகள் சட்டத்தின்படி இலங்கை முழுவதிலும் மத்தியஸ்த சபைகளைத் தாபித்தல் மற்றும் தேவையான வசதிகளை ஏற்படுத்தல்.

    - மத்தியஸ்தர்களை ஆட்சேர்ப்பு செய்துகொள்வதற்காக பெயர் நியமனங்களைக் கோருதல், நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல் ஐந்து நாள் பயிற்சிப் பட்டறைகளை நடாத்தி மத்தியஸ்தர்களைப் பயிற்றுவித்து ஆட்சேர்ப்பு செய்து கொள்ளல்,

- மத்தியஸ்த்தர்கள் குழத்துக்களினூடாக நாடளாவிய ரீதியில் பிணக்குகளைத் தீர்ப்பதற்காக தலையிடுதல்.

2. 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் (விசேட வகுதிகளின் பிணக்குகள்) சட்டத்தின் கீழ் காணிப் பிணக்குகள் பற்றிய 05 மத்தியஸ்த சபைகள் பின்வரும் மாவட்டங்களில் தாபித்தல்,

    - யாழ்ப்பாணம், அநுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு, கிளிநொச்சி.

3. பாடசாலை மத்தியஸ்த கூறுகளைத் தாபித்தல் மற்றும் பாடசாலை மத்தியஸ்த பட்டறைகளை நடாத்துதல்.

4. மத்தியஸ்தம் தொடர்பாக சமுதாயத்திற்கு விழிப்புணர்வை அளித்தல்.

### 6.7.4 2017.01.01 - 2017.09.30 வரையிலான முன்னேற்றம்

| விடயம் | **பிணக்குகளின் எண்ணிக்கை** |
|---|---|
| 2017 ஆண்டின் தொடக்கத்தில் தீர்ப்பதற்கிருந்த பிணக்குகள் | 105,712 |
| 2017.01.01 முதல் 2017.09.30 வரை பெறப்பட்ட பிணக்குகள் | 144,559 |
| **மொத்தம்** | 250,271 |
| 2017.01.01 முதல் 2017.09.30 வரை கலந்துரையாடப்பட்ட மொத்த பிணக்குகள் | 110,809 |
| 2017.01.01 முதல் 2017.09.30 வரை தீர்க்கப்பட்ட மொத்த பிணக்குகள் | 56,577 |
| | 51% |

### 6.7.5 2017.01.01 - 2017.09.30 பிணக்குகளின் ஆற்றுப்படுத்தல்

| *பிணக்ககளின் ஆற்றுப்படுத்தல் மூலங்கள்* | *2017.01.01 முதல் 2017.09.30 வரை* | *நூற்றுவீதம்* |
|---|---|---|
| *நீதிமன்றத்தால்* | 10,535 | 7.28% |
| *பொலிசாரால்* | 33,577 | 23.22% |
| *வங்கிகள்/ நிதி நிறுவனங்களினால்* | 85,657 | 59.25% |
| *பிணக்குக்காரர்களால்* | 2,394 | 1.65% |
| *பிற* | 12,396 | 8.57% |
| **மொத்தம்** | **144,559** | - |

### 6.7.6 2017.01.01 தொடக்கம் 2017.09.30 வரை மத்தியஸ்த சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள மாகாண மட்டத்தில் பிணக்குகளைத் தீர்த்தல்

| மாகாணம் | கலந்துரையாடப்பட்ட பிணக்குகள் | தீர்க்கப்பட்ட பிணக்குகள் | நூற்றுவீதம் |
|---|---|---|---|
| மேற்கு | 24,217 | 10,316 | 42.59 |
| மத்திய | 12,608 | 8,253 | 65.45 |

| | | | |
|---|---|---|---|
| தெற்கு | 14,227 | 7,065 | 49.65 |
| வடமேல் | 19,365 | 10,426 | 53.83 |
| வடமத்திய | 8,500 | 4,626 | 54.42 |
| ஊவா | 5,699 | 2,599 | 45.60 |
| சப்ரகமுவ | 10,654 | 4,810 | 45.14 |
| கிழக்கு | 8,352 | 4,483 | 53.67 |
| வடக்கு | 7,187 | 3,996 | 55.60 |
| **மொத்தம்** | **110,839** | **56,574** | **51.04** |

- 2017.01.01 ஆம் திகதியிலிருந்து 2017.09.30 வரை 65 ஐந்து நாள் செயலமர்வுகள் நடாத்தப்பட்டு அதில் 2,753 மத்தியஸ்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

- மத்தியஸ்த்தர்களுக்கான ஒருநாள் கருத்தரங்குகள் 13 நடாத்தப்பட்டது 557 மத்தியஸ்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

- நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களால் சமுதாய மத்தியஸ்தம், பாடசலை மத்தியஸ்தம் மற்றும் பிற புரிந்துணர்வை அளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. அவர்கள் 68 ஐந்து நாள் பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்கள், ஒரு நாள் பாடசலை நிகழ்ச்சித் திட்டங்கள் 66, ஒரு நாள் மத்தியஸ்த்தர்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் 87 என்பனவற்றை நடாத்தியுள்ளனர்.

### 6.7.7 2017.01.01 தொடக்கம் 2017.09.30 வரை நிதி முன்னேற்றம்

| விபரம் | 2017 ற்கான ஒதுக்கம் (ரூபா மில்) | 30.09.2017 ற்கான செலவு (ரூபா மில்) | நிதி ரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 261.18 | 150.99 | 58% |
| மூலதனச் செலவினம் | 1.35 | 0.19 | 14% |
| **மொத்தம்** | **262.53** | **151.18** | **58 %** |

## 6.8 தொழில் நியாயசபை செயலாளர் அலுவலகம்

**நோக்கு**
அரசு சாரா ஊழியர்களின் வேலைப் பாதுகாப்புக்கான உத்தரவாதம்"

**செயற்பணிகள்**
"விரைவானதும், நீதியானதும், திறமையான நிர்வாகத்தின் மூலமும் ஆற்றல் மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்களின் உதவியுடனும் அரசு சாரா ஊழியர்களின் வேலைப் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளித்தல்"

### 6.8.1 அறிமுகம்

1950ம் ஆண்டின் 43ம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் 31 (ஆ) பிரிவின் பிரகாரம் பெறப்படும் பிணக்குகளை விசாரித்து கையுதிர்வு செய்தல் தொழில் நியாய சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள பிரதான பணியாகும். அரசு சாரா நிறுவனங்களில் ஊழியர்களை வெளியேற்றுதல், போன்ற சம்வங்களின்போது நீதியை பெற்றுக்கொடுக்கும் நிறுவனமென தொழில் நியாய சபையை வரையறை செய்யலாம் என்பதுடன் இது அத்தகைய திறத்தினருக்கு கிடைத்த மிகப்பெரும் வரப்பிரசாதமாகும். தொழில் நியாய சபை தலைமை அலுவலகத்தின் கீழ் 39 தொழில் நியாயசபைகள் செயற்படுகின்றன.

தொழில் நியாய சபைகளைப் பேணுவதற்குத் தேவையான மனிதவளங்கள், கூட்டு வளங்கள் மற்றும் நிதிவளங்கள் ஆகியவற்றை வழங்குதலும் முகாமைசெய்தலும் தொழில் நியாய சபைகளின் தலைமை அலுவலகத்தின் பிரதான பணிகளாகும்.

**பிரதேச ரீதியான தொழில் நியாயசபைகள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.**

| | | | |
|---|---|---|---|
| கொழும்பு - 01 | எம்பிலிபிட்டிய (சுற்று) | கம்பஹா | இரத்மலானை |
| கொழும்பு - 02 | பலாங்கொடை | பாணந்துறை | மகரகம |
| கொழும்பு - 08 | திருகோணமலை | மாத்தறை | கொட்டபொல |
| கொழும்பு - 13 | அவிசாவளை | அனுராதபுரம் | பண்டாரவளை |
| பத்தரமுல்ல 1/ மேலதிக. | கண்டி | நாவலப்பிட்டிய | தலவாக்கலை |
| பத்தரமுல்ல 2/ மேலதிக. | காலி | கேகாலை | பலாபத்வெல |
| இரத்தினபுரி | பதுளை | சிலாபம் | அம்பாறை |
| நுவரெலியா | நீர்கொழும்பு 21 | மட்டக்களப்பு | யாழ்ப்பாணம் |
| ஹற்றன் | நீர்கொழும்பு 21மேலதிக | கடுவெல | குளியாபிட்டிய |
| களுத்துறை | குருநாகல் | வத்தளை | |

### 6.8.2 2017.01.01 தொடக்கம் 2017.09.30 வரையுள்ள காலப்பகுதிக்கான முன்னேற்றம்

| 2017.01.01 இல் நிலுவையிலுள்ள வழக்குகள் | 2017.01.01தொடக்கம் 2017.09.30 வரை | | 2017.09.30 இல் நிலுவையிலுள்ள வழக்குகள் |
|---|---|---|---|
| | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | தீர்த்துவைக்கப்பட்ட வழக்குகள் | |
| 5,031 | 1,532 | 1,590 | 4,973 |

- சுருக்கெழுத்தாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான பரீட்சையின் பின்னர் 08 அலுவலகர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டன.

- 2017.07.02ம் திகதி நடாத்தப்பட்ட எழுத்து மூலப் பரீட்சையின் அதிகூடிய புள்ளிகளைப்பெற்ற பரீட்சார்த்திகளிடமிருந்து பேச்சு மொழிபெயர்ப்பாளர்களுக்கான 07 வெற்றிடங்களை பூர்த்திசெய்வதற்கான செய்முறைப்பரீட்சை 2017.10.13ம் திகதி நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**2017.01.01 தொடக்கம் 2017.09.30 வரையுள்ள காலப்பகுதிக்கான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | 2017 ற்கான ஒதுக்கம் (ரூபா மில்) | 30.09.2017 ற்கான செலவு (ரூபா மில்) | 2017-09-30 நிதி ரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 306.79 | 205.43 | 67% |
| மூலதன செலவினம் | 11.55 | 1.18 | 11% |
| **மொத்தம்** | **318.34** | **206.61** | **65%** |

## 6.9 நீதித்துறையல்லாத அலுவலர்களின் பயிற்சி நிலையம்

**செயற்பணிகள்**

பொதுமக்களுக்கு விரைவான சிறந்த சேவையை வழங்குவதை பிரதான நேக்கமாகக் கொண்டு நீதித்துறை அலுவலர் தவிர்ந்த நீதிச் சேவையிலுள்ள அட்டவணைப்படுத்தப்பட்ட மற்றும் அட்டவணைப்படுத்தப்படாத அலுவலர்களுக்கு நீதிமன்ற வழக்குகளை விசாரணை செய்து முடித்துக் கொள்ளும் செயல்பாட்டில் ஏற்படும் தாமதத்தை சமாளிப்பதற்கு பயிற்சியளிப்பதன் மூலம் நீதிச் சேவையின் திறனையும் தரத்தையும் உயர்த்தல்.

### 6.9.1 அறிமுகம்

நீதிமன்றங்களில் சேவை செய்கின்ற நீதித்துறையல்லாத அலுவலர்களின் பயிற்சித் தேவைகளை நிறை வேற்றுவதற்காக இந்நிறுவனம் 2010 ஆம் ஆண்டில் பத்தரமுல்ல டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் உள்ள நீதிமன்றக் கட்டிடத்தில் தாபிக்கப்பட்டது. அதன்படி, இந்த பயிற்சி நிறுவனம் பின்வரும் குறிக்கோள்களை அடைவதற்காக நீதித்துறையல்லாத அலுவலர்களுக்கு பல நிகழ்ச்சிகளை நடாத்தியது.

1. மனப்பாங்குகளையும் ஒழுக்கத்தையும் விருத்தி செய்தல்
2. கடமைகளை விளங்கிக்கொள்வதற்கான விழிப்புணர்வு
3. நவீனமயமாக்கல் மற்றும் கண்டுபிடிப்பு
4. இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழித்தல்

**6.9.2 2017 ஜனவரி 01 இல் இருந்து 2017 செப்தெம்பர் 30 வரையான காலப்பகுதிகளில் பின்வரும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.**

| தொ. இல. | பயிற்சி நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்குபற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | புதிய கட்டளைச்சேவகர், எழுத்தாணை நிறைவேற்றுநர், நீதிமன்றக் கூவுநர் மற்றும் கட்டியக்காரர் பதவிக்காக ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 01 | 170 |
| 02 | நீதிமன்ற எழுதுநர் III தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட புதிய அலுவலர்களுக்காக ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 01 | 306 |
| 03 | தொழில் நியாய சபைகளில் கணக்கு அலுவல்களை செய்யும் அலுவலர்களுக்காக சொந்தக் கோவைகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 01 | 57 |
| 04 | கணினி அறிவு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 06 | 141 |
| 05 | நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட புதிய அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 01 | 93 |
| 06 | குடியியல் சட்டம், குற்றவியல் சட்டம், சான்றுபொருட்களை அகற்றுதல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை முறை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம். | 05 | 183 |
| 07 | நீதிமன்றத் தன்னியக்கம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 01 | 24 |
| 08 | கணக்கியல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 03 | 100 |
| 09 | வவுனியா வலய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 01 | 80 |
| 10 | அநுராதபுரம் வலய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 01 | 72 |
| | **மொத்தம்** | **21** | **1,226** |

## 6.10 இலங்கை சர்வதேச நடுத்தீர்ப்பு மையம் (உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட)

நீதி அமைச்சினால் 2013 ஆண்டில் இலங்கை சர்வதேச நடுத்தீர்ப்பு மையத்தை நிர்மாணிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. உலக வர்த்தக நிலையத்தின் 22 ஆம் மாடியின் ஒரு பகுதியை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், இலங்கை சர்வதேச நடுத்தீர்ப்பு மையத்தை தாபிப்பதற்காக அது பழுதுபார்க்கப்பட்டது. மாண்புமிகு பிரதமர் ரனில் விக்கிரமசிங்க அவர்களால் 2015 யூன் மாதம் 05 ஆம் திகதி சர்வதேச நடுத்தீர்ப்பு மையம் வைபவரீதியில் திறந்த வைக்கப்பட்டது.

அதன் பின்னர், உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட இலங்கை சர்வதேச நடுத்தீர்ப்பு மையம் 2016 திசெம்பர் 20 ஆம் திகதி வெற்றிகரமாக கூட்டிணைக்கப்பட்டது. கம்பெனிகள் அமைப்புவிதியின் கீழ் தற்போதைய பணிப்பாளர் சபை பின்வரும் ஆட்களைக் கொண்டுள்ளது.

- கலாநிதி அசங்க குணவங்ச - தலைவர்
- சனாதிபதி சட்டத்தரணி திரு. திலால் பிலிப்ஸ்
- சனாதிபதி சட்டத்தரணி கலாநிதி திரு. ஹர்ஷ கப்ரால்
- திரு நெவில் ஏ அபயரட்ண
- திரு. சாரதா த சில்வா
- சட்டத்தரணி திரு. சுதத் ஜயசுந்தர
- சட்டத்தரணி திரு. குமார் ஏகரத்ன
- சனாதிபதி சட்டத்தரணி திரு. ஜீ. அழகரத்னம்
- திரு ஏ கே டி டி அரந்தர

உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட இலங்கை சர்வதேச நடுத்தீர்ப்பு மையத்தின் பணிப்பாளர் சபை ஆகக் குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவை கூடுவதுடன் மையத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவாறு அரசாங்கத்திடமிருந்து நிதி உதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் தற்போது பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. அதற்கு மேலதிகமாக, சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடுத்தீர்ப்பாளர்கள் மற்றும் அறிஞர்கள் அத்துடன் இலங்கையின் சிரேட்ட நடுத்தீர்ப்பு நிபுணர்களைக் கொண்ட நிருவாக சபையொன்றை நியமிப்பதற்கான முன்மொழிவு பணிப்பாளர் சபையால் ஆராய்ந்துப் பார்க்கப்படுகிறது. உறுப்பினர்களால் தற்போது ஆராய்ந்துப் பார்க்கப்படுகின்ற ஆட்கள் ஆவது பேராசியர் திரு. கஜ்ஹோபர் (சுவீடன்) திரு. நிருபிள்ளை (சிங்கப்பூர்), திரு. வினாயக் பிரதான் (மலேசியா), சனாதிபதி சட்டத்தரணி திரு. சிப்லி அஸீஸ் (இலங்கை), சனாதிபதி சட்டத்தரணி திரு.கே. கனகீஸ்வரன் (இலங்கை) மற்றும் நீதிபதி திரு. ஜீ.பீ.எஸ். த சில்வா (இலங்கை) என்பவர்களாகும்.

## 07. அமைச்சின் கீழுள்ள பொதுத்தொழில் நிறுவனங்களின் முன்னேற்றம்

### 7.1 சட்ட உதவி ஆணைக்குழு

சட்ட உதவி ஆணைக்குழுவானது, 1978, 27 ஆம் இலக்க சட்ட உதவி ஆணைக்குழு சட்டத்தினால் நிறுவப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாகும். வறுமையின் காரணமாக நீதியின் துணையை பெற முடியாதிருக்கும் இலங்கையர்களுக்கு சட்ட உதவி வழங்குவது இதன் பிரதான குறிக்கோளாகும். குறைந்த வருமானமுடைய மக்களுக்கு கட்டணமின்றி சட்டத்தரணி உதவி பெற்றுக் கொடுத்தல், எவருக்கும் சட்ட ஆலோசனை பெற்றுக் கொடுத்தல்,சட்டம் பற்றி முழு சமுதாயத்துக்கும் அறிவூட்டல், புதிய சட்டவாக்கத்தின் போதும் சட்ட புனரமைப்பின் போதும் அரசுக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன ஏனைய செயற்பாடுகளில் பிரதானமானவையாகும்.

- <u>சட்டப் பிரிவு</u>

  1) நீதியின் அனுசரணையைப் பெற்றுக் கொள்ள இயலாதவர்கள் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராவது.
  2) எவருக்கும் இலவசமாக சட்ட ஆலோசனை வழங்குவது.
  3) புதிய சட்ட உருவாக்கத்திலும் சட்ட மீளமைப்பிலும் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவது.

நேரடியாக தலைமைக் அலுவலகத்தின் கீழ் செயற்படும் கொழும்பு சட்ட உதவி மத்திய நிலையம் உட்பட, சட்ட உதவி அலுவலகங்கள் 82 ஆகும். அவை இலங்கை முழுவதுமுள்ள நீதிமன்றங்களுக்கு அண்மியதாக அமைக்கப்பட்டுள்ளன. நீதிமன்ற நடவடிக்கைகளின் போது, கிராம உத்தியோகத்தரின் மூலமான வருமான அறிக்கை கவனத்திற்கொள்ளப்படினும், பராமரிப்பு, வீட்டு வன்முறை, குற்றச் செயல் பாதிப்புக்குள்ளானோர், பிள்ளைகள் சம்பந்தப்பட் வழக்கு ஆகிய நடவடிக்கைகளின் போது அது பற்றி கவனத்திற்கொள்ளப்படும்.


**அ) சட்ட உதவி ஆணைக் குழு வின் சட்டப் பிரிவின் முன்னேற்றம்.**

| வழக்கு விபரம் | வழக்கு எண்ணிக்கை |
|---|---|
| 2016 ஆண்டிலிருந்து முன் கொண்டுவரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 26,088 |
| 2017 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் செப்டம்பர் 30 வரை புதிதாக கோவையிடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 9,115 |
| 2017 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் செப்டம்பர் 30 வரை நடைபெற்ற வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | 35,203 |
| 2017 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் செப்டம்பர் 30 வரை முடிவுறுத்தப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 6,013 |
| 2017 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் திகதிக்கு கொண்டு செல்லப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 29,190 |
| 2017 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் செப்டம்பர் 30 வரைவழங்கப்பட்ட மொத்த ஆலோசனை | 75,583 |
| 2017 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் செப்டம்பர் 30 வரை வழங்கப்பட்ட மொத்த சேவைகள் | 110,786 |

### ஆ) சட்ட உதவி ஆணைக்குழுவினால் மாகாண மட்டத்தில் சேவைகள் வழங்கல்

| மாகாணம் | 2016.12.31 ம் திகதி வரை நடைபெற்ற வழக்குகள் | புதிய வழக்கு கள் (2017.01.01 -2017.09.30 வரை) | மொத்தம் | முடிவான வழக்குகள் 2017.09.30 வரை | இடை நிறுத்தப்பட்ட வழக்குகள் 2017.09.30 வரை | 2017.09.30 ஆம் திகதி முன் கொணர்ந்த வழக்குகளின் எண்ணிக்கை | சட்ட ஆலோசனை 2017.09.30 வரை |
|---|---|---|---|---|---|---|---|
| மேற்கு | 6,771 | 1,938 | 8,709 | 801 | 315 | 7,593 | 22,581 |
| ஊவா | 1,913 | 729 | 2,642 | 374 | 245 | 2,023 | 7,422 |
| தெற்கு | 3,382 | 1,061 | 4,443 | 522 | 200 | 3,721 | 10,324 |
| வடக்கு | 2,322 | 860 | 3,182 | 308 | 22 | 2,852 | 7,347 |
| சப்ரகமுவ | 1,919 | 798 | 2,717 | 288 | 272 | 2,157 | 5,957 |
| வடமேற்கு | 2,738 | 1,002 | 3,740 | 444 | 120 | 3,176 | 10,231 |
| மத்தி | 2,249 | 658 | 2,907 | 556 | 129 | 2,222 | 3,628 |
| கிழக்கு | 2,787 | 1,264 | 4,051 | 698 | 126 | 3,227 | 5,003 |
| வடமத்தி | 2,007 | 805 | 2,812 | 322 | 271 | 2,219 | 3,090 |
| **மொத்தம்** | **26,088** | **9,115** | **35,203** | **4,313** | **1,700** | **29,190** | **75,583** |

**இ) 2017.01.01 முதல் 2017.09.30 வரை தீர்க்கப்பட்ட பிணக்குகள்**




### 7.1.2 நிகழ்ச்சி திட்டம் மற்றும் செயல் திட்ட பிரிவு

### அ) அறிவூட்டல் மற்றும் சமூக பங்குபற்றல் சம்பந்தமான நிகழ்ச்சித் திட்டங்கள்

| நிகழ்ச்சித் திட்டம் | நிகழ்ச்சித் திட்ட எண்ணிக்கை |
|---|---|
| சட்டவியல் அறிவை வழங்குதல், உரிமைகளைப் பாதுகாத்தல், சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஆதரவு வழங்கும் நோக்கில் சிறுவர், பெண்கள், முதியோர் மற்றும் ஊனமுற்றோர் ஆகியோரை இலக்காகக் கொண்டு நடாத்தப்பட்ட நிகழ்சித் திட்டங்கள். | 16 |
| சட்டவியல் அறிவை வழங்குதல்,பண்பியல் மற்றும் செயற்றிறன் மிக்க அரச சேவையை கிட்டவாக்குதல் | 26 |

| | |
|---|---|
| அழைப்பு விரிவுரைகள், சட்ட ஆலோசனை என்பவற்றினூடாக வளவாளர் பங்களிப்பு வழங்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் (நீல பணி ஜனாதிபதி மக்கள் சேவை, வளமான நாளை தேசிய நிகழ்ச்சித் திட்டம், திறந்த பொருளாதாரத்தின் 40 ஆவது ஆண்டு தொடர்பாக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம், மர நடுகை நிகழ்ச்சித் திட்டம்) | 132 |
| தோட்டத் தொழிலாளர், மீனவர் சமூகம், சேரி மற்றும் குடிசை வாசிகள் ஆகியோரை இலக்காகக் கொண்டு நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் | 03 |
| காணிப் பிணக்குகளை தீர்ப்பது சம்பந்தமான நிகழ்ச்சித் திட்டங்கள் | 12 |
| கள ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் | 01 |
| கிராமிய சமூகத்துக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் | 32 |
| கிராமிய சமூகத் தலைவர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் | **06** |
| சட்ட உதவி சேவைநிலையங்கள் - சிறைச்சாலை செயல் திட்டங்கள் | **51** |
| **மொத்தம்** | **279** |

**ஆ) மக்கள் ஊடக நிகழ்ச்சித் திட்டங்கள்**

i. பல்வேறு தொலைக்காட்சி அலைவரிசைகள், வானொலி அலைவரிசைகள் மற்றும் பத்திரிகைகள் வாயிலாக மக்களுக்கு அறிவூட்டுவதற்காக நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை அழைப்பு நிகழ்ச்சித் திட்டங்களாகும்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் - 28
வானொலி நிகழ்ச்சிகள் - 05

ii. வாராந்த பத்திரிகைகள் மூலமாக சட்டம் சம்பந்தமாக மக்களின் கேள்விகளுக்கு பதில் அளித்தல்,
இரண்டு வாரங்களுக்கொரு முறை திங்கள் கிழமை டெயிலி நியூஸ் ஆங்கில பத்திரிகை
இரண்டு வாரங்களுக்கொரு முறை செவ்வாய் கிழமை லங்காதீப சிங்கள பத்திரிகை

லங்காதீப சட்ட உதவி பத்திரிகை - 18
டெயிலி நியூஸ் சட்ட பக்கம் - 18
தியனிய பத்திரிகை - 36

### 7.1.3 அபிவிருத்தி சட்ட உதவிப் பிரிவு

#### 7.1.3.1 வெளிநாடு செல்லும் இடம்பெயர் தொழிலாளர் சம்பந்தமான அலகு

வெளிநாடு செல்லும் இடம்பெயர் தொழிலாளருக்கான இந்த பிரிவு, தனது சேவையை வழங்கும் போது, ஆலோசனை வழங்கியதன் பிறகு, அந்நபர்களை தேவையான போது தேவையான காரியங்களுக்காக வெளிநாட்டு விவகார அமைச்சின் கொன்சியூலர் பிரிவுக்கோ அல்லது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கோ அனுப்பி வைக்கின்றது. இதற்கமைய, வெளிநாடு செல்லும் இடம்பெயர் தொழிலாளரின் குடும்பங்களுக்கு அவர்களுடைய விபரங்களை திரட்டும் முகமாக அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்று பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் “கிராமிய ஒன்றியம்” எனும் பெயரில் 17 சன அடிப்படை அலகுகளை கண்காணித்தல் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. நீர்கொழும்பு பிரதேசத்தை கேந்திரமாகக் கொண்டு நிகழ்ச்சி திட்டமொன்று நடாத்தப்பட்டது.

#### 7.1.3.2 சிறைக் கைதிகளுக்கான அலகு

இலங்கையின் சிறைகளில் இடநெருக்கடியை குறைக்கும் முயற்சியில், நீதியை இலகுவாக அடையக் கூடியதாகவும், அரச செலவினத்தை குறைக்கும் நோக்கத்திற்காகவும் இந்த அலகு செயலாற்றுகின்றது. இதன் மூலம் இலங்கையின் சிறைச்சாலைகளில் நீண்ட காலமாக தங்கி இருக்கும் சட்டத்தரணிகளின் உதவியைப் பெற முடியாதிருக்கும் நபர்களுக்கு பிணை பெற்றுக் கொள்வதற்காகவும், பிணை

நிபந்தனைகளை குறைத்துக் கொள்வதற்காகவும்சட்டத்தரணிகளின் உதவி பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. அதற்காக சிறைக் கைதிகளுக்கு சட்ட உதவி நிலையங்களும், அன்றாட வாழ்க்கையை நடாத்திச் செல்வதற்கு சட்ட அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்படுகின்றன. 2017 ஜனவரி முதல் செப்டம்பர் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் இலங்கையிலுள்ள சிறைச் சாலைகளில் 39 சட்ட உதவி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

ஜனவரி முதல் செப்டம்பர் 30 ஆம் திகதி வரையான 30 நிகழ்ச்சித் திட்டங்களில் 463 சிறைக் கைதிகள் சட்ட உதவியை நாடியதோடு, அவர்களில் 463 பேரும் தெரிவு செய்யப்பட்டு, அதில் 169 பிணை மனுக்கள் கோவைபடுத்தப்பட்டதுடன், தற்போது 99 பிணை கட்டளைகள் பெறப்பட்டுள்ளன.

#### 7.1.3.3 பயிலுனர் சட்டத்தரணிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சி திட்டம்

இலங்கை சட்டக் கல்லூரியுடன் இணைந்து செயற்படுத்தப்படுகின்றது.ஆண்டுதோரும் சட்டத்தரணிகளாக சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளும் பயிலுனர் சட்டத்தரணிகளை பயிற்றுவிப்பது இதன் குறிக்கோளாகும். இந்த வருடம் ஜனவரி முதல் செப்டம்பர் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஒரு குழுவாக 314 சட்டத்தரணிகள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளதோடு, அதற்காக சிரேஷ்ட கற்றறிந்த பிரபல ஜனாதிபதி சட்டத்தரணிகளை உள்ளடக்கிய வளவாளர்கள் 05 பேரின் வெளிவாரி சேவையை ஆணைக் குழு பெற்றுக் கொள்கின்றது.

#### 7.1.3.4 ஆதிவாசி மக்களின் உரிமைகள் சம்பந்தமாக நிகழ்ச்சித் திட்டம்

இலங்கைஆதிவாசிகளின் உரிமைகள் மற்றும் பாரம்பரியங்களைபாதுகாக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் இந்த வருடம் ஜனவரி முதல் செப்டம்பர் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் தழுகான ஆதிவாசிகள் குடியிருப்பை கேந்திரமாகக் கொண்டு 02 நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. அதில் ஆதிவாசிகளின் இளம், இளைஞர், முதியோர் ஆகிய சகல பிரிவினரையும் கேந்திரப்படுத்தி சட்ட வைத்திய உதவி நிலையம், பிரச்சினைகளை தீர்க்கும் திட்டங்கள் என்பன மேற்கொள்ளப்பட்டன.

#### 7.1.3.5 சட்டம் பற்றி வைத்தியர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்

சட்ட வைத்திய அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் மன நோய் வைத்திய அதிகாரிகள் ஆகியோருக்கு, நீதிமன்ற நடவடிக்கைகளின் போது வைத்திய நிபுணத்துவத்துவ திறனை விருத்தி செய்யும் வகையில் அறிவூட்டலே இதன் குறிக்கோளாகும். இது தொடர்பில்இந்த வருடம் ஜனவரி முதல் செப்டம்பர் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 06 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

### 7.1.4 அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவு

#### 7.1.4.1 அலுவலகர்களை பயிற்றுவித்தல்

| அலுவலகர்கள் | எண்ணிக்கை |
|---|---|
| சட்டத்தரணிகள் | 120 |
| சாரதிகள் | 02 |
| **மொத்தம்** | **122** |

#### 7.1.4.2 புதிய மத்திய நிலையங்கள் ஆரம்பித்தல்

2016 ஆம் ஆண்டு இறுதியாகும் போது, இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் பிரதேச மத்திய நிலையங்கள் 78 ஆகும். 2017, செப்டம்பர் 30 ஆம் திகதியன்று அவ்வெண்ணிக்கை 82 ஆக அதிகரித்துள்ளது.

| இலக்கம் | பிரதேச மத்திய நிலையம் | ஆரம்பித்த திகதி |
|---|---|---|
| 1 | தெஹியத்தகண்டிய | 2017/01/30 |
| 2 | சியம்பலாண்டுவ | 2017/01/30 |
| 3 | பொரல்ல | 2017/02/16 |
| 4 | கலகெதர | 2017/08/16 |

7.1.4.3 **புதிய ஆட்சேர்ப்பு**

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| சட்ட அதிகாரிகள் | 10 |
| முகாமைத்துவ உதவியாளர் | 05 |
| அலுவலக உதவியாளர் | 05 |
| சாரதி | 01 |

**7.1.4.4 கட்டடங்கள் நிர்மானம்**

கல்முனை, தெஹியத்தகண்டிய, குருநாகலை ஆகிய பிரதேச மத்தி நிலையங்களின் அலுவலக நிர்மான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**7.1.5 2017.01.01 முதல் 2017.09.30 வரை நிதி முன்னேற்றம்**

| விபரம் | 2017 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு (ரூ. மி.) | 2017.09.30 திகதிக்கு செலவினம் (ரூ. மி. | 2017.09.30 திகதிக்கு நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|
| மீளெழும் செலவினம் | 194.00 | 146.46 | 75% |
| மூலதன செலவினம் | 25.00 | 12.52 | 50% |
| **மொத்த செலவினம்** | **219.00** | **158.98** | **73%** |

## 7.2 மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைச்சபை

**நோக்கு**

- நாட்டில் சிறப்பாக முகாமை செய்யப்படுகின்ற நியதிச்சட்ட சபையாக மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி முகாமைச்சபையை அபிவிருத்தி செய்வதாகும்.

**செயற்பணிகள்**

- நீதி மற்றும் சட்ட தொழில்துறையில் ஈடுபட்டுள்ள யாவருக்கும் தற்போதிருக்கும் கட்டிடங்கள் மற்றும் அடிப்படை வசதிகளைப் பயன்படுத்துகின்றமையால் அவற்றைப் பராமரித்து மேலும் விருத்தி செய்து அவர்களுக்கேற்ற சூழலை வழங்கலாம் என்பதோடு அது அவர்கள் சேவை வழங்கக்கூடிய வழக்குத் தொடுனர்கள், மற்றும் அத்துடன் தொடர்புடயவர்களுக்கு செயற்திறனானதும், நியாயமானதும் நீதியானதுமான சேவையை வழங்கும் நோக்கத்தோடு அவர்களின் செயற்பாடுகளைப் புரிவதற்கும் உதவியாக இருக்கும் என்பதோடு அதன் மூலம் மேற்குறிப்பிட்ட நோக்கத்தை அடைந்து கொள்ளல்.

**7.2.1 அறிமுகம்**

1987ம் ஆண்டின் 50ம் இலக்க மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைச்சபை சட்டத்தின் பிரகாரம் மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதியையும் அதன் கட்டிடங்ளையும் பரிபாலித்து கட்டுக்கோப்போடு நிர்வகித்து பராமரித்து மேலும் வசதி வாய்ப்புக்களை மேம்படுத்தவேண்டிய தேவை ஏற்படுமிடத்து உரிய மாற்றங்களையும், சீர் திருத்தங்களையும் மேலதிக மாற்றங்களையும் செய்யும் நோக்கில் மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைச்சபை ஏற்படுத்தப்பட்டது.

நிர்வாக சபை பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியுள்ளது.

- பிரதம நீதியரசர்
- பிரதம நீதியரசரினால் நியமனஞ் செய்யப்படும் உயர் நீதிமன்ற நீதியரசரொருவர்
- மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர்
- மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசரால் நியமனஞ் செய்யப்படும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசரொருவர்
- நீதிஅமைச்சின் செயலாளர்
- உள்ளூராட்சி, வீடமைப்பு, கட்டிட நிர்மாண அமைச்சின் செயலாளர்
- இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர்
- கொழும்பு மாநகரசபை ஆணையளர்
- நிதி அமைச்சரின் பிரதிநிதி
- அதிமேதகு இலங்கை சனாதிபதியால் நியமிக்கப்படும் இரு அங்கத்தவர்கள்.

**7.2.2 2017.01.01 தொடக்கம் 2017.09.30 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்**

- கட்டிடத் திருத்தவேலைகள்
- **இயந்திரங்கள்கொள்வனவு**

**7.2.3 2017.01.01 தொடக்கம் 2017.09.30 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | 2017 ஒதுக்கம் (ரூ.மில்) | 30.09.2017 செலவு (ரூ.மில்) | 2017.09.30 நிதி ரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 181.55 | 143.61 | 58% |
| மூலதன செலவினம் | 20.00 | 8.77 | 31% |
| **மொத்தம்** | **201.55** | **152.38** | **55%** |

## 7.3 இலங்கை நீதிபதிகள் நிறுவனம்

**7.3.1 அறிமுகம்**

இலங்கை நீதிபதிகள் நிறுவனமானது 1985ம் ஆண்டு 46ம் இலக்க சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டது. இந் நிறுவனம் கௌரவ பிரதம நீதியரசர் மற்றும் அதிமேதகு சனாதிபதியினால் நியமிக்கப்படும் இரு உயர்நீதிமன்ற நீதியரசர்களை உள்ளடக்கிய 5 உறுப்பினர்களைக்கொண்ட முகாமையாளர் சபையினால் நிருவகிக்கப்படுகிறது. இந் நிறுவனத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கங்கள் அமைச்சினால் ஒதுக்கப்படுகிறது. .

**விடயங்களும் பணிகளும்**

I. நீதித்துறை அலுவலர்களுக்கு நீதித்துறை மற்றும் சட்டம் சம்பந்தமாக தமது கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கு வசதி செய்தல்.
II. நீதித்துறை அலுவலர்கள் தமது தொழில்சார் நிபுணத்துவத்தை விருத்தி செய்வதற்கும் தமது அறிவையும் திறமைகளையும் விருத்திசெய்வதற்கும் கூட்டங்கள், மகாநாடுகள், விரிவுரைகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளை ஒழுங்குசெய்தல்.
III. நீதி நிருவாகம் சம்பந்தமான பலதரப்பட்ட விடயங்களில் ஆராய்ச்சிப் பாடநெறிகளை நடாத்துவதுடன் நீதித்துறை அலுவலர்களுக்கு நூலக வசதிகள் மற்றும் கல்வி சம்பந்தமான பொருட்களை வழங்குதல்.
IV. நீதிதுறை அலுவலர்களுக்கு நூலக வசதிகளையும் ஏனைய கல்வி சார் பொருட்களையும் வழங்குதல்.

7.3.2 2017 தொடக்கம் 2017.09.30 வரையிலான **வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

| **இல.** | **பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்** | **இடம்** | **பங்குபற்றிய நீதிபதிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 01 | தொழில் நியாயசபைத் தலைவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி | மலேசியா, கோலாலம்பூர் | 28 |
| 02 | மேல்நீதிமன்ற நீதிபதிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சி | இந்தியாவின் போபல் நகரில் | 30 |
| 03 | மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சி | இந்தியாவின் புது தில்லி நகரில் | 29 |
| 04 | மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சி | இந்தியாவின் சன்டிகார் நகரில் | 30 |
| 05 | தொழில் நியாயசபைத் தலைவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி | இத்தாலி டியூரின் | 01 |
| 06 | தொழில் நியாயசபைத் தலைவர்களுக்கான பயிற்சி பயிற்சி நிகழ்ச்சி | இந்தியாவின் சன்டிகார் நகரில் | 33 |
| 07 | நீதிபதிகள் பயிற்சி நிகழ்ச்சி | இந்தியாவின் புது தில்லி நகரில | 30 |
| 08 | ஐக்கிய இராச்சியத்தின் லண்டன் நகரில் பயிற்சி நிகழ்ச்சி | ஐக்கிய இராச்சியத்தின் லண்டன் நகரில் | 10 |
| | | மொத்தம் | 191 |

7.3.3 2017.01.01 தொடக்கம் 2017.09.30 வரையிலான **தேசிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

அ)

| **பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்** | **பங்குபற்றிய நீதிபதிகள்** | **நிகழ்ச்சித் திட்ட எண்ணிக்கை** | **பங்குபற்றிய நீதிபதிகள் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| புதிதாக உள்வாங்கியவர்களுக்கான பயிற்சி | புதிய நியமனம் பெற்ற நீதிபதிகள் | 35 | 26 |
| சனிக்கிழமை பயிற்சி நிகழ்ச்சிகள் | மேல் நீதிமன்ற நீதிபதிகள்,மாவட்ட நீதிபதிகள், நீதவான் நீதிமன்ற நீதிபதிகள், புதிய நியமனம் பெற்ற நீதிபதிகள்,மற்றும் புதிய நியமனம் பெற்ற தொழில் நியாயசபைத் தலைவர்கள் | 26 | 1442 |
| வதிவிட பயிற்சி நெறிகள் | மேல் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதிபதிகள் | 03 | 150 |
| | **மொத்தம்** | **64** | **1618** |

ஆ) நீதிபதிகளுக்கான வியாபார தொடர்பாடல் திறன்கள் பாடநெறி

| **கருத்தரங்கு** | **பங்குபற்றியோர்** | **காலம்** |
|---|---|---|
| வாடிக்கையாக்கப்பட்ட வியாபார தொடர்பாடல் திறன்கள் பாடநெறி | 2 வது அணியினர் | 2016.12.03 - 2017.04.29 |
| வாடிக்கையாக்கப்பட்ட வியாபார தொடர்பாடல் திறன்கள் பாடநெறி | புதிய நியமனம் பெற்ற நீதிபதிகள் | 2016.11.19 - 2017.05.20 |
| வாடிக்கையாக்கப்பட்ட வியாபார தொடர்பாடல் திறன்கள் பாடநெறி | 3 வது அணியினர் | 2017.18.05 ஆரம்பிக்கப்பட்டுள்ளது |

இ) நீதிமன்றப் பதிவாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள்

| **இல.** | **தலைப்பு** | **பங்குபற்றியோர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | நீதிமன்ற நிருவாகம், கணக்கீட்டுப் படிமுறை மற்றும் தாபனவிதிக் கோவை | 65 நீதிமன்ற பதிவாளர்கள் |
| 2 | நீதிமன்ற நிருவாகம், கணக்கீட்டுப் படிமுறை மற்றும் தாபனவிதிக் கோவை | 65 நீதிமன்ற பதிவாளர்கள் |

ஈ) அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்ற நவீன தொழிநுட்பம் மற்றும் விஞ்ஞான ரீதியான உபாயங்கள் என்ற தலைப்பில் சகல மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மற்றும் நீதித்துறை அதிகாரிகளுக்குமான தொடர் செயலமர்வு.

- இரண்டு நீதிபதிகள் குழுக்களுக்காக அரச பகுப்பாய்வு திணைக்களத்தில் 15.09.2017, 22.09.2017 மற்றும் 29.09.2017 ஆகிய தினங்களில் இரண்டு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

### 7.3.4 2017.01.01 தொடக்கம் 2017.09.30 வரையிலான ஏனைய அடைவுகள்

1. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 6ஆம் மாடிக்கு பாதுகாப்பு அலாரம் முறைமை பொறுத்தப்பட்டது.
2. பின்வரும் வசதிகளை உள்ளடக்கி வெஸ்ட்லோ தரவுத்தளம் கொள்வனவு செய்யப்பட்டது.
3. 2017 ஆகஸ்ட் 11 ஆம் திகதி நீதிபதிகளின் நாளேடு அத்தியாயம் ஐஏ வெளியிடப்பட்டது.
4. 2017. ஆகஸ்ட் 11 ஆம் திகதி கௌரவ நீதிபதி சோசா அவர்களின் ஞாபகர்த்த உரை நிகழ்த்தப்பட்டது.
5. 2017 ஆகஸ்ட் 11 ஆம் திகதி யுஎஸ்எய்ட், சட்டத்தின் ஆட்சி கருத்திட்டம் மற்றும் பெல் சொலுஷன் ஆகியவற்றுடன் இணைந்து இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தினால் இலங்கையிலுள்ள நீதிபதிகளின் பயன்பாட்டுக்காக "நீதிபதிகளின் வலைப்பின்னல்" என்ற விரிவான சட்ட தரவுத் தளம் வெளியிடப்பட்டது.
6. 2017.08.16 ஆம் திகதி முதல் 2017.08.20ஆம் திகதி வரை நேபால் நாட்டின் கத்மன்டு நகரில் நடைபெற்ற கணனிக் குற்றம் மற்றும் இலத்திரனியல் சான்று என்ற தலைப்பிலான ஒரு விசேட பயிற்சியில் கௌரவ பிரதம நீதியரசர், இரு உயர் நீதிமன்ற நீதிபதிகள்,நான்கு மேன்முறையீட்டு நீதிபதிகள், நீதி சேவை ஆணைக்குழுவின் செயலாளர், மாவட்ட நீதிபதி.ஃ. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் கல்விசார் ஒருங்கிணைப்பாளர் பங்குபற்றினர்.

### 7.3.5 2017.01.01 முதல் 2017.09.30 வரை நிதியியல் முன்னேற்றம்

வெளிநாட்டு பயிற்சி-228-1-1

| விபரம் | அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப தொகை | 2017.09.30 ஆம் திகதி வரை செலவினம் மில். |
|---|---|---|
| செலவினத் தலைப்பு 228-1-1 | 110 மில்லியன் | 109,47 |

| விபரம் | 2017 ஒதுக்கம் (மில்) | 2017.09.30 வரை செலவினம் (மில்) | 2017.09.30 வரை செலவு வீதம் |
|---|---|---|---|
| மூலதனம் | 26.00 | 20.94 | 80 % |
| மீண்டெழுபவை | 10.00 | 3.53 | 36 % |
| **மொத்தம்** | **36.00** | **24.47** | **68 %** |

## 7.4 குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபை

### 7.4.1. அறிமுகம்

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரிகளினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்காக முறைசார் சட்ட வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் குற்றவியல் நீதிநிருவாக செயற்பாட்டை வலுப்படுத்துவதற்காக பாராளுமன்றத்தால் நிரைவேற்றப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபை 2016.01.08 ஆம் திகதி தாபிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தின் 12(ஆ) பிரிவின் பிரகாரம் அதிமேதகு சனாதிபதியினால் 2016.08.11 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் அதிகாரசபையின் முகாமைத்துவச் சபை நியமிக்கப்பட்டுள்ளது. இம்முகாமைத்துவ சபை நீதி அமைச்சின் செயலாளர், பொலிஸ் திணைக்களத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் செயலாளர், மகளிர் விவகார மற்றும் சிறுவர் விவகார விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்களின் அமைச்சுக்களின் செயலாளர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர், சட்டமா அதிபரின் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஒருவர், மற்றும் சிரேட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் பதவியை வகிக்கும் பொலிஸ்மா அதிபரின் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஒருவர் உள்ளடங்குகின்றவாறு பதவி வழியில் நியமனம் பெறுகின்ற ஏழு(7) உறுப்பினர்களைக் கொண்டும், குற்றவியல் சார்ந்த குற்றவியல் சட்டமுறைமையுடன், மனிதஉரிமைகள் மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் அல்லது மருத்துவதுறை சார்ந்த அல்லது அதனுடன் தொடர்புடைய தொழில்களில் கல்வி அல்லது தொழிற் தகைமைகளைப் பெற்றவர்கள் மற்றும் அனுபவமுள்ளவர்களில் சனாதிபதியினால் தெரிவு செய்து நியமிக்கப்படுகின்ற ஐந்து உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

### 7.4.2. குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையின் நோக்கங்கள்

1. குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகளையும் உரித்துடைமைகளையும் எடுத்துக் கூறலும், போற்றிக்காத்தலும் மற்றும் வலுவுறுத்ததலும், அத்தகைய உரிமைகளையும் உரித்துடைமைகளையும் மேம்படுத்துவத்கும், பாதுகாப்பதற்கும், வலுவுறுத்துவதற்கும் மற்றும் பிரயோகிப்பதற்குமான அமைப்பு முறையொன்றை ஏற்பாடு செய்தலும்;
2. குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் உதவியும் பாதுகாப்பும் வழங்குதல்;
3. குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர், அவர்களுக்கெதிராகத் தவறுகள் புரியப்பட்டமைக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆட்களிடமிருந்து நட்டஈடு பெறுவதனை இயலச் செய்தல்;
4. குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கான மீட்டளிப்பு, நட்டஈடு, இழப்புக்கான எதிரீடு மற்றும் புனர்வாழ்வு என்பனவுட்பட, அத்தகைய பலியாக்கப்பட்டோரினால் நிவர்த்தி பெறப்படுவதற்கு ஏற்பாடு செய்தல்;
5. குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகளையும் உரித்துடைமைகளையும் மேம்படுத்தும் மற்றும் பாதுகாக்கும் முகமாக அரச, நீதிமுறை அலுவலர்களினதும் பகிரங்க அலுவலர்களினதும், கடமைகளையும் பொறுப்புடைமைகளையும் எடுத்துக்கூறுதல்;

6. குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் எதிராகப் புரியப்படக்கூடிய தவறுகளையும் மற்றும் அத்தகைய தவறுகளைப் புரிகின்ற ஆட்களின் மீது விதிக்கப்படக்கூடிய தண்டனை வலுவளித்தல்களையும் விதித்தல்; அத்துடன்
7. குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினது பாதுகாப்புத் தொடர்பாக மிகச் சிறந்த செயல்முறைகளைக் கடைப்பிடிப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்தல்.

### 7.4.3. தத்துவங்கள் செயற்பாடு

சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இந்த அதிகார சபையின் தத்துவங்கள் மற்றும் செயற்பாடு பின்வருமாறு சுருக்கமாக எடுத்துக் காட்டலாம்.

**a. வலுப்படுத்தும் செயற்பாடு**

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரித்துக்கள் மற்றும் உரிமைகளை இனங்காணுதல், மேம்படுத்துதல் பாதுகாத்தல் மற்றும் அறியச் செய்தல்.

**b. அரை நீதிமன்ற செயற்பாடுகள்**

அவர்களது உரித்து மற்றும் உரிமைகள் மீறப்படுதல் பற்றிய முறைப்பாடுகளை புலனாய்வு செய்தல் மற்றும் பரிசோதனை செய்தல், அரச நிறுவனங்களுக்கு அரச அலுவலர்களுக்கு மற்றும் நீதிமன்றத்திற்கு விதப்புரைகளை சமர்ப்பித்தல்.

**c. நடைமுறைப்படுத்தும் செயற்பாடு**

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் பாதுகாப்பு வழங்குதல்.

**d. முன்னோடி மதியுரைகளை வழங்குதல் மற்றும் கண்காணிப்பு**

2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தில் தாபிக்கப்படுகின்ற மற்றைய விசேட கூறாவது தேசிய அதிகார சபையின் மதியுரை மற்றும் வழிக்காட்டலின் மீது இலங்கை பொலிஸின் கீழ் தாபிக்கப்படுகின்ற குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர் மற்றும் சாட்சிக்கார்களின் உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவு என அழைக்கப்படுகின்ற விசேட கூறாகும். பிரிவின் 19(2) ஆம் பிரிவின் கீழ் முகாமைத்துவ குழுவிற்கு பதவி வழியில் நியமிக்கப்படுகின்ற சிரேட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் கண்காணிப்பின் கீழ் செயற்படுகின்ற சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகரொருவரை இப் பிரிவிற்குப் பொறுப்பான தலைவராக நியமிக்கப்படுதல் வேண்டும்.

### 7.4.4. குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு மற்றும் சாட்சிக்கு சட்டதின் கீழ் பாதுகாப்புக்காக விண்ணப்பிக்க கூடிய நிறுவனங்கள்

1) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபை.
2) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரின் மற்றும் சாட்சிகளின் உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவு
3) நீதிமன்றம்
4) ஆணைக்குழு - (மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்சம் அல்லது ஊழல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு மற்றும் விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படுகின்ற விசாரணை ஆணைக்குழுக்கள் அல்லது சனாதிபதி விசேட விசாரணை ஆணைக்குழு,
5) பிரதேசத்தின் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரிக்கு

### 7.4.5. 2017.01.01 - 2017.09.30 வரையான முன்னேற்றம்

01. 2017.07.03 ஆம் திகதி குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகார சபையின் பணிப்பாளர் (சட்டம் மற்றும் சட்டத்தை வலுப்படுத்துதல்), பணிப்பாளர் (நிருவாகம், முகாமைத்துவம்) பணிப்பாளர் (கொள்கைகள்

மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்) மற்றும் முகாமைச்சபை செயலாளர் பதவிகளுக்காக அலுவலர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.

2. 2017.09.15 ஆம் திகதி அதிகார சபைகென முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பமற்ற) பதவிக்காக பத்து (10) அலுவலர்களும், அலுவலகப் பணியாளர் சேவை பதவிக்காக ஆறு (06) பேர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.

3. பணிப்பாளர் தலைமையதிபதி பதவிக்காக தகைமைகளைக் கொண்ட எந்தவொரு விண்ணப்பதாரகும் இல்லாதபடியால் அதிகார சபையின் முகாமைத்துவச் சபையால் 2017.08.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்வகையில் பதிற்கடமைப் புரியும் பணிப்பாளர் தலைமையதிபதி நியமிக்கப்பட்டார்.

4. 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் கட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் படி பொலிஸ்மா அதிபரால், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர் மற்றும் கட்சிகார்களுக்கு உதவி மற்றும் பாதுகாப்பு வழங்குதல் பணிக்கென தாபிக்கப்பட்டு பேணப்பட வேண்டிய "குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர் மற்றும் சாட்சிக்காரர்களின் உதவி மற்றும் பாதுகாப்பு பற்றிய பிரிவு" 2016.11.03 ஆம் திகதி இல.09 மிஹிந்து மாவத்தை, கொழும்பு 12 என்ற இடத்தில் தாபிக்கப்பட்டள்ளது. இப்பிரிவுக்கான தற்போதைய பணியாட்றொகுதி 27 ஆகும்.

5. 2017.01.01 ஆம் திகதி தொடக்கம் 2017.09.30 வரையிலான காலஎல்லைக்குள் பாதுகாப்பு வழங்குமாறு கோரப்பட்டு 25 முறைபாடுகள் இவ்வதிகாரசபைக்கு கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அதில் 16 முறைப்பாடுகள் எதிர் நடவடிக்கைகளுக்காக குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர் மற்றும் கட்சிகாரர்களின் உதவி மற்றும் பாதுகாப்பு பற்றிய பிரிவுக்கு ஆற்றப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர் மற்றும் சாட்சிக்கார்களுக்கு உதவி மற்றும் பாதுகாப்பு பிரிவுக்கு நேரடியாக 05 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதன்படி இக்கால எல்லைக்குள் பலியாக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிக்காரர்களிடமிருந்து கிடைத்துள்ள மொத்த முறைப்பாடுகள் 30 என்பதுடன் அதில் 13 முறைப்பாடுகள் ஆலோசணைக்காக மீண்டும் பொலிஸ்பிரிவினால் அதிகாரசபைக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவ்வனைத்து முறைப்பாடுகள் சம்பந்தமாகவும் எதிர் புலனாய்வ நடவடிக்கைகள்" குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர் மற்றும் சாட்சிக்காரர்களின் உதவி மற்றும் பாதுகாப்பு பற்றிய பிரிவு மற்றும் குற்றச்செயல்களுக்குப் "பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகக்காரர்களினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபையினால் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

### 7.4.6 2017.01.01 தொடக்கம் 2017.09.30 வரையிலான நிதி முன்னேற்றம்

| விபரம் | 2017 ஆம் ஆண்டின் ஏற்பாடுகள் (ரூ.மி) | 2017.09.30 திகதியின் செலவு (ரூ.மி) | 2017.09.30 திகதியின் நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 15 | 5.65 | 38% |
| மூலதனச் செலவினம் | 2 | 1.49 | 75% |
| **முழுமொத்தம்** | 17 | 7.14 | 42% |

## 7.5 இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையம்

### 7.5.1 அறிமுகம்

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையமானது 2005 ஆம் ஆண்டில் 35ம் இக்க சட்டத்தால் திரத்தப்பட்ட 2000ம் ஆண்டிலன் 44ம் இலக்க இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையச்சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட நிறுவனமொன்றாகும். சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையத்தைமுகாமைசெய்வதற்காக அத்தடன் மத்தியஸ்தம் மற்றம் நடுத்தீர்ப்பு சேவைகளைவழங்குவதற்காக இந்நிலையம் கடப்பாடு உடையதாக உள்ளது. நிலையத்தின் நிருவாக மற்றும் முகாமை அலுவல்கள் முகாமைச் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு நீதி அமைச்சரால் 2017 சனவரி மாதத்திலிருந்து வலுவிலுள்ளவாறு நியமிக்கப்பட்ட புதிய முகாமைச் சபை உறுப்பினர்கள் பின்வருமாறு.

01. இலங்கை வர்த்தகசபை இலங்கை தேசிய வர்த்தக சபை இங்கைவர்த்தக மற்றும் கைத்தொழிற் சபை சம்மேளனம் மற்றும் இலங்கை தேசிய கைத்தொழிற்சபை ஆகிய ஒவ்வொரு நிறுவனத்தால் பெயர் நியமனம் செய்யும்ஒருவா வீதம்.
02. நீதி அமைச்சரால் பெயர் நியமனம் செய்யும் உறுப்பினர் ஒருவர்.
03. வர்த்தக மற்றும் வாணிப அமைச்சரால் பெயர் நியமனம் செய்யும் உறுப்பினர் ஒருவர்

### 7.5.2 வர்த்தக மத்தியஸ்த நிலையத்தின் பொறுப்பு மற்றும் செயற்பாடு

அ. வாத்தக பிணக்குகளைத்தீர்த்தல் மற்றும் நடுத் தீர்ப்புக்காக மத்தியஸ்தம் செய்தல் மற்றும் ஒற்றுமைப்படுத்தல் விரிவாக எற்றுக்கொள்வதை மேம்படுத்தல்.

ஆ. மத்தியஸ்தம் செய்தல் மற்றும் ஒற்றுமைப்படத்தல் மூலம் வர்த்தக பிணக்குகளைத் தீர்த்துக் கொள்வதற்காக திறந்தவர்களை ஊக்குவித்தல்

இ. மத்தியஸ்தம் செய்தல் மற்றம் ஒற்றுமைப்படுத்தல் மூலம்

- I. வர்த்தக பிணக்குகளைத நடுத்தீர்ப்புச் செய்தல்
- II. வாத்தக விடயங்களில் திறந்தவர்களிடையே எழுகின்ற கருத்து வேறுபாடுகளை ஒழித்தல்

### 7.5.3 2017.01.01 முதல் 2017.09.30 வரையான முன்னேற்றம்

அ. முகாமைச் சபையை நியமித்தல்

ஆ. பணியாட்தொகுதியை நியமிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் நீதி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இ. செயற்பாட்டு நிகழ்ச்சி திட்டம்

I. நிலையத்தின் அலுவலகத்தை ஸ்தாபிக்கும் வரை சபையால் பின்வரும் பூர்வாங்க நிகழ்ச்சித் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் மத்தியஸ்த்தின் முதன்மையான அம்சங்கள் தொடர்பான தனியார் துறைக்கு புரிந்துணர்வை அளிக்கும் நிகழ்ச்சி திட்டங்களை நடாத்துதல்.
- வெற்றிகரமாக பயிற்சியை முடித்துக் கொண்ட மத்தியஸ்தர்களின் சேவை நிலையத்திற்கு பெற்றுக் கொள்வதற்காக சிங்கப்பூர் மத்தியஸ்த நிலையத்தின் வளத்துறை ஆட்களால் மத்தியஸ்த்தர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களை நடாத்துதல்.
- நிலையத்தின் தற்போதைய விதிகள் 2001ல் விதிக்கப்பட்டுள்ளதால் அவ் விதிகளை மீள்நோக்குதல்.

- மத்தியஸ்த உட்பிரிவுகளின் வணிக ஒப்பந்தங்களை உள்ளடக்கி வரைபிணை தயாரித்தல் மத்தியஸ்த்தத்தில் இது மிகமுக்கியமானதும் கட்டாயமானதுமான ஒன்றாக குறித்துரைக்கப்படுகிறது.

ii) கீழ்வரும் புதிநடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது

1. பயிற்சியாளர்களை சிங்கப்பூர் மத்தியஸ்த நிலையத்தின் உதவியுடன் மதிப்பீடு செய்தல்.
2. மேலும் தனியார் துறையினருக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
3. மத்தியஸ்த நிலையத்தில் பயிற்சியாளர்களை மதிப்பீடுசெய்தல் மற்றும் செயற்திட்டங்களில் குறிப்பிடப்பட்ட வேலைகள் போன்றவற்றை நிறைவேற்றி நிலையத்திணை ஆரம்பிப்பதற்கு சிங்கப்பூர் மத்தியஸத்தினால் பயிற்றுவிக்கப்பட்ட பயிற்சியாளர்களை பயன்படுத்துவதன் மூலம் அவர்களின் அறிவினையும் திறன்களையும் வளர்த்தல்.
4. மத்தியஸ்தர்களுக்கான தொடர் பயிற்சிகளை வழங்குதல்.
5. அலுவலகர்களுக்கான பயிற்சிகளை வழங்கல்.

தேவையான உத்தியோகத்தர்களை நியமித்ததன் பின்பு மத்தியஸ்த சேவைகளை தொடங்குதல்.

### 7.5.4 2017.01.01 தொடக்கம் 2017.09.30 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | 2017 ம் ஆண்டிற்கான ஒதுக்கம் (ரூபா மில்) | 30.09.2017 ற்கான செலவு (ரூபா மில்) | 30.09.2017 நிதி ரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 8.0 | 0.23 | 2.87% |
| மூலதன செலவினம் | 7.5 | - | 0% |
| **மொத்தம்** | **15.5** | **0.23** | **1.48%** |

# 08 நீதிமன்றங்கள்

இவ் அமைச்சின் கீழ் வழங்கப்படுகின்ற நிதி ஏற்பாடுகளில் பின்வரும் நீதிமன்றங்கள் உள்ளடங்குகின்றன.

- *உயர் நீதிமன்றம்*
- *மேன்முறையீட்டு நீதிமன்றம்*
- *மேல் நீதிமன்றங்கள்*
- *வர்த்தக மேல் நீதிமன்றம்*
- *மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள்*
- *மாவட்ட நீதிமன்றங்கள்*
- *நீதிவான் நீதிமன்றங்கள்*
- *தொழில் நியாய சபைகள்*
- *காதி நீதிமன்றங்களும் காதி மேன்முறையீட்டு சபையும்*

உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், 21 மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள், 32 மேல் நீதிமன்றங்கள், வர்த்தக மேல் நீதிமன்றம், 51 மாவட்ட/ நீதிவான் நீதிமன்றங்கள், 31 மாவட்ட நீதிமன்றங்கள், 49 நீதிவான் நீதிமன்றங்கள், 2 சிறுவர் நீதிவான் நீதிமன்றங்கள் 25 சுற்று நீதிவான் நீதிமன்றங்கள், 39 தொழில் நியாய சபைகள் 65 காதி நீதிமன்றங்கள் சம்பந்தமாக கணக்குப் பொறுப்புக்கள் அமைச்சினால் கையாளப்படுகின்றன. 24 மேல் நீதிமன்ற கணக்கீட்டு நிலையங்கள் மற்றும் தொழில் நியாய சபை தொடர்பிலான. செலவினங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

## 8.1 உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்

### 8.1.1 அறிமுகம்

இலங்கை நீதிமுறைமையில் அதியுயர்ந்த நீதிமன்றம் உயர்நீதிமன்றமாகும். அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் கௌரவ பிரதம நீதியரசர் உட்பட 11 உயர்நீதிமன்ற நீதிபதிகள் உயர் நீதிமன்றத்திடம் கிடைக்கப்பெறும் எல்லா விண்ணப்பங்களையும் விசாரிக்கின்றனர்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் மூலம் உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் பின்வருமாறு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

- அடிப்படை உரிமைகள் பற்றிய நியாயாதிக்கம்
- இறுதி மேன்முறையிட்டு நியாயாதிக்கம்
- மதியுரை நியாயாதிக்கம்
- தேர்தல்கள் மனுக்கள் (சனாதிபதி தேர்தல்) பற்றிய நியாயாதிக்கம்
- எந்தவகையினதும் பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறல் பற்றிய நியாயாதிக்கம்
- பாராளுமன்ற சட்டத்தால் விதிக்கக்கூடிய பிற விடயங்கள் பற்றிய நியாயாதிக்கம்

உயர் நீதிமன்றம் அதன் செயல்பாடுகளை முன்னெடுக்க உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் உதவுகிறது. இதற்கான நிதியை நீதி அமைச்சு செலவினத்தலைப்பு 234 இன் மூலம் வழங்குகிறது. உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகத்தின் பணிகளாவன:

- உயர் நீதிமன்றப் பதிவுகளைப் பராமரித்தல்.
- அமர்வுகள் மற்றும் விண்ணப்ப அட்டவணைகளை ஒழுங்கு செய்தல்.
- நீதிமன்ற உத்தரவுகளையும் தீர்ப்புகளையும் பதிவு செய்தல்.
- உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணிகளை அனுமதித்தல்

- மேன்முறையீட்டு நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் வழக்கேடுகளைத் தயாரித்தலும் சட்ட செலவுகளை மதிப்பீடு செய்தலும்.

### 8.1.2 2017.01.01 தொடக்கம் 2017.09.30 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்

| வகை | 2017.01.01 இல் நிலுவையி-லுள்ள வழக்குகள் | 2017.01.01 2017.09.30 இல் உள்ள பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 2017.01.01 2017.09.30 இல் உள்ள மொத்த வழக்குகள் | 2017.01.01 2017.09.30 இல் முடித்துக் கொள்ளப்பட்ட வழக்குகள் | 2017/09.30 இல் நிலுவையி-லுள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|---|
| அடிப்படை உரிமை தொடர்பான விண்ணப்பங்கள் | 912 | 343 | 1255 | 264 | 991 |
| விசேட அனுமதி விண்ணப்பங்கள் | 482 | 220 | 702 | 165 | 537 |
| பாராளுமன்ற சட்டமூலங்கள் பற்றிய உயர் நீதிமன்ற கட்டளைகள் | - | 34 | 34 | 33 | 01 |
| மேன்முறையீட்டு வழக்குகள் | 420 | 180 | 600 | 136 | 464 |
| உ.நீ வ.மே.நீ மேன்முறையீடு | 197 | 25 | 222 | 27 | 195 |
| மேல்நீதிமன்ற அனுமதி விண்ணப்பங்கள் | 152 | 93 | 245 | 48 | 197 |
| எழுத்தாணை விண்ணப்பங்கள் | 08 | - | 08 | - | 08 |
| மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள் | 1326 | 424 | 1750 | 308 | 1442 |
| மீளாய்வு வழக்குகள் | 16 | 06 | 22 | 06 | 16 |
| அரசியல் யாப்பை வரைவிலக்கணப்படுத்துவது தொடர்பான வழக்குகள் | - | - | - | - | - |
| நானாவித வழக்குகள் | 19 | - | 19 | 02 | 17 |
| TAB APPEAL | 01 | - | 01 | - | 01 |
| SC Special | 12 | - | 12 | 02 | 10 |
| SC /Contempt | 21 | 05 | 26 | 02 | 24 |
| **மொத்தம்** | **3,566** | **1,330** | **4,896** | **993** | **3,903** |

### 8.1.3 2017.01.01 தொடக்கம் 2017.09.30 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | 2017 ம் ஆண்டிற்கான ஒதுக்கம் (ரூபா மில்) | 30.09.2017 ற்கான செலவு (ரூபா மில்) | 2017-09-30 நிதி ரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 103.26 | 69.03 | 67% |
| மூலதன செலவினம் | 6.50 | 2.88 | 44% |
| **மொத்தம்** | **109.76** | **71.91** | **66%** |

## 8.2 மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்

### 8.2.1 அறிமுகம்

இலங்கை அரசியல் அமைப்பினால் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு முதன்நிலை நீதிமன்றங்கள், தொழில்நியாய சபைகள் மற்றும் பிற நியதிச்சட்ட நிறுவனங்களின் தீர்ப்புகள் தொடர்பான மேன்முறையீட்டு மற்றும் மீளாய்வு நியாயாதிக்கம் உள்ளது. அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் ஆணைகள் பற்றிய நியாயாதிக்கமும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு உரியதாகும். 2002 ஆம் ஆண்டின் 25ம் இலக்க குற்றவியல் விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்புச் சட்டம் மற்றும் 2000ம் ஆண்டின் 39ம் இலக்க குடியியல் மற்றும் வர்த்தக விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்புச் சட்டத்தின் கிழ் அச்சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு தேவையான கட்டளைகள் மற்றும் பணிப்புகளை மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்குகிறது. தேர்தல் மனுக்களும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்றன. எந்தவொரு முதன்நிலை நீதிமன்றத்தினதும் அல்லது தொழில்நியாய சபைகளினதும் அல்லது ஏதாவது பிற நியதிச்சட்ட நிறுவனங்களின் வழக்கு அறிக்கைகளை கண்காணிப்பு செய்வதற்கும் பரிசோதனை செய்வதற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு தத்துவமும் அதிகாரமும் உள்ளது.

### 8.2.2 2017.01.01 முதல் 2017.09.30 வரையிலான வழக்கு விசாரணைகளின் செயலாற்றுகை

| வழக்கு வகை | 2017/01/01 இல் நிலுவையி-லுள்ளவை | 01.01.2017-30.09.2017 பதிவு செய்யப் பட்டவை | 01.01.2017-30.09.2017 முடிவெடுக்கப் பட்டவை | 30.09.2017 இல் நிலுவையி-லுள்ளவை |
|---|---|---|---|---|
| ஆணை விண்ணப்பங்கள் | 1,505 | 313 | 273 | 1,545 |
| மேன் நீதிமன்றமுறையீடுகள் (குற்றவியல்) | 1,057 | 195 | 150 | 1,102 |
| (றெம்) | 4 | - | - | 4 |
| மாகாண மேல் நீதிமன்ற மேன்முறையீடுகள் | 1,003 | 147 | 161 | 989 |
| குடியியல் மேன்முறையீடுகள் | 640 | 120 | 119 | 641 |
| மேல் நீதிமன்ற மீளாய்வு விண்ணப்பங்கள் | 358 | 148 | 136 | 370 |
| மீளாய்வு (குடியியல்) மற்றும் மேன்முறையீட்டு அனுமதி விண்ணப்பங்கள் | 64 | 38 | 30 | 72 |
| வரி மேன்முறையீட்டு அனுமதி TAX | 136 | 21 | 10 | 147 |
| ஏனைய விண்ணப்பங்கள் | 70 | 49 | 43 | 76 |
| **மொத்தம்** | **4,837** | **1,031** | **922** | **4,946** |

### 8.2.3 2017.01.01 தொடக்கம் 2017.09.30 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | 2017 ம் ஆண்டிற்கான ஒதுக்கம் (ரூபா மில்) | 30.09.2017 ற்கான செலவு (ரூபா மில்) | 30.09.2017 நிதி ரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 56.61 | 40.51 | 72% |
| மூலதன செலவினம் | 5.16 | 2.25 | 44% |
| **மொத்தம்** | **61.77** | **42.76** | **69%** |

## 8.3 காதி நீதிமன்றங்களும் காதி மேன்முறையீட்டு சபையும்

#### 8.3.1 அறிமுகம்

காதி நீதிமன்றம் என்பது 1951ம் ஆண்டு 13ம் இலக்க சட்டத்தின்கீழ் முஸ்லீம் விவாக மற்றும் விவாகரத்துதொடர்பாக உருவாக்கப்பட்ட விசேட நீதிமன்றமாகும் இலங்கை முழுவதும் 65 காதி நீதிமன்றங்கள் உள்ளன. அந்தச் சட்டத்தின் செயற்பாடுகளுக்கு அமைய காதி நீதிமன்றங்களினால் கொடுக்கப்படும் தீர்ப்பு அல்லது ஆணைசம்பந்தமாக அதிருப்தியுரும் கட்சிக்காரர்கள் மேல்முறையீடு சட்டத்தின் 12 (1)ம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டன. காதி நிதிமன்றமொன்றின் மேன்முறையீட்டை அல்லது மீள்பரிசீலனை செய்வதற்கு அச்சட்டத்தின் பிரகாரம் மேன் முறையீட்டு நீதிமன்றமாக இருப்பது காதி மேன்முறையீட்டுச் சபையாகும், இந்த காதிசபையில் தலைவர் உட்பட 5 உறுப்பினர்கள் உள்ளனர்.

நீதிச்சேவை ஆணைக்குழு 65 காதி நீதிமன்றங்களுக்கும் காதிநீதிபதிளையும் காதிகள் சபைக்கு தலைவர் உட்பட 5 உறுப்பினர்களையும் நியமிக்கின்றது.

### 8.3.2 காதி நீதிமன்றங்கள்

| | | |
|---|---|---|
| அட்டாளைச்சேனை | கல்முனை | பஹத்த-ஹேவாஹெட்ட |
| அக்கறைப்பற்று | கல்ப்பிட்டி | பாணந்துறை |
| அக்குரணை | களுத்துறை | பொலன்னறுவை(பாணம்பத்துவ) |
| அநுராதபுரம் | கண்டி | பொத்துவில் |
| அவிஸாவளை | காத்தான்குடி (மண்முனைப்பற்று) | புல்மோட்டை |
| பதுளை | கேகாலை | புத்தளம் & சிலாபம் |
| பலப்பிட்டிய & எல்பிட்டிய | கிண்ணியா | இரத்தினபுரி |
| பேருவளை | குளியாபிட'டி | அகதிகள் - (கல்பிட்டி/ புத்தளம்) |
| போரா சமூகம் | குருநாகல் | சாய்ந்தமருது |
| பியகம | மாஹெோ | சம்மாந்துறை |
| கொழும்பு கிழக்கு | மன்னார் | தம்பலகாமம் & கந்தளாய் |
| கொழும்பு வடக்கு | மாத்தளை | தங்காலை |
| கொழும்பு தெற்கு | மாத்தறை | திருகோணமலை |
| கொழும்பு மேற்கு | மாவனல்லை | தும்பனை |
| ஏறாவூர் | மேமன் சமூகம் | உடபலாத்த கம்பளை |
| காலி | மொனராகலை | உடதலாவின்ன |
| கம்பஹா (திகாரிய) | மூதூர் | உடுநுவர |
| அம்பாந்தோட்டை | நாவலப்பிட்டி | வாழைச்சேனை |
| ஹாரிஸ்பத்துவ & பூஜாபிட்டிய | நீர்கொழும்பு | வவுனியா |
| ஹற்றன் | நிந்தவூர்பற்று | யட்டிநுவர |
| ஹோரன | நுவரெலியா | யாழ்ப்பாணம் |
| இறக்காமம் | ஓட்டமாவடி | |

### 8.3.3 காதிமேன்முறையீட்டு சபையின் முன்னேற்றம் (2014 - 2017)

| ஆண்டு | மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | முடிவுறுத்தப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | நிலுவையிலுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2014 | 244 | 60 | 184 |
| 2015 | 226 | 112 | 154 |
| 2016 | 286 | 98 | 188 |
| 2017.09.30 வரை | 240 | 70 | 170 |

### 8.3.4 காதி நீதிமன்றங்களின் முன்னேற்றம் (2014-2017)

| ஆண்டு | மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | முடிவுறுத்தப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | நிலுவையிலுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2014 | 13,479 | 8,479 | 5,005 |
| 2015 | 12,042 | 7,032 | 5,010 |
| 2016 | 15,896 | 8,064 | 7,832 |
| 2017.09.30 வரை | 12,337 | 5,717 | 6,620 |

## 09 தொடர்புடைய நிறுவனங்கள்

### 9.1 இலங்கைச் சட்டக்கல்லூரி

#### 9.1.1 அறிமுகம்

சட்டக் கல்வியை முகாமைத்துவம் செய்யும் முகமாக, கூட்டிணைக்கப்பட்ட சட்டக் கல்விப் பேரவையின் சட்டம் 1900 இலக்கம் 02ன் பிரகாரம், இலங்கை சட்டக்கல்லூரி செயற்படுத்தப்படுகின்றது. கூட்டிணைக்கப்பட்ட சட்டக் கல்விப் பேரவையின் தலைமை பொறுப்பை மதிப்பிற்குறிய பிரதம நீதியரசர் வகிப்பதோடு, சட்ட மா அதிபர், நீதி அமைச்சின் செயலாளர், மன்றாடியார் மற்றும் பிரதம நீதியரசரினால் முன்மொழியப்படும் இரண்டு உயர் நீதிமன்ற நீதியரசர்கள், மதிப்பிற்குரிய நீதி அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற ஆறு உறுப்பினர்கள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திலிருந்து முன்மொழியப்படுகின்ற இருவர் அடங்கலாக பேரவை அமையப்பெறுகின்றது.

இலங்கை சட்டக் கல்லூரி 3½ வருட கால பாடத்திட்டத்தினை நடத்துவதோடு, ஒவ்வொரு வருட இறுதியிலும் முதன்மை நிலை, இடை நிலை, இறுதி நிலை மாணவர்களுக்கு பரீட்சைகளை நடாத்துகின்றது. இந்தப் பரீட்சைகளை நிறைவு செய்ததன் பின்னர் இவர்கள், குறைந்தது 08 வருட கால அனுபவத்தினைக் கொண்ட சட்டத்தரணி ஒருவரிடத்தில் 06 மாத காலம் பயிலுனராக சேவை செய்தல் வேண்டும். இதன் பிறகு இவர்கள் சட்டத்தரணிகளாக நியமிக்கப்படுவதற்கு தகுதி பெறுவர்.

இலங்கை சட்டக் கல்லூரி ஒரு சுய வருமான தாபனமாக செயற்படுகின்றது. அதேபோல் வருகைதரு விரிவுரையாளர்களாக சட்டத்துறையில் பணிபுரிகின்ற மற்றும் கம்பனிகளில் தொழில் புரிபவர்கள் உள்வாங்கப்படுவர். அவர்கள் ஜனாதிபதி சட்டத்தரணிகளாகவோ அல்லது தேர்ச்சிமிக்க வழக்கறிஞர்களாகவோ காணப்படுவர்.

#### 9.1.2 01.01.2017 தொடக்கம் 30.09.2017 வரையிலான முன்னேற்றம்

2017 ஏப்பிரல் பரீட்சைக்காக 1,685 மாணவர்கள் தோற்றியிருந்தனர். 2017 கல்வியாண்டில் 2017.09.30 திகதி வரை உள்நாட்டு, வெளிநாட்டு சட்டப் பட்டதாரிகள் மற்றும் சட்டக் கல்லுரி நுழைவுப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் உள்ளடங்களாக 1,080 பேர் பாடநெறிக்காக அனுமதிக்கப்பட்டனர்.

2018ம் ஆண்டு மாணவர் அனுமதிக்காக, பரீட்சைகள் திணைக்களத்தினால் போட்டிப் பரீட்சையொன்று 2017.09.30ம் திகதி நடாத்தப்பட்டது. இப் பரீட்சைக்காக விண்ணப்பதாரிகள் 5,795 பேர் விண்ணப்பித்திருந்தனர்.